Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර ஜூலை 30-ஆக. 05, 2000

வாரமலர்


# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 367

## தாயகக் கோட்பாட்டின் தார்ப்பரியங்கள்



## விந்தியாவின் வீராப்பு



## சாதனை படைத்த பிளேயர்

## ஆட்டோ சாரதிக்கு நடிகர் 'பளார்'

## தந்தையின் பாதையில் தனயன் கபிலன்

# முரசம்

## அக்கறையில்லை!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

தீவுத் திட்டத்தில்
தமிழ்த் தரப்பினரோடு
இணங்கிய பல விடயங்களை
மாற்றுவதற்கும்
நீக்குவதற்கும்,
விரும்பத் தகாத விடயங்களைப்
புகுத்துவதற்கும்
ஐக்கிய தேசியக் கட்சியின்
நிர்ப்பந்தமே காரணமென
ஜனாதிபதி கூறியுள்ளார்.

இப்படிக் கூறியுள்ளதால்
தமிழ்த் தரப்பின்
அபிலாஷைகளை விட
எதிர்க்கட்சியின்
நிர்ப்பந்தங்களுக்கே
அதிக முக்கியத்துவம் அளிக்கும்
மனோபாவம்
தம்மிடம் நிலவுவதை
ஒத்துக் கொள்ள
வேண்டியவராகிறார் ஜனாதிபதி.

இதே போலத்தான்
பண்டா–செல்வா
ஒப்பந்தத்தில் ஏற்பட்ட
தமிழ்த் தரப்புடனான
இணக்கப்பாடுகள்
எதிர்க்கட்சியின்
நிர்ப்பந்தத்தாலும்
சிங்களப் பேரினவாத
சக்திகளின் எதிர்ப்பாலும்
அன்றைய பிரதமர்
பண்டாரநாயக்காவால்
அப்படியே கிழித்தெறியப்பட்டன.

கிழித்தெறிந்தவர்கள்
அதற்குப் பதிலாக
தமிழர்களை மிதிக்கின்ற
தனிச்சிங்களச் சட்டத்தையே
அமுலாக்கியதானது
கடந்தகால
வரலாற்றுக் கொடுமை.
அதே வரலாறு
மீண்டும் திரும்புமா என்பதே
இப்போது எழுந்துள்ள
புதிய அச்சம்.
இது குறித்து
எதிர்க்கட்சியான
ஐ.தே.க. கூறும் கருத்து
மேலுமொரு சந்தேகத்தை
ஏற்படுத்துவதாயுள்ளது.

அரசாங்கத்துடன்
எதிர்க்கட்சியான தாம்
இணக்கம் கண்ட விடயங்களில்
எதுவித நிர்ப்பந்தத்தையும்
தாம் செலுத்தவில்லையென்றும்
தமது கருத்துக்களை
ஆலோசனைகளாகவே
முன்வைத்ததாகவும்
இருதரப்பும் இணங்கியவையே
இணக்கங்களாக விளைந்ததாகவும்
ஐ.தே.க. கூறுகிறது.

அப்படியானால்
அரசாங்கத் தரப்பினர்
தமிழ்தரப்பினர் கோரியவற்றில்
வழங்க விரும்பாத
விடயங்களைத்
தாமும் சேர்ந்து
மாற்றியமைத்துவிட்டு
எதிர்க்கட்சியின் மீது மட்டும்
பழியைச் சுமத்திவிட
முனைகின்றனர் என்றே
அர்த்தப்படுகிறது.

அரசாங்கம் தான்
நேர்மையானதென்றால்
எதிர்க்கட்சியின் நிர்ப்பந்தங்கள்
தமிழ்மக்களின் அபிலாஷைகளைப்
பாதிக்கும் என்பதைச்
சுட்டிக்காட்டி
வாதாடியிருக்க வேண்டும்.

அது மட்டுமன்றி
தமிழ்த் தரப்பிடம்
சம்மதம் பெறாமல்
எதிர்க்கட்சியின்
விருப்பத்துக்கேற்ற
எந்த மாற்றத்துக்கும்
இணங்கியிருக்கக் கூடாது.

ஆனால் பதிலாக,
எதிர்க்கட்சியுடன் இணக்கம்
கண்டுவிட்டதாகப் பறைசாற்றிவிட்டு
அந்த மாற்றங்களையே
தமிழ்த்தரப்பினருடன் பேசுவதற்கு
மீண்டும் எடுத்து வருகிறார்கள்.

இதே வேளை
தமது கைகள் சுத்தமெனப்
பாசாங்கு காட்ட முனையும்
ஐ.தே.க.வும்
தீர்வுத் திட்டத்துக்குத்
தாம் முன்வைத்த
திருத்தங்களும் ஆலோசனைகளும்
தமிழ்த் தரப்பினைத்
திருப்திப் படுத்துமாவென
அக்கறைப்படவில்லை.
அந்த அக்கறை இருந்தால்
தமது கருத்துக்களை
தமிழ் தரப்புடன்
ஆலோசித்து விட்டே
தீர்வுத் திட்டத்தை
முன்வைத்திருப்பர்.


இன்னும் கூடக்
காலம் பிந்திவிடவில்லை.
தமிழ்த் தரப்புடன்
மீண்டும் ஆலோசிக்கப்படும்
தீர்வுத்திட்டத்தில்
தமிழர்களின் அபிலாஷைகளை
அரசாங்கமும் எதிர்க்கட்சியும்
சேர்ந்தே ஏற்றுக் கொள்ள
இன்னும் வாய்ப்புள்ளது.

ஆனால் ஐ.தே.க.
தமிழ்த்தரப்புடன் பேசியபின்
மகாநாயக்கர்களுடனும்
பேச வேண்டுமெனக்
கூற ஆரம்பித்துள்ளதானது
தன்மீது பழிவிழாமல்
தீர்வு முயற்சியைக்
குலைத்துவிட முயலும்
முயற்சியாகவல்லவா
தெரிகிறது...?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்



## விக்கிரக வழிபாடு

இக்கலியுகத்தில் திருக்கோயில் தரிசனத்தால் நாம் துன்பங்கள் நீங்கப் பெறுகின்றோம். இன்பத்தைக் காண்கின்றோம். ஆலய தரிசனத்தால் நாம் செய்துள்ள முற்பிறப்பு தீவினைகள் அகன்று, இம்மையில் நமக்கு நற்பயன்கள் கிடைக்கின்றன. சர்வபூத, பிரேத, பிசாசங்களால் ஏற்படும் பயமும், வியாதிகளும் நம்மையணுகாது சர்வ சித்திகளுமுண்டாகும். ஆகமங்களும், சாத்திரங்களும் ஆலயதரிசனமே ஆன்மீக வழிபாட்டிற்கு அருமையான மார்க்கம் என்று அருளப்பட்டுள்ளன.

கடவுளின் சொரூபத்தை முற்றிலும் நம்மால் உணரமுடியாது. விக்கிரக வழிபாட்டில்தான் உணரமுடியும் என்பதற்காகவே ஆலயம் செல்கின்றோம். பசுவின் உடல் முழுவதும் இரத்தமிருந்தாலும் 'மடியின் வழியாகத் தான் பாலைப் பெற முடியும்' அதேபோல் பரம்பொருளான பகவான் அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்து இருந்தாலும், அப்பெருமானை 'ஆலயத்திலுள்ள விக்கிரகத்தின் மூலமாகவே' நம்மால் தரிசிக்க முடியும். அருளைப் பெறமுடியும்.

எனவே ஆண்டவனை நாடிச் சென்று ஆலய தரிசனம் செய்து அமைதியைப் பெற்று இக் கலியுகத்தின் மாயையில் இருந்து விடுபட்டு வாழ்வின் பயனைப் பெறுவோமாக.

அ.அரசரெத்தினம்–சேனையூர் 06.

## சன்மார்க்கம் கூறும் சமாதானம்

புனித இஸ்லாம் ஒருவருக்கொருவர் சண்டையிடாது பரஸ்பரம் ஒன்று பட்டு சமாதானமாக வாழ்வதையே வலியுறுத்துகிறது. ஆனால் சமாதானம் என்பது நம்மை விட்டுத் தூர எங்கேயோ சென்று கொண்டிருக்க.-சண்டைகளும் பிளவுகளும் நம்மை நாடி வந்துகொண்டே இருக்கின்றன. இருந்தும் நம்மிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளை சமரசம் செய்வதற்கு பலர் முன்வரும் வேளை அதனை சீர்குலைக்க முற்படுபவர்களும் நம்மிடையே இல்லாமலில்லை.

"தொழுகை, நோன்பு, தர்மம், இவைகளுக்கு ஒப்பான செயலொன்றை உங்களுக்குக் கூறட்டுமா?" என நபி(ஸல்) அவர்கள் தோழர்களிடம் கூற "ஆம் கூறுவீர்களாக" என்று தோழர்கள் சொன்னார்கள். "அது, மனிதர்கள் ஒருவருக்கொருவர் சமாதானமாக வாழ்வதாகும். ஏனெனில், நாவிதரின் கத்தி முடியைச் சிரைப்பதுபோல மனிதர்களிடையே ஏற்படும் பிளவு நன்மையைப் போக்கிவிடுகிறது" (அல்ஹதீஸ்)

நிச்சயமாக மனிதர்கள் எல்லோரும் தமக்கிடையே சகோதரர்களே; எனவே உங்களுடைய சகோதரர்களுக்கு இடையே பிணக்குகள் ஏற்படின் சமரசம் செய்து வைப்பீர்களாக. நீங்கள் அருள்புரியப்படுவீர்கள். (அல்குர் ஆன் 49:10)

நன்றி : "உலக ஒற்றுமைக்கு ஒரே வழி இஸ்லாம்"

வை.எம்.தாஹிர்கரீம்–கல்முனை 06.

## இயேசு கிறிஸ்து நீதியுள்ள நியாயாதிபதி

லூக்கா 18:2–7

ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான். அவன் கடவுளுக்கு பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான்.


அந்த பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள். அவள் அவனிடத்தில் போய் "எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயம் செய்ய வேண்டும்" என்று விண்ணப்பம் பண்ணினாள்.

வெகுநாள்வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன் 'நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால் இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ் செய்ய வேண்டும், என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

கர்த்தர் நம்மை பார்த்து கேட்கிறார். அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதை சிந்தித்துப் பாருங்கள். அந்தபடியே தேவன் நம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயம் செய்வார். சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும். தேவன் எங்கள் தேவையை சந்திப்பார்.

வி.கமலா–கல்கிசை.

## கவிதைப் போட்டி இல.367



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 05.08.2000

கவிதைப் போட்டி இல.367
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.364

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### பரிசுக்குரிய கவிதை

### நிஜங்கள்

நீங்கள் தேடும்
அமைதி
நிச்சயமாய் வரும்!
புல்வெளியில் நிற்கும்
நீங்களெல்லாம்
புதைக்குழிக்குச்
சென்றபின்னர்!

ஆ.ஜெகதீஸ்வரன்–
புசல்லாவ.

### அண்ணன் வருவான்!

தூரத்திலே வெடிச்சத்தம்...
ஊருக்குள்ளே ரவுண்டப்
வேலைக்குப்போன அண்ணன்
வீட்டிற்கு வரவில்லை....!
போன வழி பார்த்துப் பார்த்து
ஆவலோடு காத்திருக்கும்....
அன்பு கொண்ட தங்கைகள்.

என்.எல்.முஸம்மில்-புதிய காத்தான்குடி-06.

### இன்னுமொரு........?

பேய் உறங்கும் சாமத்தில்
பெரியதொரு வெளிச்சம் பார்...!
குழிகளைக் கிண்டிப் புதைக்கிறார்களா?
அல்ல புதைத்த குழிகளைக் கிண்டுகிறாரா?
இன்னுமொரு செம்மணியா?
செம்மையாகத் தெரியவில்லை!

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### அமைதிப் புறா வருமா?

வழிமேல் விழிவைத்து
வஞ்சியவள் பார்ப்பதெதை?
அமைதிப் புறா வருவதைத்தான்
ஆவலுடன் பார்க்கின்றாள்...!
இலவு காத்த கிளிபோல் ஆகிடுமோ
இவள் கதையும்?

க.ரவி-இலிங்கபுரம்.

### எமை...

எம் மூதாதையர் வாழ்ந்துதான்
இறுதிவரை மகிழ்வுடன் மாண்டனர்...
எமைத் துடிக்கத் துடிக்க விரட்டுகிறார்.
நாம் வாழும் போதே
குடியேறிகள் எனச் சாடிக் கொண்டு!

சி.மதியழகன்-திக்கம்.

### நேரமில்லை......!

நாம் எவ்வளவு தூரம்
செல்லப்போகிறோம் என்று
யோசிப்பதற்கு நேரமில்லை
முதலில் சாப்பிடுவதற்கு உணவைத்
தேடுவோம்.

அமிர்தராஜ்-கண்டி.

### சந்திப்பு

சகதிக்குள் சமாதியாகியும்,
சாந்தியடையாத-அந்த
சமாதானத்தை....,
மீண்டும் பெறுவது பற்றி,
சிந்தித்திடவோ-இந்த
சந்திப்பு?

எம்.மீரா-வெள்ளவத்தை.

### என்று வரும் சமாதானம்?

என்று வரும் என்று வரும்- இந்த சமாதானம்
என்று பார்த்திருந்த-இச் சிறுமிகள்
தம்மை ஏமாற்றி விட்டது இந்த-அமைதிபறவை
ஒருவேளை இக்கானகத்தில்-மறைந்திருக்கும்
என எண்ணிப் பார்க்கும்-ஏக்கப்பார்வையா-இது?

க.ஷயதீசன்-மட்டக்களப்பு.

### துளி!

புல்வெளிதனில்
பனித்துளி!
வன்னிப்பாவையர்
எங்கள் விழிகளில்
கண்ணீர்த்துளி!

அ.யாழினி-மட்டக்களப்பு.

### சமாதானம்

உறவுகளே! நீங்கள்
உற்றுப் பார்ப்பது தெரிகிறதா?
தேர்தல் நெருங்கியும்!
தெரியவில்லை என்றால்!
அது வெகு தொலைவில்!
திரும்பி வாருங்கள்!

பா.திருக்குமார்-மடு.

### மரணம்

யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டு,
சிறுவர் எம்மை சித்திரவதை-
செய்யும் கயவர் முன்
வாழ்வதை விட எம்மண்ணிலேயே,
போய்
மரணித்துவிடுவோம், சீக்கிரம் வா!

டி.கமலசுந்தரி-பசறை.

## வாசக(ர்)சாலை

என் இதயத்தில் இடம்பிடித்த அன்பு முரசே!

வாரம் தோறும் வலம் வந்து எங்களை மகிழ்வூட்டுகின்றாய். என்போன்ற சிலரின் விருப்பப்படி மகேஸ்வரி வேலாயுதத்தின் அறிக்கையை வாரம்தோறும் அச்சிடுகிறாய். அதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் தெரிவிப்பதோடு, மற்றைய வேண்டுகோள் 'பயங்கரவாத தடை சட்டகைதிகள்' பற்றி சிறு அறிக்கையை ஒன்றுதிரட்டி அச்சிட்டு அனுப்புவாயானால் இன்னும் இன்னும் வாசகர்கள் அதிகரிக்கப்படும். மற்றும் பத்திரிகைகளை விட உனது அன்பு நெஞ்சங்கள் அதிகரிக்க வேண்டும் என்ற எனது பாராட்டுக்கள் என்றும். வாசகி,

கி.ஜனார்தனி–மல்லாவி.

இம்முறை 360ம் முரசிலே அடியேனின் சிறுகதையைப் பிரசுரித்து என்னை ஒரு சிறுகதை எழுத்தாளனாகச் சித்தி எய்த வைத்து, எனக்கு ஊக்கத்தை அளித்துள்ளீர்கள்.

என் வாழ்நாளில் எனக்கு உயர்விருது கிடைத்த நிகழ்வாக, என் வாழ்வில் மறக்க இயலாத நிகழ்வாக இதனைக் கருதுகின்றேன். தங்களுக்கு என் நன்றிகள் பல, பல.

மேலும் மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களே! நான் இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளேன். தங்களைப் போன்றோரின் ஆசிர்வாதங்களும், வாழ்த்துக்களும் என்னை வெற்றியீட்டச் செய்யும் என நம்புகின்றேன்.

வாழ்வில் இன்னும் எவ்வளவோ காலம் இருக்கின்ற, வாலிபத்தின் வேலியைத் தாண்டாத என்னை, இப் பதினெட்டுப் பராயத்திலே ஒரு எழுத்தாளனாவதற்கு அடியெடுத்துத் தந்த தினமுரசிற்கு இதயத்தால் இயம்புகிறேன் நன்றிகள் பலகோடி!

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பலரை ஊக்குவிக்கின்ற, பலரை எழுத்தாளராக்கிய பத்திரிகை உலகில் பாரிய நன்மதிப்பைப் பெற்று விளங்கும் தினமுரசையும், அதன் ஆசிரியர் குழுவினையும் வாழ்த்துகின்றேன்.


மீண்டும்.... மீண்டும் நன்றிகள், பல, பல, பலப்பல!

ஏ.ஆர்.திருச்செந்தூரன்-கொழும்பு-06.

அன்பின் முத்தான முரசே!

நீ வியாழன் தோறும் சுமந்து வரும் அனைத்து அம்சமும் என் இதயத்தைக் கவர்ந்தவை. அதிலும் 'மன்னாதி மன்னன்', 'கதை', 'சினிவிசிட்', 'பாப்பாமுரசு' என்பன எனக்கு மிகவும் விருப்பமான ஆக்கங்கள். என்றும் முரசின் பணி தொடரவும் வளரவும் என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

உ.சிந்துஜா-கெம்பியன்.



### தகவல்கள் தொடரவேண்டும்!

'எழுத்துச்சிற்பி' எஸ்.டி.சிவநாயகம் தொடரில் அதனை எழுதும் திரு.இரா.பத்மநாதன், மட்டக்களப்புத் தமிழகத்தில் ஐம்பதுகளில் ஏற்பட்ட சமுதாய-அரசியல் மாற்றங்களைமிட்டுப் பல தகவல்களைத் தருகிறார். எனது பாட்டனார் காலத்தில் நடைபெற்ற பல சம்பவங்களுடன் தொடர்புடையோர் பலரை கட்டுரையில் நினைவுகூர்வது தொடர்பாக எனது பாட்டா உணர்ச்சி வசப்பட்டுப் பல கதைகளை அவர் எனக்கு விளக்கினார்.

'திருமலை யாத்திரை', மட்டக்களப்பில் நடைபெற்ற 'சிங்கள சிறி போராட்டம்', 'கச்சேரி முன்புறம் இடம்பெற்ற சத்தியாக்கிரகம்' போன்ற சமபவங்களை அவர் கூறும்போது, நானும் உணர்ச்சி வசப்பட்டுப் போனேன்.

இவை போன்ற-இதுவரை வெளிவராத பல சம்பவங்கள் பற்றி திரு.பத்மநாதன் அவர்கள் இத்தொடரில் தருவார் என எதிர்பார்க்கிறேன். நன்றி.

பீ.நல்லசிவம்-தம்பலகாமம்.

என் இனிய முரசே!
என்றும் வாடாத முரசுப் பூவே
உன் கலர் கலர் வர்ணப்படங்களுடன்.
வண்ணச் செய்திகள் யாவும் உன்மையே.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உனக்கு முதுமையென்றும் இல்லை.
நீ இன்றும் இளமையான
இனிமைப் பூவே

வி.சிறிதர்-சுவிஸ்.

### எனது சோகம்

பல விடயங்களை உள்ளடக்கும் அன்பு முரசே!

உன் வாசகர்களில் நானும் ஒருவன். நான் 94 தொடக்கம் உன்னை வியாழன் தோறும் வாசித்து வருவது மட்டுமன்றி, உன்னை 6 வருடங்களாக சேமித்து வந்தேன். "அனைத்தும் எனது வீடு தீக்கிரையானதில் எரிந்து விட்டன. அழுதேன். புலம்பினேன். பலனில்லை. நான் அத்தோடு மனம் தளரவில்லை. தொடர்ந்து வாராவாரம் உன்னைக் காணாமல் உணவு உண்ணமாட்டேன் என்றால் அது பொய்யாகாது. உன்னில் அனைத்து அம்சங்களும் 'படு சூப்பர்'. என்றும் முரசு என் கையில் தவழ வாழ்த்துகின்றேன்.

நான் இத்தனை வருடங்களுக்குப் பின்பு வாசகர்சாலைப் பகுதியில் பங்கு கொள்வது இதுவே முதல் தடவை. எனது பத்திரிகை எரிந்த சோகத்தையும் பிரசுரிக்கவும்.

பி.என்.பாலு-வினாயகபுரம்-03.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: 074–514282
தொலை நகல் (Fax):– 074-513266


### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# மனமாற்றத்தினால் மட்டுமே பிரச்சனை தீரும்!

# இல்லையேல் சர்வநாசமே மிஞ்சும்!

**அமைதியை ஏற்படுத்துவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும்–எதிர்காலத்தைப்பற்றி அக்கறை கொள்ளாத தீய சக்திகளின் தூண்டுதலினால் கிழித்தெறியப்பட்டன. புதிய அரசியல் யாப்பினை நடைமுறைப் படுத்துவதிலும் பூதாகரமான எதிர்ப்புகள் எழுந்துள்ளன. எனவே இப்புதிய யாப்பினாலும் உத்தேசிக்கப்பட்டுள்ள அமைதி கிட்டப் போவதில்லை. சிறுபான்மையினரும் பெரும்பான்மை இனத்தைப் போல் இந்நாட்டில் சகல உரிமைகளையும் பெற்று வாழத் தகுதியுடையவர்கள் என்பதை சகலரும் உணர்ந்து செயற்பட்டால் மட்டுமே ஒரு நல்ல முடிவினை எட்டக் கூடியதாக இருக்கும். இல்லையேல் சர்வ நாசம்தான் மிஞ்சப் போகிறது.**

இந்த நாட்டில் எழுந்துள்ள இனப் பிரச்சனைகள்-அவற்றை அடிப்படையாகக் கொண்ட மோதல்கள் சாகாவரம் பெற்றவைகளாக விளங்குவதையே நாம் காணக் கூடியதாக இருக்கிறது.

கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் இனவன்முறை மோதல்கள் பலவற்றை நாம் கண்டிருக்கிறோம். எண்ணற்ற உயிர்கள் பலியாகிப் போயுள்ளன. கணக்கு வழக்கற்ற பொருட்கள், உடமைகள் ஆகியவை சிதைந்து சின்னாபின்னப்பட்டு சீரழிந்து போயுள்ளன. நாட்டின் மூலவளங்கள் சரியான பராமரிப்பின்றி பாழடைந்து போய்விட்டன. நாட்டின் மேம்பாட்டுக்கு உழைக்க வேண்டிய இளம் சமுதாயத்தினர், அழிவுப் பாதைக்கு வழிகாட்டும் ஆயுதங்களைச் சுமந்த வண்ணம் அர்த்தமற்ற ஆரவாரங்களைச் செய்த வண்ணமுள்ளனர்.

பெருந் தீங்கை விளைவிக்கும் இத்தகைய பொல்லாப்புகளை நீக்கி விடப் போவதாக அடுத்தடுத்து ஆட்சிபீடமேறிய ஆளும் வர்க்கத்தினர் கங்கணம் கட்டிக் கொண்டு முன் வந்தனர். உடன்படிக்கைகள் ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்ட அதே துரித கதியில் அவை கிழித்தெறியப்பட்டதையும் நாம் கண்டு வந்துள்ளோம்.

பிரச்சனைகள் உச்சக் கட்டத்தை அடையும் போது அவற்றைத் தணிப்பதற்கு 'வட்டமேசை மகாநாடு', 'சர்வ கட்சி மகாநாடு' என்று இழுத்தடிப்புக்களும் இடம் பெற்றன. ஆனால் உருப்படியாக எதுவுமே நடைபெறவில்லை.

இன்றைய ஆளும் வர்க்கத்தினர் புதிய தீர்வுத் திட்டத்தினை உள்ளடக்கிய புதிய அரசியல் யாப்பொன்றை வகுத்து அதனை அடிப்படையாக வைத்து, கடந்த பல மாதங்களாக பல தரப்பினரையும் அழைத்து ஆலோசனைகளை நடத்தி வருகின்றனர். இதனை இந்த பாராளுமன்ற ஆட்சிக் காலம் முடிவதற்கு முன்னதாகவே சட்டமாக்கி விடலாம் என்று ஆளுந்தரப்பினர் உறுதியளித்து வந்துள்ளனர்.

இப்புதிய அரசியல் யாப்பினை சட்டமாக்குவதில் மூன்று முட்டுக்கட்டைகள் தாண்டப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது என்று முரசு 365ல் மூன்றாம் பக்கத்தலைப்புச் செய்தியில் சுட்டிக் காட்டியிருந்தோம்.

புதிய அரசியல் யாப்பினை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று நாம் கூறியது எப்போதோ சரியாகி விட்டது. இந்த நாட்டின் பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் தனிச் செல்வாக்குடன் விளங்கும் பௌத்த மத பீடாதிபதிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்றும் சிங்கள பேரினவாத சக்திகள் தீர்வுத் திட்டத்துக் கெதிராகப் போர்க்கோலம் பூணுவார்கள் என்றும் சுட்டிக் காட்டியிருந்தோம். இக்கூற்று இப்பொழுது உண்மையாகி விட்டது.

இத்துடன் மட்டும் நின்றுவிடாமல், தீர்வுத் திட்ட ஆலோசனைகளில் பங்கேற்று வந்த ஐ.தே.கட்சியின் தலைவரும், ஏதோ ஒரு சாக்கை வைத்துக் கொண்டு ஒதுங்கி விடப் பார்க்கிறார். ஆகவே பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு இன்னும் சில வாரங்களே இருக்கும் இக்கால கட்டத்தில், புதிய அரசியல் யாப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக்கப்படும் என்பதில் பெரும் சந்தேகம் ஏற்பட்டிருப்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் பெரும்பான்மை சிங்கள மக்களுடன் இந்நாட்டிலுள்ள சிறுபான்மை தமிழ் பேசும் மக்களும் சம அந்தஸ்துடன் வாழும் உரிமையுடையவர்கள் என்பதை தாமாகவே உணர்ந்து பெரும்பான்மை சமூகத்தினர் நடந்துகொள்ள முற்பட்டால் மட்டுமே இங்கு சமாதானம் நிலைபெற முடியும். இல்லையேல் இருதரப்பினரும் எப்போதும் மோதிய வண்ணம் சீரழிந்துப் போக வேண்டிய நிலைதான் ஏற்படும்.

இதுவே இலங்கைப் பிரச்சனையை உற்று நோக்கும் பேரறிவாளர்களின் ஒருமித்த கருத்தாகும்.

அரசப்படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தொடரும் மோதலால் வனப்புமிக்க இச்சின்னஞ்சிறியநாடு சீரழிவதை வெளிநாடுகளில் சிலர் விசனத்துடன் பார்த்து வெதும்புகின்றனர். ஆனால் வேறு சில சக்திகள் மென்மேலும் ஊக்கமும் உதவி ஒத்தாசைகளும் அளித்து மோதலை வளர்க்க முற்படுகின்றன.

எமது நாடு சீரழிந்து போவதைத் தடுக்க இன்றுள்ள நாமே நமக்கிடையிலான பேதங்களையும் கருத்து மோதல்களையும் களைந்தெறிந்துவிட்டு இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு துணிந்து செயலில் இறங்கவேண்டும்.

'வீடு பற்றி எரியும் போது சுருட்டுப் பிடிக்க நெருப்புக் கோரும்' நிலையை விட்டொழித்துவிட்டு, எதிர்காலத்திலாவது அமைதி ஏற்பட இன்றே வழி தேட வேண்டியது எமது கடமையாகும்.

## வவுனியா நகரில் வெள்ளை வேன் பீதி!

வவுனியா நகரச் சூழவுள்ள இடங்களில் மீண்டும் வெள்ளை வேன் பீதி ஆரம்பித்துள்ளது. பண்டாரிக்குளம், நெலுக்குளம் பகுதிகளில் வெள்ளை வேன் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் 10, 12 வயதினையொத்த சிறார்களை மிரட்டுவதில் இந்தக் கோஷ்டி இறங்கியிருப்பதாகவும் அறிய வருகிறது.

பாடசாலை விட்டு வெளியே வரும் மாணவர்களை அவர்களது உறவினர்கள் எனக் கூறி அழைத்துச் செல்வதற்காக இந்தக் கோஷ்டி திட்டமிட்டுள்ளது போல் தெரிகிறதென்று பாலர் பாடசாலைப் பொறுப்பாசிரியரான அருட் சகோதரியொருவர் தெரிவித்தார்.

கடந்த 24ம் திகதி தனியாக நடந்து வந்த சிறுமியொருத்தி வெள்ளை வேன் கோஷ்டியினரால் மிரட்டப்பட்ட தகவல் தனக்குக் கிடைத்ததாகவும் அவர் சொன்னார்.

இளம் வயதினரைக் கிலி கொள்ள வைத்து அச்சுறுத்திக், கடத்திச் சென்று பணம் பறிக்கும் முயற்சியாகவும் இது இருக்கக் கூடுமென்று பொதுமக்கள் கூறுகிறார்கள்.

பண்டாரிக்குளம், நெலுக்குளம் பகுதிகளில் வெள்ளைவேன் கோஷ்டியால் சில அசம்பாவிதங்கள் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

## செய்தியாளர் செயலமர்வு

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சு மத்திய மாகாணத்தைச் சேர்ந்த செய்தியாளர்களின் நலன் கருதி இருநாள் செயல் அமர்வுகளை நடாத்த உள்ளது.

பல்துறை ஊடகவியலாளர்கள் மலையகத்தில் செய்தித் துறையில் இப்போது ஈடுபட்டுக் கொண்டிருந்தால் அவர்களுக்கு இதன் பொருட்டு விண்ணப்பிக்க இயலும் என அறிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பங்கள் யாவும் பி.இராஜேந்திரன் சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், புசல்லாவை என்ற முகவரிக்கு விரைவில் அனுப்பி வைக்கலாம் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

## தேர்தல் களத்தில் குதிக்கத் தயாராகும் கண்டிப் பிரமுகர்கள்!

(கண்டி நிருபர்)

பொதுத்தேர்தல் விரைவில் நடைபெறப் போவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து கண்டி பிரதேசத்தில் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

மிக நீண்டகாலமாக தொடர்ச்சியாக ஹரிஸ்பத்துவ பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த முன்னாள் அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீதின் மறைவின் பின்னர் பல புதிய முகங்கள் வரும் தேர்தலில் குதிக்க இருக்கின்றன.

ஸ்ரீ.ல.சு. கட்சியின் முன்னாள் உப தலைவர் பதவியை வகித்தவரும் வைத்தியத் துறையில் இப்பொழுது ஈடுபட்டு வருபவரும் மத்தியமாகாண சபையின் நடந்து முடிந்த தேர்தல் முடிவுப்பட்டியலில் அடுத்ததாக இடம்பெற்றிருப்பவருமான சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட இருப்பதாகவும் செய்திகள் பலமாக அடிபடுகின்றன.

காலம் சென்ற ஹமீதின் மருமகனும் இந்நாள் ம.மா.சபை உறுப்பினராக இருக்கும் எம்.எச்.எ.ஹலீம் (ஐ.தே.க) என்பவரும் பொதுத் தேர்தலில் குதிக்க இருக்கின்றனர்.

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் சார்பில் தற்போதைய நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரான றவூப் ஹக்கீமும் கண்டி மாவட்டத்தில் முதன் முறையாகப் போட்டியிட இருக்கிறார்.

அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பொ.ஐ.முன்னணி சார்பில் கலகெதரை தொகுதி அமைப்பாளராக இருந்து கொண்டு போட்டியிட இருக்கும் அதே வேளையில் ம.மா.சபை உறுப்பினர்கள் சிலரும் இத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட முன்வந்திருக்கின்றனர்.

பொதுத் தேர்தலில் எப்பொழுதும் சூடு பிடிக்கும் நிலையில் பரபரப்பாக இருக்கும் கம்பளையில் இருந்து முன்னாள் எம்.பியான சந்திரமன் டி சில்வா பிரஜைகள் குழுவின் சார்பில் போட்டியிட கண்டி மாவட்ட அமைப்பாளர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

எப்பொழுதும் வாக்காளர் மத்தியில் மிகவும் உன்னிப்பாக இருந்து வரும் பாத்ததும்பறை தொகுதி ஐ.தே.க அமைப்பாளராக இருந்து வரும் இன்றைய ம.மா. சபை எதிர்க் கட்சித் தலைவருமான கெஹலிய ரம்புக்வெல்லவும் மற்றொரு ம.மா.சபை உறுப்பினரான மகிந்த விஜய சிரி ஐ.தே.க. சார்பில் ஹரிஸ் பத்துவையை மையமாகக் கொண்டு கண்டி மாவட்டத்தில் போட்டியிட ஆயத்தமாகின்றனர்.

இதேவேளையில் முன்னாள் கம்பஹா, கண்டி மாவட்டங்களில் ஸ்ரீ.ல.சு.கட்சி சார்பில் போட்டியிட்டவரும் கண்டி மாவட்ட ஸ்ரீ.ல.சு. கட்சி முஸ்லிம் சம்மேளனத் தலைவரான எம்.டி.எம்.றவூப் ஹாஜியார் பொ.ஐ.ஐ. முன்னணிசார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட இருக்கின்றார்.

இ.தொ.கா.வைப் பொறுத்த மட்டில் இப்பொழுது கண்டி மாவட்ட எம்.பி.கள் இஜாரட்ணம் இம்முறையும் போட்டியிட இருக்கின்றார். கடந்த வாரம் இவரது அணியில் அங்கம் வகிக்கும் ஏனைய நான்கு எம்.பி.க்களின் கூட்டம் ஒன்று கண்டி இந்து கலாசார நிலையத்தில் 16ம் திகதி இடம்பெற்றது.

## நூல் நிலையத்துள் நுழைவதற்கும் அடையாள அட்டை அவசியம்!

(கண்டி நிருபர்)

கண்டி டி.எஸ்.சேனாநாயக்க பொது நூல் நிலையத்துக்குள் அடையாள அட்டையின்றி எவரும் செல்ல இயலாது.

கண்டி நகர பாடசாலை ஒன்றில் புலிகள் தொடர்பான வெறும் பீதி நிலவியதாலேயே இந்த அடையாள அட்டை பரிசோதிக்கும் புதிய நிலை நூலக நுழைவாயிலில் உருவாகியுள்ளது.

அண்மையில் ஆள் அடையாள அட்டையின்றி உள்ளே புக முற்பட்ட ஓரிரு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

என்றாலும் நூல் நிலையத்திற்குள் செல்வோர் அனைவரும் ஆள் அடையாள அட்டை வைத்திருந்தால் மாத்திரமே உள்ளே அனுமதிக்கும் புதிய நடைமுறையினால் பாடசாலை மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

## அம்பாறை சுகாதார திணைக்களம் கவனிக்குமா?

(காரைதீவு நிருபர்)

அம்பாறை சுகாதாரத் திணைக்களம் கிராமம் கிராமமாக தடுப்பூசி ஏற்றல், திரிபோஷா வழங்கல் போன்ற பல வைத்திய சேவைகளை செய்கின்றது. ஆனால் இறக்காமம் பிரிவிலுள்ள ஒரேயொரு தமிழ்க் கிராமமான மாணிக்கமடு கிராமம் பக்கமே செல்வதில்லையாம் என மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மாணிக்கமடு தமிழ் மக்கள் இவ்வைத்திய சேவையைப் பெற கொழுத்தும் வெயிலில் பலமைல் தூரம் நடந்து வர வேண்டியுள்ளது. அக்கிராமத்திற்குச் சென்று வைத்திய வசதிகளை வழங்கினால் என்ன? என்று மக்கள் கேட்கின்றனர்.

## புலிகளின் பிடியிலிருந்த குற்றவாளி தப்பியோட்டம்!

சமீப சில மாதங்களுக்கு முன்னர் புலிகள் இயக்கப் பெண் போராளிகள் மூவரை ஏமாற்றி பாலியல் வல்லுறவு புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், புலிகள் இருவரைக் கைது செய்திருந்தனர்.

விசாரணையின் பின்னர் அவர்களில் ஒருவருக்கு புலிகள் பகிரங்க மரண தண்டனை வழங்கினர் என்பதும் முன்னர் முரசு வாசகர்கள் அறிந்ததே.

புலிகளின் விசாரணையில் இருந்து வந்த மற்றொரு நபர் தப்பியோடியிருப்பதாகவும், அந்நபர் மட்டக்களப்பில் இராணுவ புலனாய்வுப் பிரிவினரிடம் போய்ச் சேர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபரின் மிக நெருங்கிய உறவினர் ஒருவர் சீருடைத் தரப்பு புலனாய்வுப் பிரிவில் இணைப்பாளராக உள்ளார் என்றும் அறியவருகிறது.

இந்நபர் பாலியல் வல்லுறவுச் சம்பவத்தில் மாட்டுப் படுவதற்கு முன்னர் தான் புலிகளின் தீவிர ஆதரவாளர் எனக் கூறி தன்னிச்சையாக பல அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வந்தவர் என்று ஊர் மக்கள் தெரிவிக்கிறார்கள்.

குற்றவாளியான அந்நபர் புலிகளின் பிடியிலிருந்து தப்பியோடிய விதம் பொது மக்கள் தரப்பில் ஆச்சரியத்தைத் தோற்றுவித்துள்ளது.

## கல்விப்பணிப்பாளருக்குப் பாராட்டு

(காரைதீவு நிருபர்)

வட-கிழக்கிலுள்ள 24 வலயங்களில் சம்மாந்துறைவலயம் முன்னணியில் திகழ்வதற்கு மூலகாரணகர்த்தாவாகிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம். இஸ்ஸதீனுக்கு, அமைச்சர் அஷ்ரப் பொன்னாடை போர்த்தி பகிரங்கப் பாராட்டையும் தெரிவித்தார்.

சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரியின் பொன்விழாவையொட்டிய கல்விக்கண்காட்சி விழாவில் இந்தப் பாராட்டு வைபவம் இடம் பெற்றது. சம்மாந்துறை வலய வீரர் றசூல், வீராங்கனை கே.வசந்த மலர் மாகாணமட்டச் சம்பியன்களாக தெரிவாகியதற்கும் பாராட்டும் பரிசும் வழங்கப்பட்டன.

## நஷ்டஈடு கிடைக்கவில்லை!

1990ல் வன்செயலில் மாணிக்கமடுவில் காணாமல் போய் கொல்லப் பட்ட மூவரில் இருவருக்கு இன்னும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை. வீடு வாசல் அழியாதவர்களே நஷ்டஈடு பெறும் இக்காலகட்டத்தில் உண்மையாகக் கொல்லப்பட்ட இந்த இரு தமிழ் இளைஞர்களுக்கு நஷ்டஈடுவழங்கப் படாதது ஏன் என்று வினா எழுகிறது.

வெள்ளக்குட்டி தம்பிராஜா (வயது 30) சுந்தக்குட்டி சீனித்தம்பி (வயது 28) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

பாதிக்கப்பட்ட 102 குடும்பங்களில் இதுவரை ஆக 20 குடும்பங்களுக்கு மாத்திரமே வீடமைப்புக் கொடுப்பனவு ரூ25000/- வழங்கப்பட்டுள்ளது. அருகிலுள்ள கிராமங்களில் தேவையானளவு வழங்கப்படுகின்றதாம்.

இங்குள்ள பிள்ளையார் ஆலயம் சேதமடைந்திருந்தும் இன்னும் எதுவிதமான நஷ்டஈடும் வழங்கப்படவில்லை. குழாய்க் கிணறு கூட அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

## நம்பிக்கையில்லாப்பிரேரணை

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபை மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சியினர் அடுத்த மார்ச் மாதம் 10ம் திகதி கூடும் பொழுது கையளிக்க உள்ளது. இந்த தகவலை எதிர்க்கட்சித் தலைவர் திரு ரம்புக்வெல்ல முரசுக்குத் தெரிவித்தார். முறையற்ற டெண்டர் விவகாரம், ஆசிரியர் இடமாற்றம், பதவி உயர்வு போன்ற மற்றும் பல அம்சங்களை முன்னிறுத்தி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை ம.மா.சபை தலைவர் திரு.மகிந்த அபயகோனிடம் கையளிக்கப்படும்.

இதே வேளையில் ம.மா. சபையில் தமிழ் பேசும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1/3 ஆக இருப்பதனால் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாகவும் பிரேரணை கொண்டு வரப்பட்டால் அதனை முழுமையாக எதிர்க்கவும் ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் இப்பொழுது பகீரதப் பிரயத்தனம் எடுத்து வருகின்றனர். கடந்த 23ம் திகதி ஞாயிறு மத்திய அரசு அமைச்சரவையின் பிரபல அமைச்சர் ஒருவர் ம.மா.சபை வளவுக்குள் இ.தொ.கா மாகாண சபை உறுப்பினர்களை இது பற்றி ஆராய சந்தித்திருக்கின்றார் எனவும் நம்பகமாகத் தெரியவருகின்றது.

## கூட்டுக்கு வேட்டு வைக்கும் கூட்டணி

அம்பாறை மாவட்டத்தில் ஓரணியில் அனைவரும் இணைந்து போட்டியிட்டால் மட்டுமே ஒரேயொரு பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றலாம். எனவே ஓரணியில் திரளுங்கள் என்று அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கம் அனைத்துக் கட்சிகளையும் கேட்டுக் கொண்டுள்ளது.

ஆனால், கூட்டணியினர் தாம் தனித்துப்போட்டியிட விரும்புவதாக தகவல்கள் கசிந்துள்ளன. தேசியப்பட்டியலுக்கு வாக்குகள் சேர்க்கும் யுக்தியை பயன்படுத்தவே தேர்தலை பாவிக்க எண்ணுவதாக தெரிகிறது. மக்கள் நலனைப்பற்றி-பிரதிநிதித்துவத்தைப் பற்றி அந்த அணியினர் சிந்தித்ததாகத் தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

## படையினரின் உறவினர் வன்னி செல்ல விருப்பம்

விடுதலைப்புலிகளுடனான மோதல்களில் ஈடுபட்டு காணாமற் போனவர்கள் என அறிவிக்கப்பட்ட அரசப்படையணிகளைச் சேர்ந்தவர்கள் இன்னும் விடுதலைப் புலிகளின் வன்னிப் பிரதேச முகாம்களில் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு 2000 சிப்பாய்கள் புலிகளின் முகாம்களில் இருப்பதாக நடவடிக்கைகளின் போது காணாமற்போன படையினரின் உறவினர்கள் சங்கம் கருதுகிறது. வன்னிக்குச் சென்று இவர்களைச் சந்தித்துவருவதற்கு தமக்கு அனுமதி வழங்குமாறு இவர்கள் அரசாங்கத்தைக் கோரி வருகின்றனர்.

## தன்குறை தனக்குத் தெரிவதில்லை?

'கூட்டத்திற் கூடி நின்று கூவிப் பிதற்றலன்றி நாட்டத்திற் கொள்ளாரடி' என்ற பாரதியாரின் சீற்றத்துக்கு மிகப் பொருத்தமானவர்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபை அதிகாரிகள்.

அண்மையில் தமிழ் மொழித்தின விழா மேடையொன்றில் தமிழை நிர்வாக மொழியாக அமுல் நடத்த முடியவில்லையே என்று வெதும்பிக் கண்ணீர் உகுத்தார் கல்விச் செயலர் திரு.க.பரமேஸ்வரன். இவரது வேதனையைப் பார்த்த பலரும் தமிழுக்குத் தடை வேறெங்கோ இருந்து வந்திருக்க வேண்டும் என்று நினைத்திருக்கக் கூடும்.

தமிழ் மொழியார்வம் மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும் என்பதற்காக அரசால் நடத்தப் பட்டு வரும் தமிழ் மொழித்தின போட்டிகளில், தமிழ் தமிழ், என்று நீலிக் கண்ணீர் வடிக்கும் வடக்கு கிழக்கு மாகாண சபைக் கல்வியமைச்சினால் நடுவர்களாகப் பணியாற்றிய தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு சம்பந்தமான கடிதத்திலும். அதன் உறையிலும் எங்குமே தமிழுக்கு இடம் தரப்படவில்லை.

இந்த லட்சணத்தில் சிங்கள அரசு, தமிழையும் தமிழர்களையும் புறக்கணிக்கிறது என்று சொல்ல எங்களுக்கு என்ன தார்மீக நியாயம் இருக்கிறது?

## தெய்வீகமாந்திரீக மனோவசிய மருத்துவம்



யோகா-ஹோமியோபதி-அக்குப்பங்சர்-சித்த ஆயுர்வேத சிகிச்சை. சகலரோக நிவர்த்தி! சகல துக்க நிவர்த்தி! சகலகாரியசித்தி! தர்மசிந்தனையுள்ள புனித சேவை ஸ்தானம் (Govt-Regd)

மட்டக்களப்பு கல்லடி குருசக்தி நிலையத்தின் பிரதமகுரு

**YOGI-DR-T.MYLVAGANAM**

**(யோகி-டாக்டர்-T மயில்வாகனம்)**

D.S.M-M.B.B.S.H. - (இந்தியா), G.A.H.M.P-D.Ac (இலங்கை)

MINISTRY OF HEALTH REGISTRED MEDICAL PRACTITIONER - Regd No-061

காதல், திருமணம், கணவன்-மனைவி குடும்பப்பிரச்சனைகள், கல்வி, தொழில், வியாபாரம் பொருளாதார தடைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீய சக்திகளினால் வேறுகாரணங்களினால் ஏற்பட்ட தீராத உடல்நோய், மனநோய், வேறு பிரச்சனைகள், விரும்பாத உறவு, போதைவஸ்த்து பழக்கம், பாலியல் உளவியல் சிக்கல்கள், தாங்கமுடியாத நோய் துன்பங்களிலிருந்து விடுபட்டு, நீங்கள் விரும்பிய நன்மையான காரியங்களை நிறைவேற்றி சந்தோஷமாக வாழ, வரமுடியாதவர்கள் தொலைபேசி, பாக்ஸ், தபால் மூலம் தொடர்பு கொண்டு விஷேட தபாலில் இறைபரிகாரப் பொருட்களைப் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். பூசை பிரார்த்தனைகள் செய்து இறைவனைச் சரணடைந்து தீர்த்துக்கொள்ளும் ஆன்மீக அறிவுரைகள் முனிவர்கள் அருளிய மாந்திரீக வசிய மருத்துவ முறைகளினால் தீர்த்துக் கொள்ளும் வைத்திய ஆலோசனைகள் விபூதி அர்ச்சனைகளை இலவசமாக பெற்றுக் கொள்ள இறைநம்பிக்கையோடு நாடவேண்டிய விலாசம்.

**GURUSAKTHY CENTRE (INDIAN CLINIC) KALLADY, BATTICALOA. (P.O) (SRI LANKA)**

தொலைபேசி: 065-24872 - பாக்ஸ்: 065-23796 | தூரதேச கடல் கடந்த வெளிநாட்டவர்களுக்கு விஷேட செயல்முறைகள்.

---

## வத்தளையில் பயிற்சி வகுப்புகள்

Grade 1-5 மாணவர்களுக்கு Art and Hand work. fabric Painting (25 methods) Wedding structures Sugar flower. Birth day cakes, Rich cake. Crystal Ornaments. நூல் வேலைபாடுகள்.

ஆரம்பம் 14.08.2000
10.00-1.00 மணி வரை.

**21B குடா ஏதண்ட ரோட், வத்தளையில் வகுப்புக்கள் நடத்தப்படும்.**

பொருட்கள்-இலவசமாகக் கொடுக்கப்படும்.

தனிப்பட்ட வகுப்புக்களும் நடத்தப்படும்.

Birth day cake. structures, Rich cake Ordersக்கு செய்யப்படும்

தொடர்பு: ஷாமலா ✆ 936196.

---

## கோதண்டம் ஏந்திய கோமகன்

## நூல் வெளியீட்டு விழா



தினமுரசு வாரமலரில் 'இராஜகுமாரன்' என்ற புனை பெயரில் கலாபூஷணம், கலைமணி இரா. பத்மநாதன் தொடராக எழுதிய 'இராமாயணம்', 'கோதண்டம் ஏந்திய கோமகன்' என்ற பெயரில் 620 பக்கங்களைக் கொண்ட புத்தகமாக உருப்பெற்றிருக்கிறது.

இந்நாலின் வெளியீட்டு விழா ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி (போயாதினம்) பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் (சிறிய) மண்டபத்தில் வெளியிடப்படவிருக்கிறது. தமிழ் நாட்டு அறிஞர்களும் நம் நாட்டு அறிஞர்களும் இவ்விழாவில் பங்குபற்றவிருக்கின்றனர்.

இந்நாலை இந்து சமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தயாரித்திருக்கிறது.

---

உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

TRADE MARK




- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை

**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.**

ஏக விநியோகஸ்தர்:

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
Tel : 888214 Fax : 682984

---

தங்களின் வாழ்க்கையின் கஷ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாணத் தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன்-மனைவி கருத்துவேறுபாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும். பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம்: காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :

**MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.**
தொலைபேசி-0142552036

---

## சென்று வந்தார்




லயன்ஸ் கழக 306C பன்னாட்டு உறவுப் பிரிவின் தலைவர் லரின் ஜோ ரவுப் அண்மையில் ஹொங் கொங் மற்றும் மக்கவோ நாடுகளுக்கு சமுதாய நலன்கள் பற்றி அறியச் சென்று திரும்பியுள்ளார். இந்நாடுகளுக்கான மாவட்ட லயன்ஸ் ஆளுநர் எட்வின் கே.டபிள்யூ.யுன் அவர்களைச் சந்தித்த போது எடுத்துக் கொண்ட படம் இது. மக்கவோவிலுள்ள 128 வருடங்கள் பழமை வாய்ந்த கம் மருத்துவமனையையும் ஜோ ரவுப் சென்று பார்வையிட்டார்.

---

## —கவலை வேண்டாம்—

உங்கள் சங்கடம் எதுவாயினும் உடன் வெற்றி காண்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம்; தொழில் விருத்தி; பாலியல் குறைபாடுகள்; திருமண-பிரயாணத்தடங்கல்; முதலானவற்றை விசேடமாய் தீர்வுகாணும்; மட்டுநகர்-மலையாள மணிமாந்திரீகச் சித்தர் "கலாநிதி-சக்தி சரவணா" உங்களை நிச்சயம் வெற்றி பெற வைப்பார். மற்றும், எண்சோதிடம், நினைத்தகாரியம், ஜாதகபலன் முதலான சோதிட அருள் வாக்கும் பெற்று பூரண பலன் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரித சேவை உண்டு. (வியாழன் விடுமுறை) நேரில் காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

தொடர்பு: **"DR.SHAKTHY SARAVANA"**

வியாழன் விடுமுறை.


48/12 : SRI VIMALASARA ROAD,
KALUBOWILA; DEHIWALA. SRI LANKA. T.P 723646

---

## 13ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ம.மங்கள நாயகம் (தேவா)

மலர்வு: 06.09.1952
உதிர்வு: 04.08.1987



மண்ணுக்குள் மறைந்தாலும்
உன் நினைவு-மனதிற்குள் மறையவில்லை
காலங்கள் கடந்தாலும்
உங்கள்-அன்பு கோலங்கள் மறையவில்லை
கண்ணெதிரில் உங்கள் முகம் தான்
கலங்குகின்றன எம் விழிகள்
அணையவில்லை உன் உருவம்
அணையா விளக்காய் எம் மனதில்.

பிரிந்து வாடும்

மனைவி: ம.மேரி வெற்றீசியா (வத்தளை)
பிள்ளைகள்: ம.மைக்கல் கொலின்ஸ் (ஜேர்மன்)
ம.எட்வின் அல்ட்றின் (இலங்கை)
ம.மெரில் சில்வெஸ்ரர் (லண்டன்)
ம.அஸ்வின் கொன்ஸ்லஸ் (ஜேர்மனி)

தகவல்: மனைவி ம.மேரி வெற்றீசியா (ராணி)
கல்விப்பாடு, முல்லைத்தீவு.

---

## மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்





நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

மாந்திரிக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக P. K. SAAMY ASSOCIATE (PVT) LTD ஐ உருவாக்கியது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தைப் பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

திரவம் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த ஆட்களுக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகளாவிய ரீதியில் பிரதிநிதித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பி.கே. சாமி அவர்களே! 33 மாந்திரிகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ, தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பி.கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: **466271, 466571, 466620. 466820 431137, 470615, 342463, 344831,** இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த் நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தூண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி

**Prof.Dr. P. K. Samy (J.D.G.A.N) JP**

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk

இன்டர்நெட் மூலம் எமது சேவைகளை அறிய எமது இன்டர்நெட் வெப் தளத்தை நாடவும்

Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

**வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:**

வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.

---

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஜூலை 23 முதல் 28 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில் ஆகஸ்ட் 05,06 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஆகஸ்ட் 13, 14 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

---

## 6ம் மாத நினைவஞ்சலி

பிறப்பு 07 ※ 04 1984



இறப்பு 21 ※ 01 2000

**செல்வி. தாட்சாயினி மன்மதராசா**

(மாவிட்டபுரம்)

**திதி: 21.07.2000**

எங்கள் செல்வக்குழந்தை நீ ஒடி ஒளிந்து 6 மாதம் ஆனதம்மா. எங்கள் மகளே! நீ-இறப்பதற்கு காலமுன்டு இறையடி நீ சேர என நினைத்து தெல்லாம் பொய்யாகி நினைவிழந்து தவிக்கிறோமடா. கருவுற்ற உயிர்களெல்லாம்-காலனவன் கட்டளைக்கு இரையாகிப் போகுமென்று இறைவனின் எழுத்ததுவோ? மீண்டுமொரு முறை எம் வயிற்றில் நீ வளர வேண்டி ஒரு வரம் கேட்டு வேதனையில் தவிக்கிறோம். தங்காவின் அக்கா நீ-தங்காவுக்குத் தங்காவாக ஓடி வந்து முத்திமிடு-எங்கள் ராசாத்தி உன் ரோஜா முகம் காணாமல் ஏங்கித் தவிக்கும்,


உன் அன்பானஅப்பா, அம்மா, தங்கை.

தகவல்: அப்பா
*T.Manmatharajah, Corsaz-16,*
*1820-Montreux, Switzer Land.T.P: 021-9611560*

---

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
29.12.1972
ஆண்டவனடியில்
19.07.1997



விநாயக மூர்த்தி ஆனந்தராசா
(குமார்)-நவக்கிரி

ஆறுதல் சொல்ல
யாரிருந்தென்ன-உன்
ஆருயிர் அன்பிற்கு
ஈடாகுமோ-தேறுதல்
சொல்ல தெய்வம்
வந்தென்ன குமரா-உன்
திருமுகம் பார்த்திடல்
போதாதோ-எம்
உள்ளங்கள் துடித்திட
நீ எங்கு சென்றாய்? எந்நாளும்
உன் நினைவால் கண்ணீரால்
கரைகின்றோம்.

முன்றாண்டென்ன முப்பது ஆண்டுகள் சென்றிடினும் எம் நெஞ்சமதில் உன் நினைவுகள் என்றும் நீங்காது, உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

தகவல்: வ.விநாயகமூர்த்தி

எக்ஸ் ரே ரிப்போர்ட்

# தாயகக் கோட்பாட்டின் தாற்பரியங்கள்

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தில் பிரதானமான ஒரு அம்சமாக எழுந்தது தான் தாயகக் கோட்பாடு. தமிழர்களின் வடக்கும் கிழக்கும் இணைந்த தொடர்ச்சியான ஒரு பிரதேசத்தை அவர்கள் இத் தாயகக் கோட்பாட்டில் தமது தாயகமாக உணர்கிறார்கள்.

இத் தாயகமென்பதன் அர்த்தம் தனியான ஒரு நாடு என்பதல்ல. தமிழைப் பேசுகின்ற, பேணுகின்ற, தமிழரின் கலை கலாசாரங்களை, சடங்குகள், சம்பிரதாயங்கள், விழுமியங்களைச் செயற்படுத்துகின்ற ஒரு தமிழ்ச் சமூகச் சூழலைக் கொண்ட பிரதேசமாக விளங்குவதையே தாயகம் என்பதன் மூலம் அர்த்தப்படுத்துகிறார்கள். இச் சூழலில் தமது பொருளாதார வாழ்வைக் கட்டியமைத்து அதற்கான அரசியல் உரிமைகளோடு வாழவும் தமது அரசியல் பிரதிநிதித்துவத்தைச் செலுத்தவும் கூடிய கௌரவமான வாழ்வை எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் பல சிங்களத் தலைமைகள் இத் தாயகக்கோட்பாட்டை ,பிரிவினைக்கான கோரிக்கையெனச் சிங்கள மக்களுக்குப் பூச்சாண்டியாகக் காட்டிப் பயமுறுத்தி எதிர்ப்புணர்வைத் தூண்டிவந்தார்கள். இன்னும் தொடர்கிறார்கள்.

அதனால்தான் இன்று இலங்கை இந்து சமுத்திரத்துக்குள் மூழ்கடித்து விடுமோ என அஞ்சுமளவுக்குப் பாரிய பிரச்சனையாகிவிட்ட இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முடியாது திண்டாட வேண்டியதாக உள்ளது. ஏனெனில் இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வு விடயத்தில் இத் தாயகக் கோட்பாடு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதான விடயமாக அமைந்திருக்கிறது.

இப்போது நிகழும் அரசியல் பேச்சுவார்த்தைகளிலும் ஏனைய பல விடயங்களுக்கு மத்தியில் இத் தாயகக் கோட்பாட்டிலேயே பிரதானமான சிக்கல் எழுந்துள்ளது. தமிழ் பேச்சும் மக்கள் தமது தாயகமாக உணரும் பிரதேசத்தை அதிகாரப் பகிர்வுக்கான அலகாக அங்கீகரிப்பதில் அரசாங்கத்துக்கும் எதிர்க் கட்சிக்கும், ஏனைய சிங்கள உணர்வு கொண்ட கட்சிகளுக்கும் உள்ள தயக்கமும், எதிர்ப்புமே இப்போது தீர்வுத்திட்ட ஆராய்வுகளில் வெளிப்படுகிறது. இக் கட்சிகளோடு சேர்ந்து இத் தாயகக் கோட்பாட்டை முறியடிக்க முஸ்லிம் காங்கிரஸும் தமது அரசியற் கைவரிசையினை மேற்கொள்ள இறங்கியுள்ளது.

அதனால்தான் தற்போது ஆராயப்படும் தீர்வுத்திட்டதத்தில் 5 வருட இடைக்கால ஆட்சியின் பின் வடக்கும் கிழக்கும் தொடர்ந்து இணைந்திருப்பதா இல்லையாவென கிழக்கு மாகாணத்தில் மட்டும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நிகழ்த்தித் தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்தை எதிர்க்கட்சியும் அரசாங்கமும் சேர்ந்து முன்வைத்துள்ளன.

அதேவேளை முஸ்லிம் காங்கிரஸ் இதற்கு ஒருபடி மேலே சென்று, அப்படி ஏதேனும் காரணத்தால் 5 வருட இடைக்கால நிர்வாக சபை ஆட்சி முடிவில் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நிகழ்த்த முடியாது போனால் வடக்கும் கிழக்கும் தானாகவே பிரிந்துவிட வேண்டும் என்ற அழுத்தத்தைச் செலுத்துகிறது.

அவ்வாறானால் முஸ்லிம் காங்கிரஸின் முனைப்பு வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதாகவே இருக்கிறது என்பதே வெளிப்படுகிறது. அந்தக் காரியத்தை கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியோ, நடத்தாமலோ செய்துவிட அது எத்தனிக்கிறது. தமிழர்களின் அபிலாஷைகளுக்குத் தாம் எதிரானவர்களல்லவென முஸ்லிம் காங்கிரஸ் கூறிக் கொண்டாலும், தமிழர்களின் மிகப் பிரதானமான அபிலாஷையான தாயகக் கோட்பாட்டுக்கு வேட்டு வைக்கும் அரசியற் கைவரிசையையே அது காண்பிக்க விளைகிறது கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முடியாவிட்டால் வடக்கும் கிழக்கும் தானாகப் பிரிந்துவிட வேண்டுமென வலியுறுத்தும் முஸ்லிம்காங்கிரஸ் வாக்கெடுப்பு நடத்தினாலும் கூட பிரிப்பதற்குத்தானே செயலாற்றும் என்றே எதிர்பார்க்க முடியும்.

கிழக்கில் மட்டும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தினால் முஸ்லிம்களே பிரிப்பதா இணைப்பதா என்று தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவர். ஏனெனில் கிழக்கு மாகாணத்தில் தற்போதைய குடித்தொகையில் தமிழர் மூன்றில் ஒருபங்கும் முஸ்லிம்கள் மூன்றில் ஒருபங்கும் சிங்களவர் மூன்றில் ஒருபங்கும் வகிக்கின்றனர். எனவே முஸ்லிம்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து பிரிப்பதற்கு வாக்களித்தால் தமிழர்கள் தலைகீழாக நின்றாலும் வடக்கும் கிழக்கும் பிரியும்.

இதைத்தான் அண்மைய பேட்டியொன்றில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சுட்டிக் காட்டியிருந்தார். கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு வைத்து வடக்கு-கிழக்கு இணைப்பைத் தீர்மானிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதெனக் கூறிய அவர் சிங்களவர்களும் முஸ்லிம்களும் இணைப்புக்கு எதிராக வாக்களித்தால் வடக்கும் கிழக்கும் பிரியும் என்று எடுத்துக் காட்டியிருந்தார்.

அவ்வாறு கிழக்கு மாகாணம் வடக்கிலிருந்து பிரிக்கப்படுமானால் முஸ்லிம் காங்கிரஸ் சிங்களக் கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து அதன் அதிகாரத்தைக் கைப்பற்றி விடலாம் என்று கணக்குப் போடுகிறது. ஆக மொத்தத்தில் இனப்பிரச்சனையின் விளைவாக இவ்வளவு நீண்டகாலமாகப் பெரும் இழப்புகளுக்கும் துயர்களுக்கும் மத்தியில் தொடரும் தமிழர்களின் போராட்டத்தில் அரசியல் லாபம் தேடும் ஒரு குறுக்கு வழியை முஸ்லிம் காங்கிரஸ் கடைப்பிடிக்க விளைகிறதா என்ற சந்தேகம் தலைதூக்கியுள்ளது.

வடக்கு கிழக்குத் தமிழர்கள் உரிமைப் போராட்டம் நடத்தி வரும் காரணத்தால் 1974ல் வட்டுக்கோட்டைத் தமிழீழத் தீர்மானத்தின் பின் அரசாங்கத்தில் அங்கம் வகிக்காது விலகி நிற்கின்றனர். அதனால் பிரதான சிறுபான்மை இனமென்ற வகையில் அவர்கள் அரசாங்கத்தில் வகிக்கக்கூடிய அமைச்சுக்கள் எதையும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

ஆனால் முஸ்லிம்கள் அப்படியின்றி அரசாங்கத்தில் அங்கம் வகித்து அமைச்சுகளையும் பொறுப்பேற்றுள்ளார்கள். இதில் இவை பிரச்சனையின் பிரதான பாத்திரவாளியாகி பாதிப்புகளுக்கு உள்ளானவர்களாக தமிழர்களே பெரும்பாலும் இருந்தாலும் இவ்விடயத்துக்கு உரிய புனர்வாழ்வு அமைச்சு முஸ்லிம் காங்கிரஸுக்கே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசாங்கத்தில் சேர்ந்து அமைச்சுப் பொறுப்புகளைக் கையேற்க முன்வராத வடக்கு கிழக்கு தமிழ்க் கட்சிகளின் அரசியல் நிலைப்பாட்டை பலஹீனமாக கருதி, அரசாங்கத்துடனான உறவையும், அமைச்சுப் பதவிகளின் அதிகாரம் மற்றும் செல்வாக்கையும் பிரயோகித்து இனப்பிரச்சனைக்கான தீர்வு முயற்சியில் அரசியல் சூழ்ச்சிகளால் காரியம் சாதித்துக் கொள்ள முனைவது ஆரோக்கியமானதல்ல. இப்படிக் கூறவேண்டிய நிலைமையை முஸ்லிம் காங்கிரஸே உருவாக்கியும் தருகிறது.

வடக்கு-கிழக்கு பிராந்தியத்துக்கான இடைக்கால நிர்வாக சபையில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த (முஸ்லிம்) பதில் முதலமைச்சருக்கான அமைச்சுக்களில் மீண்டும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவையும் உள்ளடங்குமென தீர்வுத்திட்டத்திலேயே 'ரிசேர்வ்' பண்ணி வைக்க விளைந்ததானது அதன் அதிகப் பிரசங்கித்தனமான நடத்தையைக் காட்டுகிறது.

இன்றைய நிலைமை புரியாமல் ஆடுகின்ற இந்த ஆட்டங்கள் அவரவர் சுயரூபத்தை வெளிப்படுத்துவதைத் தவிர வேறு எதையும் சாதிக்கப் போவதில்லை. ஒருபுறம் யுத்தம் அதி உச்சக்கட்டத்தை அடைந்து சற்று வேறுபட்டிருந்தால் யாழ்ப்பாணம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்திருக்கும் நிலைமையை எட்டியிருக்க, இன்னும் அந்த நிலைமை பெருமளவு மாறாது எப்போது என்ன நிகழுமென்று தெரியாதவாறிருக்க, மறுபக்கத்தில் தமிழர்களின் அபிலாஷைகளைக் கேவலப்படுத்தும் அரசியல் சூதாட்டத்தில் இவர்கள் இறங்கியிருக்கிறார்கள்.

இதேவேளை ஒருசில தினங்களுக்கு முன் முஸ்லிம் காங்கிரஸ் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கிழக்கு மாகாணத்தில் ஆற்றிய உரையொன்றில் புலிகள் பங்குபற்றாமல் இவ்வரசியல் தீர்வு வெற்றியளிக்காதெனவும், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் விழைந்த மாகாணசபை வெற்றியளிக்காததன் காரணமும் புலிகள் பங்கு பற்றாமையேயெனவும் உதாரணம் காட்டிப் பேசியுள்ளார்.

அப்படிப் புலிகள் பங்குபற்றுவதானால் முஸ்லிம் காங்கிரஸின் இப்படியான சிபாரிசுகளை ஏற்கப் போகிறார்களா என்று ஏன் அவர்களால் எண்ண முடியவில்லை. புலிகள் பங்குபற்ற வேண்டுமென விரும்புபவர்கள் புலிகள் ஏற்க மறுக்கும் சிபாரிசுகளை ஏன் முன்வைக்கிறார்களாம்? புலிகளின் பங்குபற்றலின் அவசியத்தை வலியுறுத்தி கிழக்கு மாகாணத்தில் உரையாற்றிய பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து என்ன கூறப்போகிறார்? இவரது கட்சி, உத்தேச இடைக்கால நிர்வாக சபையின் 5 வருட காலத்தின் பின் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நிகழாவிட்டால் வடக்கும் கிழக்கும் தானாகவே பிரிய வேண்டுமென வலியுறுத்தும்போது அவர் புலிகளை எப்படி திருப்தி செய்ய முடியுமென நினைக்கிறார்?

இல்லையேல், புலிகள் வரப்போவதில்லையென்று தெரிந்துகொண்டு, தமது அரசியல் தந்திரங்களை ஒருபுறம் நகர்த்திக்கொண்டு மறு புறத்தில் அப்பாவித்தனமாகப் பேசும் சாதுரியமான அரசியல் மேடைப்பேச்சா இது?

எவ்வாறாயினும், கிழக்கில் தொடர்ச்சியாக நிகழ்ந்த இன்னும் நிகழ்ந்து வருகின்ற திட்டமிட்ட குடியேற்றங்களால் பல தமிழ்க் கிராமங்கள் பறிபோய், பெயர்மாறி, சனத்தொகை விகிதாசாரமே மாறிப்போயிருக்கும் நிலையில், யுத்த அனர்த்தங்களால் மேலும் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து சென்றிருக்கும் நிலையில் கிழக்கில் நிகழ்த்தப்படும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு அப் பகுதிக்கு உரித்தான மக்களின் கருத்தாக எவ்வாறு அமையுமென இவர்கள் கூற வேண்டும்.

பண்டா-செல்வா ஒப்பந்தம் நிகழ்ந்த போது கிழக்கில் இருந்த தமிழர்களின் விகிதாசாரமென்ன, சிங்களவர்களின் விகிதாசாரமென்ன, தமிழர்களும் சிங்களவர்களும் வசித்த நிலப்பரப்புகள் என்னென்ன, இன்று அவை என்னென்னவென ஒப்பிட்டால் நிகழ்ந்துள்ள மோசடி என்னவென எவருக்கும் சட்டெனவே புரியும். இப்போது கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பைக் கோருவது இம் மோசடியை அங்கீகரிப்பதும் நியாயப் படுத்துவதுமாகவே அமையும். சிங்களக் கட்சிகளுக்கு அந்தத் தேவை இருக்கலாம். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் அதற்குத் துணைபோகப் போகிறதா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நிகழ்த்துவதை எதிர்க்கும் தமிழ்க் கட்சியின் நிலைப்பாடானது வெறுமனே கிழக்கின் சிங்கள முஸ்லிம் சமூகங்கள் சேர்ந்து வடக்கு கிழக்கு இணைப்பைத் துண்டாடி விடும் என்ற அச்சத்தால் ஏற்பட்டதல்ல. மாறாக வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம் என்ற அடிப்படை எண்ணக்கருவின் பாற்பட்டது.

அனைத்துத் தமிழ் விடுதலை இயக்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒன்றாக முன்வைத்த திம்புக் கோரிக்கைகளிலும் இத் தாயகக் கோட்பாடு முன்வைக்கப்பட்டது. இன்னும் எல்லாத் தமிழ்கட்சிகளும், விடுதலைப் புலிகளும் வலியுறுத்தி வருவது இது.



திம்புக் கோட்பாடுகளில் முன்வைக்கப்பட்ட மற்றைய இரு கோட்பாடுகளான 'தமிழ் மக்களை ஒரு தேசிய இனமென அங்கிகரிக்கவேண்டும்,' 'தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்' என்பனவும் இத்தாயகக் கோட்பாட்டோடு பின்னிப் பிணைந்த விடயங்களே.

**-நரன்-**

தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் என்று அடையாளப்படுத்துவதற்கு இத் தொடர்ச்சியான பிரதேசத்தை வலியுறுத்துவது அவசியமாகிறது.

ஒரு தேசிய இனமென்றால் அதற்கு நான்கு பிரதான அடிப்படைகள் இருக்க வேண்டுமென ஸ்டார்லின் வரையறுத்திருந்தார். அதாவது, ஒரு பொது மொழி, தொடர்ச்சியான ஒரு பொதுப் பிரதேசம், ஒரு பொதுக் கலாசார உணர்வு, ஒரு பொதுப் பொருளாதாரம் என்பன இவ்வடிப்படைக் கூறுகள் என வலியுறுத்தியிருந்தார்.

இதில் ஒரு பொதுப் பிரதேசத்தின் தொடர்ச்சி அறுந்தால் அது இருவேறு பட்ட தேசிய இணக்கங்களாகி விடும். உதாரணமாக ஆங்கிலத்தைப் பொது மொழியாகக் கொண்ட மக்கள் இங்கிலாந்திலிருந்தே அமெரிக்கா சென்று குடியேறினார்கள்.

ஆனால் இங்கிலாந்தும் அமெரிக்காவும் தொடர்பில்லாத இரு பிரதேசங்களாக அமைவதால் அமெரிக்கர்களும், பிரித்தானியர்களும் இருவேறு தேசிய இனங்களாகப் பரிணமித்தனர். அங்கு அவர்களுக்கான வேறுபட்ட பொருளாதார உறவுகள் உருவாகின.

இதேபோலத்தான் இங்கிலாந்திலிருந்து அவுஸ்திரேலியா சென்று குடியேறியவர்களுமாவர்.

எனவேதான் தமிழ் மக்களின் தொடர்ச்சியான நிலப்பரப்பைக் காப்பாற்றிக் கொள்வது தமது தேசிய இன அடையாளத்தைக் காப்பாற்றிக் கொள்வதுடன் பின்னிப்பிணைந்த ஒன்றாக அமைந்துள்ளது.

தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் இத் தொடர்ச்சியான பிரதேசமென்பது இன்றியமையாததாக உள்ளது.

சுயநிர்ணய உரிமையென்பது ஒரு தேசிய இனம் தனது தலைவிதியை தானே நிர்ணயித்துக் கொள்வதற்கான உரிமையாகும். பல்வேறு தேசிய இனங்கள் ஒன்றாக வாழும் போது ஒவ்வொரு தேசிய இனத்துக்குமான இச் சுயநிர்ணய உரிமை முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக சிறுபான்மைத் தேசிய இனங்கள் பெரும்பான்மைத் தேசிய இனங்களின் ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகக் கூடிய சந்தர்ப்பங்களில் இச் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை வலுப்பெறுகின்றது.

சுயநிர்ணய உரிமையென்பது பிரிந்து செல்வதற்கான உரிமையைக் கொண்டிருந்தாலும் பிரிந்து செல்வதற்கான உரிமைதான் சுயநிர்ணய உரிமையென அர்த்தம் கொள்வது தவறானதாகும். அவ்வாறான அர்த்தத்துடனேயே தமிழ் மக்களுக்கு இலங்கையில் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

சுயநிர்ணய உரிமை ஒரு விவகாரத்தில் கணவன் மனைவிக்கு உள்ள உரிமை போன்றது. இருவரும் பிரிந்து செல்லக்கூடிய உரிமையுடனேயே சேர்ந்து வாழும் திருமண பந்தத்துள் நுளைகிறார்கள். இதை அவர்கள் பிரிவதற்காகத் திருமணம் செய்வதில்லை. ஆனால் பிரிந்து செல்லக்கூடிய உரிமையைக் கொண்டிருப்பதுதான் அவர்கள் எவ்வித அச்சமும் சந்தேகமுமின்றி சேர்ந்து வாழ்வதை உறுதிப்படுத்துகிறது.

இதையே அண்மைய பேட்டியொன்றில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை பிரிவினைக் கோரிக்கையாக எண்ணி ஸ்ரீலங்கா அரசாங்கம் அஞ்சத்தேவையில்லையெனக் குறிப்பிட்டிருந்தார்.

இச்சுயநிர்ணய உரிமையை அதாவது தமது தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் உரிமையைப் பிரயோகிப்பதற்கு அதாவது தமக்கென ஒரு அரசியல் பொருளாதார சமூக வாழ்வைக் கட்டியமைப்பதற்கும் தமிழ் மக்களுக்கு இத் தாயகக் கோட்பாடு அடிப்படையம்சமாக அமைகிறது.

ஆனால் இத்தாற்பரியத்தை மறுதலிப்பதும் சிதைப்பதுமே கடந்தகால ஆட்சிகளின் நோக்கமாக இருந்தது. இதற்கெனவே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக வடக்கையும் கிழக்கையும் நிலப்பரப்பால் தொடர்பறுந்து போகச் செய்யும் திட்டத்துடனேயே வெலியோயாக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சூழ்ச்சியின் எண்ணக் கிடக்கையே இப்போதைய பேச்சுக்களில் வடக்கு-கிழக்கு இணைப்பைப் பிரிக்குமுகமாக ஏற்பாடுகள் பற்றி இவர்கள் பெரும் அக்கறை செலுத்துவதில் வெளிப்படுகிறது. அந்த நோக்கத்துக்கு முஸ்லிம் தலைமைகளும் பலியாகிப் போனால் அது இந் நாட்டின் சாபக்கேட்டுக்கு வழி வகுத்த வரலாற்றுத் துரோகமாக அமைந்துவிடும். ○

## செய்திச் சிதறல்

✪ புதிய அரசியல் யாப்பொன்றினை உருவாக்குவது தொடர்பாக ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிக்கும் இடையில் ஜனாதிபதியின் உத்தியோக வாசஸ்தலமான அலரி மாளிகையில் பல கூட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன. சந்திப்புக்கள் சுமுகமான முறையில் நடைபெற்று வருவதாகவும் அரசியல் யாப்பின் பல அம்சங்கள் தொடர்பாக நல்லிணக்கங்கள் ஏற்பட்டு வருவதாகவும் ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்தது. இந்த நாட்டில் பேரழிவை ஏற்படுத்தி வரும் இனப்பிரச்சனைக்கு ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்றே பலரும் கருதினர். ஆனால் 'பால் திரண்டு வரும்போது தாழி உடைவது போல்' கடந்த 21ம் திகதி வெள்ளிக்கிழமையன்று ஐ.தே.கட்சியின் தலைவர் வெளிநடப்புச் செய்துள்ளார். அண்மையில் திரு.ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் சென்றிருந்தபோது, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரமுகர் ஒருவரைச் சந்தித்து உரையாடியதாக அரச சார்பு ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தமை தொடர்பாகவே அவர் ஆலோசனைக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்ததாக தெரிய வருகிறது.

✪ இலங்கையைச் சேர்ந்த பிரபலமான ஒரு வர்த்தகர் சார்ள்ஸ் ஞானகோன். இவருக்கு சிங்கப்பூரில் வர்த்தக நிறுவனங்கள் இருக்கின்றன. இவரை புலிகள் இயக்க தலைவர்களுள் ஒருவரென்றும், புலிகளுக்கான ஆயுதங்களை கப்பல்களில் ஏற்றி இலங்கையில் புலிகளுக்கு அனுப்பி வைப்பதில் ஒத்தாசை புரிபவரென்றும் ஏரிக்கரைப் பத்திரிகைகளும், அரசு சார்பு வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் குறிப்பிட்டு செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. திரு.ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் சென்றிருந்தபோது அங்கு வைத்து சார்ள்ஸ் ஞானகோனைச் சந்தித்து உரையாடியுள்ளார் என்றும் செய்திகளில் கூறப்பட்டிருந்தது. அதுதவிர, கொள்ளுப்பிட்டியிலுள்ள திரு.ஞானகோனின் வீட்டில் வசித்து வந்த ஞானகோனின் மனைவியின் சகோதரியை, கொள்ளுப்பிட்டி பொலிஸார் ஒரு நாள் நள்ளிரவு சென்று கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் கூட ரணில் விக்கிரமசிங்கா மீது அரச சார்பு ஊடகங்களினால் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளுடன் தொடர்புள்ளதாக இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

✪ அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை ஒரு போதும் ஏற்க முடியாதென பௌத்த மத உயர் பீடாதிபதிகளான மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் தலைவர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். பாராளுமன்றத்தில் தீர்வுத்திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இத்திட்டத்துக்கு ஆதரவளிக்கக் கூடாதென பீடாதிபதிகள் கேட்டுள்ளனர்.

✪ சீனாவிலிருந்து இலங்கை விமானப் படைக்கென அண்மையில் கொள்முதல் செய்யப்பட்ட F-5T போர் விமானமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை 23ம் திகதியன்று கட்டுநாயக்க விமான நிலைய ஓடு பாதையில் வீழ்ந்து தீப்பிடித்து எரிந்துள்ளது. இயந்திரக் கோளாறு காரணமாக இவ் விமானம் வீழ்ந்து நொருங்கிய போதிலும் இவ்விமானத்தைச் செலுத்திய விமானி பலத்த காயங்களுடன் உயிர்த்தப்பியுள்ளார்.

✪ யாழ்ப்பாணம் கொழும்புத்துறையிலுள்ள விடுதலைப் புலிகளின் ஆயுதக் கிடங்கொன்று இராணுவத் தாக்குதலுக்குட்பட்டு தீப்பிடித்து எரிந்து போனதாக அரச படைச் செய்திகள் கூறுகின்றன. சரசாலை, கோப்பாய் ஆகிய இடங்களிலும் இராணுவத்தினரின் தாக்குதலில் பல புலிகள் இயக்க உறுப்பினர்கள் மாண்டதாகவும் படையினரின் செய்தி குறிப்பிடுகிறது.

✪ எதிர்வரும் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் ஆளுங் கட்சியுடன் இணைந்து போட்டியிடாமல் தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவிக்கப்படுகிறது. இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுக் கொள்கையாளர்கள் ஆளுங்கட்சியான பொதுஜன முன்னணியில் இணைந்து போட்டியிடப் போவதாக அறிவிக்கப்படுகிறது.

✪ ஐக்கிய தேசிய கட்சியின் பிரமுகரான டாக்டர் கருணாசேன கொடிதுவக்கு, ஆளுங்கட்சியின் அரசியல் சீர்திருத்தத் திட்டத்தை அவசரமாக பாராளுமன்றத்தில் நுழைத்து அதனைச் சட்டமாக்கி விட வேண்டுமென்று ஏன் அவசரப்படுத்துகிறார்கள் என்று தமக்கு விளங்கவில்லை என்று கூறியிருக்கிறார். முழு நாட்டையுமே பெரும் தாக்கத்துக்கு உள்ளாக்கக் கூடிய மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டத்தை இந்நாட்டு மக்கள் தீர ஆராய்ந்து பார்ப்பதற்கே அவகாசம் கொடுக்காமல் சட்டமாக்க முனைவது பொருத்தமாகத் தெரியவில்லை என்று அவர் மேலும் கூறியிருக்கிறார். ■

# அண்டை மண்டலத்தில்....

தொகுப்பு: திருமகன்



சோனியா

நேருவின் குடும்பத்தைச் சேர்ந்த இப்போதைய காங்கிரஸின் மீது இவருக்கு நம்பிக்கை இல்லை.

இவர் காங்கிரஸ் கட்சியைப் பற்றி தெரிவித்த கருத்து இது தான்:

"காங்கிரஸ் கட்சியை உயிர்ப்பிக்க முடியாத அளவிற்கு நாசம் செய்துவிட்டவர் இந்திராகாந்தி. காங்கிரஸை அறுத்தெறிந்து உட்கட்சி ஜனநாயகத்தையும் கொன்றுவிட்ட இந்திராவை மன்னிக்கவே முடியாது.

ஆனால் ராஜீவ் காந்தி முற்றிலும் மாறுபட்டவர். அவர் அடிக்கடி சோனியாவை அழைத்துக் கொண்டு என்னைப் பார்க்க வருவார். அம்மாவை விட எங்கள் குடும்பத்தின் மீது அதிக பாசம் வைத்திருந்தவர் ராஜீவ்.

ராஜீவ் காந்தியாலும் கட்சியைச் சீரமைக்க முடியவில்லை. சோனியாவாலும் கட்சியைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை," என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் நயனதாரா.

## "சோனியாவால் காங்கிரஸைக் காப்பாற்ற முடியாது!"

'சோனியாவால் காங்கிரஸை எப்படிக் காப்பாற்ற முடியும்? அந்தக் கட்சியைத்தான் இந்திரா காந்தி கொன்று விட்டாரே!'



நயனதாரா

இப்படிச் சொல்லியிருப்பவர் வேறுயாருமல்ல; முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவின் குடும்பத்தைச் சேந்தவர்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார். நேருவின் சகோதரி விஜயலட்சுமி பண்டித்தின் மகள் நயனதாரா ஷஹல் தான் அப்படிச் சொல்லியிருக்கிறார்.

நயனதாராவுக்கு 73 வயது.

சிறந்த எழுத்தாளர்.

இந்திராகாந்தியின் மைத்துனி.


ராஜீவ் காந்தியின் மாமியார்.

'இந்தக் காலை நேரப்பொழுதில்' என்ற நாவலை அண்மையில் வெளியிட்டிருக்கும் நயனதாராவுக்கு அரசியலும் தெரியும்.

இந்தியா சுதந்திரமடைந்த பின் தலைமைப் பொறுப்பேற்று வந்த நேரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மறுபடியும் தலைமைப் பொறுப் பேறக இயலாதா? பிரியங்காவினால் காங்கிரஸைக் காப்பாற்ற முடியாதா?' என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில்:

"யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். பிரியங்காவைப் பற்றி எனக்குத் தெரியாது. இப்போது அரசியல் வியாபாரமாகி விட்டது என்று மட்டும் தான் சொல்ல முடியும்!" என்கிறார் நயனதாரா.

## கராத்தே வீரனா? கராத்தேவில்லனா?



அடிக்கடி சர்ச்சைக்களில் சிக்கிக் கொள்பவர்ராக இருக்கிறார் கராத்தே வீரர் ஹுஸைனி.

தன்னிடம் வேலை பார்த்தவர் களைக் கொடுமைப்படுத்தியதாகக் கூறி ஜூலை 17ம் திகதி இவர் கைது செய்யப்பட்டார். ஹுஸைனி சென்னை யில் உள்ள பெசண்ட் நகரில் 'ஹை புரொ.ஃபைல்' என்ற பாது காப்புப் பிரிவை நடத்தி வருகிறார்.

"திரைப்பட பாதுகாப்புப் பிரிவில் உங்களுக்கு வேலை; மாதம் 3,500 ரூபா சம்பளம்; உணவும் இருப்பிட வசதியும் இலவசம்," என்று கூறி வேலைக்கு தேர்ந்தெடுத்தாகவும், "சொன்னபடி வேலையோ பயிற்சியோ தராததால் வேலை வேண்டாம். எங்களது சான்றிதழ்களைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கேட்ட போது ஹுஸைனி தாக்கிவிட்டார்" என்று அவரிடம் வேலை பார்த்த 8 பேர் பொலிஸில் கடந்த மாதம் புகார் செய்தனர்.

புகார் செய்யப்பட்டதும் ஹுஸைனியின் வீடு பொலிஸாரினால் சோதனையிடப்பட்டது. அதன் பின் இம்மாதம் ஹுஸைனி கைது செய்யப்பட்டார்.

கடந்த சில வருடங்களாக ஹுஸைனி மீது பல குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளன. இவர் உண்மையான கராத்தே வீரர் இல்லை என்றும், பரபரப்புக்காக வித்தை காட்டுபவர் என்றும் சிலர் கூறி வருகின்றனர்.

ஹுஸைனி மீது ஏற்கனவே ஆள் கடத்தல், போலி கடவுச்சீட்டு வைத்திருந்தது தொடர்பான வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இப்படி அவரைப் பற்றி பல்வேறு குற்றச்சாட்டுகளை வைத்தாலும் அவர் நடத்தும் 'கராத்தே பள்ளி'யைச் சேர்ந்த சிலர் கூறியவை:

'முதல்வன்' படம் திரையிட்ட போது இதன் திருட்டு வீடியோ காசட்டுகளைத் தடுக்க மாஸ்டரிடம் (ஹுஸைனியிடம்) பொறுப்பு ஒப்படைக் கப்பட்டது. அந்த வகையில் அதிக திருட்டு வி.சி.டி.க்கள் மதுரையில் மாஸ்டரால் கைப்பற்றப் பட்டன. இந்த திருட்டு வி.சி.டி.க்கள் மதுரையில் நடமாடியதற்குக் காரணம் ஆளுங் கட்சியின் அதிகாரபூர்வமானவர் ஒருவரின் ஏற்பாடுதான். அன்றைக்கே எங்கள் மாஸ்டர் மீது ஒரு 'கண்' வைத்து விட்டார்கள்.

அதுவும் போக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, முன்னாள் டி.ஜி.பி. தேவாரம் போன்றவர்களோடு மாஸ்டர் நட்பாக இருந்ததால், தி.மு.க.வுக்கு எப்போதுமே எங்கள் மாஸ்டர் எதிரி என்ற மாயையை அவர்களாகவே ஏற்படுத்திக் கொண்டு ஒரு சின்னப் புகாரை பூதாகரமாக்கி விட்டார்கள்.

"எங்களிடம் வேலை செய்ய வந்தவர்களிடம் நாங்கள் என்ன சொன்னோமோ அதன்படிதான் நடந்து கொண்டோம். அதில் சொஞ்சம் கூட மாறவில்லை. ஆனால் அவர்கள் வேலைபார்க்கும் இடங்களில் ஏதாவது தவறு செய்து விட்டு ஓடி விட்டால் நாங்கள் அவர்களை எங்கே போய்ப் பிடிப்பது? அதற்காகத்தான் சான்றிதழ்களை வாங்கி வைக்கிறோம். பொதுவாக இந்த நடைமுறை எல்லா இடங்களிலும் நடப்பதுதானே?"



ஹுஸைனி தரப்பிலிருந்து இப்படியொரு அழுத்தம் திருத்தமான ஒரு பதில்.

## வெண்குஷ்டத்திற்கு புதிய மருந்து

வெண்குஷ்ட நோயைக்குணப்படுத்தும் புதிய களிம்பு மருந்து ஒன்றினை இந்திய மருத்துவ விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளதாக அண்மையில் இந்திய ஆந்திர மாநிலத் தலைநகரான ஹைதராபாத்தில் அறிவிக்கப் பட்டுள்ளது.

வெண் குஷ்டம் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் நோயல்ல. இருப்பினும் இந்நோய் கண்டவர்கள் மனதளவில் பெரும் பாதிப்புக்குள்ளாகிவிட நேரிடுகிறது. இரத்தத்திலுள்ள ஏதோ ஒரு குறைபாட்டினதால் சருமத்தில். ஆங்காங்கே வெள்ளை அல்லது ரோஸ் வர்ண தழும்புகள் ஏற்படுகின்றன. சிலருக்கு இது உடல் முழுவதும் பரவி அந்த நபரை வெள்ளைக்கார இனத்தைச் சேர்ந்தவரோ என ஐயுற வைக்கிறது. இதனால் அவர் தன்னைத்தானே தாழ்வு மனப்பான்மைக்கு ஆட்படுத்தி விடுகிறார்.

இந்த நோயாளிகளுக்கு ஒரு புதிய களிம்பு ஒன்றினை வடஇந்திய டேராடூன் ஹிமாலயன் மருத்துவக் கழக விஞ்ஞானியான இராமையா என்பவர் கண்டுபிடித்துள்ளார்.

இந்தியாவிலுள்ள பல மருத்துவ மனைகளில் வெண்குஷ்டதால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் 112 பேருக்கு இக்களிம்பு மருந்து சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் அனைவரும் குணமடைந்து விட்டதாகத் தெரியவருகிறது. இந்த மருந்தைப் பயன்படுத்துவதன் மூலம் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரியவருகிறது.

அமெரிக்காவிலுள்ள மருந்துவக் காப்புரிமை நிறுவனம், தான் கண்டுபிடித்துள்ள மருந்துக்கு விரைவில் காப்புரிமை வழங்க விருப்பதாக டாக்டர் இராமையா தெரிவித்துள்ளார்.

மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு

## திருப்பி அனுப்பப்படுவோர் இங்குபடும் துயரங்கள் 07

**வெளி நாடுகளுக்குச் சென்றவர்கள், அங்கு அவர்களுடைய தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இங்கு வருபவர்கள் படும் துயரம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் முதல் ஆறு பகுதிகளையும் கடந்த வாரங்களில் இங்கு தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.**

பிரான்ஸ் நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்ட முத்ததம்பி வனிதா என்பவர் கைது செய்யப்பட்டிருந்த போது, அவருடைய நிலைபற்றி மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள், தொல்லை தவிர்ப்புக் குழுவின் செயலாளருக்கு 1998 டிசம்பர் 24ம் திகதியன்று ஒரு கடிதத்தை எழுதினார். அந்த இளம் பெண் பட்ட துன்பங்களையெல்லாம் அதில் விபரித்திருந்தார்.

கொழும்பு நகரில் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருப்பவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் அனுபவிக்கும் துயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

### நாடுகடத்தப்படும் பெண்கள்

பிறநாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களை எடுத்துக் காட்டுவதற்கு உதாரணமாக சில சம்பவங்களைத் தெரிவிக்கிறோம்.

ஒரு பெண் சுவிற்ஸர்லாந்தில் அடைக்கலம் கோரிவிண்ணப்பித்திருந்தார். அவருடைய கணவர் அந்நாட்டில் வசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டார். ஆனால் இப்பெண் திருப்பி அனுப்பப்பட்டார். இப்பெண் மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளரை வந்து கண்டார். இவருடைய பெற்றார் வவுனியாவில் இருந்தனர். அவர்கள் கொழும்பில் வந்து தங்கியிருப்பதற்கு ஏற்ற வசதி படைத்தவர்களல்ல. ஆகவே குறிப்பிட்ட பெண்மணி வவுனியா சென்று தனது பெற்றாரைப் பார்த்துவிட்டு மூன்று நாட்களுக்குள் கொழும்பு திரும்பி விடுவதற்கு மட்டுமே இவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. இவருடைய பெற்றார் கொழும்பில் வந்து தங்கியிருப்பதற்கு அனுமதி கிடைத்தாலும்-கொழும்பு நகரில் வாழ்க்கைச் செலவு மிக அதிகமாக இருப்பதனால் தங்கள் மகளுடன் இங்கு தங்குவதற்கு அவர்களால் முடியவில்லை. கொழும்பிலுள்ள விடுதிகளில் தமிழ்ப் பெண்கள் தனித்து தங்கியிருக்க முடியாது. அது அவர்களுடைய கலாசாரத்துக்கு உகந்ததல்ல என்பது மட்டுமல்லாமல், அவர்கள் பிற ஆண்களின் துன்புறுத்தலுக்கும் உட்படுத்தப்படுவார்கள்.

கொழும்பிலுள்ள விடுதிகளில் வழமையாக ஒரு பெண் தனது தாயார், அல்லது தன்னுடைய உறவினர் எவருடனாவது தான் தங்கியிருக்க முடியும். தன் பிள்ளைகளுடனும் கூட ஒரு பெண் கொழும்பில் தங்கியிருக்க முடியாது. தொல்லைத் தவிர்ப்புக் குழுவினருக்கு மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் 27.11.1998 திகதியிட்டு அனுப்பிவைத்த ஒரு கடிதத்தை இதற்குச் சான்றாகத் தருகிறோம்.

திருமதி என்.மகேஸ்வரி என்ற தமிழ் பெண்-அவருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேயரில் கல்கிசை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். இப்பெண்ணுடன் அவருடைய பதினொரு வயது மகனும் ஒன்பது வயது மருமகளும் உடனிருந்தனர். திருமதி மகேஸ்வரி1997 ஏப்ரல் முதல் 1998 ஆகஸ்ட் மாதம்வரை தடுத்து வைக்கப்பட்டிருந்த பின் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். 27.11.1998 வரை இவருடைய மகனுக்கும் மருமகளுக்கும் என்ன நடந்தது? அவர்கள் எங்கே வைக்கப்பட்டிக்கிறார்கள்; அவர்கள் உயிருடன் தான் இருக்கிறார்களா? என்ற விவரங்கள் எதுவும் தெரியாமல் இருந்தது. அதன் பின்னர்தான் சிங்களச் சிறுவர்களுக்கான ஓரில்லத்தில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்தது. மனிதாபிமானமற்ற இத்தகைய கொடுமைகள் இழைக்கப்படுகின்றன என்பதற்கு இதுவோர் எடுத்துக் காட்டாகும். கொழும்பில் வாழ்கின்ற தமிழர்கள், குறிப்பாக தமிழ்ப் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் இத்தகையன. பிற நாடுகளில் தஞ்சம்கோரி, நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் பெண்கள் கொழும்பில் அனுபவிக்க வேண்டிய துன்பம் இதுவாகும்.

### காணாமல் போதல்

நாடு கடத்தப்பட்டு கொழும்பை வந்தடையும் ஒருவர் காணாமல் போகும் சந்தர்ப்பங்கள் நடைபெறுகின்றன. திரு.நடராஜா நவகிருஷ்ணன் முரளி என்ற தமிழர் அனுபவித்த துன்பங்களை மற்று மோர் எடுத்துக் காட்டாகத் தருகிறோம்.

கடந்த மே மாதம் இவர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். ஆனால் 15.12.1999 அன்று இராணுவம் இவரைக் கைது செய்தது. அன்றைய தினம் இரவு உணவை வாங்குவதற்காக கடைக்குச் சென்றபோதே இவர் கைதானார். இவர் கொழும்பு மாவட்டத்திலுள்ள மஹரகம இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது.சர்வதேச மன்னிப்புச்சபை இவருடைய விசாரணையை துரிதமாக முடிக்கும்படி கேட்டுக்கொண்டது. இவருடைய சகோதரரின் கூற்றுப்படி இவருடன் மற்றும் ஏழு தமிழர்களை இரகசியமாகவே வைத்திருப்பதாகத் தெரிகிறது. இவர் ரஷ்யா, உக்ரேன் மற்றும் ஒல்லாந்து ஊடாக ஜெர்மன் சென்று அங்கு தஞ்சம் கோரினார். அங்கிருந்துதான் இவர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார் என்று எண்ணத் தோன்றுகிறது. இவர் காணாமல் போயிருப்பது எங்களுக்குக் கவலை தருகிறது.

### சர்வதேச மன்னிப்புச் சபையின் விண்ணப்பம்

நடராஜா நவகிருஷ்ணன் முரளி வயது 27 மேற்படி பெயருடைய தமிழர் 1999 டிசம்பர் 15ம் திகதியன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிகிறது. சர்வதேச மன்னிப்புச்சபைக்கு இது தொடர்பாகக் கிடைத்த உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி, கொழும்பு நகரிலுள்ள உளவுப் பிரிவின் ஆணையத்தில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

நடராஜா நவகிருஷ்ணன் முரளி கொழும்பு-வெள்ளவத்தையிலுள்ள தொலைத்தொடர்பு மையமொன்றில் பணியிலிருந்தார். இரவு 9.30 அளவில் இவர் உணவு வாங்குவதற்காகச் சென்ற போது கைது செய்யப்பட்டுள்ளார். இதற்கான சாட்சி கூறுவதற்கு எவரும் முன்வரவில்லை. எனினும் அந்தப் பகுதியில் இராணுவவாகனமொன்று நின்றதை பலர் உறுதிப்படுத்தினர்.

இவருடைய உறவினர்கள் பொலிஸ் நிலையங்களில் விசாரித்தனர். இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடமும் முறையிட்டனர். தொல்லைத்தவிர்ப்புக் குழுவிடமும் இதுபற்றி விசாரிப்பதற்கு வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

நடராஜா நவகிருஷ்ணன் முரளி யாழ் மாவட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். 1999 மே மாதம் போலாந்திலிருந்து இவர் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தை விடுதியொன்றில் அறையெடுத்துத் தங்கியுள்ளார். பகல் வேளைகளில் இவர் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பார். இரவு வேளைகளில் தொலைத்தொடர்பு மையத்தில் பணிபுரிந்து வந்தார்.

டிசம்பர் 21ம் திகதி ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டும் அதனைத் தொடர்ந்து கொழும்பில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்தும் கொழும்பில் வசிக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். இக்குண்டுத் தாக்குதல்களை தமிழர்களுக்கான ஒரு தனி நாட்டை அமைப்பதற்கு போராடி வரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தான் நடத்தி வருகிறது என்பதனால் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் தமிழ் இளைஞர்கள் இந்த இயக்கத்துடன் தொடர்பு வைத்துள்ளனர். அல்லது அந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவ்வாறு கைது செய்யப்படுகின்றனர்.

1995ல் கொழும்பிலும் சுற்று வட்டாரங்களிலும் காணப்படும் ஏரிகளில் 31 தமிழர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதற்குப் பிறகு கொழும்பில் முதன் முதலாக நடராஜா நவகிருஷ்ணன் முரளி என்பவர்தான் காணாமல் போயுள்ளார். உத்தியோகப் பூர்வமான விசாரணைகளின் அடிப்படையில் மேற்படி 31 சடலங்களும் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு இந்நீர் நிலைகளில் அவர்களுடைய சடலங்கள் வீசப்பட்டுள்ளன என தெரிய வருகிறது.

இப்படுகொலைகளை புரிந்தவர்களுக்கெதிராக வழக்குகள் போடப்பட்டிருந்த போதிலும் எதுவும் துரிதமாக நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(மேலும் வரும்)

# ஆளுங்கட்சி—எதிர்க்கட்சி பேச்சிலிருந்து ரணில் வெளியேற்றம்:
# 'நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியது சாட்டு!'

ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள அரசியல் உடன்பாடுகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

அரசு, எதிர்க்கட்சிப் பேச்சுக்களின்போது அரச தரப்பின் முக்கிய உறுப்பினராக இருந்தவரே நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கடந்தவாரம் கண்டியில் மல்வத்த பீடத்தின் தலைவரான விபஸ்ஸி தேரரிடம் அரசு–எதிர்க்கட்சி உடன்பாடு பற்றி விளக்கியதோடு, உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் குறித்தும் எடுத்துக் கூறியிருந்தார்.

பௌத்த மகாசங்கத்தினரின் ஆதரவை புதிய அரசியலமைப்புக்குறித்து முழு அளவில் பெறும் விதத்திலேயே பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மல்வத்த பீடாதிபதியைச் சந்தித்திருந்தார்.

இதற்குமுன்பதாக ஜனாதிபதி சந்திரிக்கா

திரு. ரணில் விக்கிரமசிங்க அரசு தரப்புடனான இறுதிக்கட்டப் பேச்சுக்களில் இருந்து வெளியேறியமைக்கு அவர் குறித்து வெளியான சில கண்டனப் பிரசாரங்களே முக்கிய காரணமாக அமைந்திருந்தன.

அண்மையில் திரு. ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் சென்றிருந்ததாகவும், அங்கே அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் என்று கருதப்படும் ஞானக்கோன் என்ற நபருடன் பேசியிருந்தார் என்றும் அரச தரப்பு பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தன.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்க சந்தித்த ஞானக்கோன் என்பவரது சகோதரி, கொழும்பில் பொலிசாரால் விசாரணைக்குள்ளாகியிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமது அரசியல் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பதாகவே சிங்கப்பூரில் ஞானக்கோன் என்பவருடன் தாம் நடத்தியதாகக் கூறப்படும் பேச்சுவார்த்தை பற்றி அரசதரப்பு விஷமத்தனமாக

ரணிலின் தலைமையைச்சாடியிருப்பதையே அவதானிக்கமுடிகின்றது.

1970ம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் காலஞ்சென்ற பிரதம மந்திரியான டட்லிசேனநாயக்காவுக்கும் ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்குமிடையே கூட உட்கட்சிப்பூசல் நிலவியிருந்தது. அப்போது திரு.டட்லி சேனநாயக்காவை ஓரங்கட்டவும் ஜே.ஆர்.ஜயவர்த்தன பிரயத்தனங்களைச்செய்திருந்தார்.

ஆனால் டட்லி மீதான நல்லபிமானம் ஐக்கிய தேசியக் கட்சியில் அன்று பலம்மிக்கதாகவே இருந்தது. இதன் காரணமாக திரு.டட்லிசேனநாயக்கா மறையும் வரை ஐக்கிய தேசியக் கட்சியினுள் எவ்வித வாலாட்டத்தையும் கொண்டிருக்கமுடியாதவராகவே ஜே.ஆர்.ஜயவர்த்தன இருந்தார்.

டட்லிசேனநாயக்காவின் மறைவையடுத்தே திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தன ஐ.தே.க.வில் காமினிதிசநாயக்கா, லலித் அத்துலத்முதலி, மற்றும் ரணில் விக்கிரமசிங்க போன்ற இளம் அரசியல் வாதிகளைச் சேர்த்துக் கொண்டு தம்

## அலசுவது - இராஜதந்திரி

கொண்டுவரப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் கூட பல்வேறு கபடத்தனங்களையே மையமாகக் கொண்டிருந்தது.

ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்துவது போலவே ஜே.ஆர்.ஜயவர்த்தன இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும் ஏற்க முன்வந்திருந்தார்.

அந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா இலங்கைத் தமிழர்கள் மீது கொண்டிருந்த நல்லபிமானத்தை முடிவுக்குக் கொண்டுவருவது, இந்திய இராணுவத்தை வடக்கு-கிழக்குப்பகுதியில் தமிழ்த் தீவிரவாதத்துக்கு எதிராகத் தூண்டிவிடுவது ஒன்றுக்கு மேற்பட்டதாக இருந்த தமிழ் ஆயுதப்போராட்ட

பிரச்சனைத் தீர்வுத்திட்டம் என்பவை குறித்து ஐ.தே.க.வை பேச்சுக்கு அழைத்து அதனோடு உடன்பாடுகளை எட்ட முன்வந்திருந்தது. ஏனைய காலகட்டங்களில் இதுபோன்ற உடன்பாடுகளை எட்டும்பட்சத்தில் நாட்டுமக்கள் அதனை தேசிய நலன்கருதியதாகவே பெரிதும் நோக்குவார்கள்.

ஆனால் தற்போது பாராளுமன்றத்தேர்தலுக்கு ஓரிரு மாதங்கள் இருக்கும் தறுவாயில் எட்டப்பட்டுள்ள இந்த உடன்பாடென்பது ஆளுங்கட்சிக்கே பெரிதும் வாய்ப்பாக அமையும். அத்துடன் எதிர்க்கட்சி தேர்தல் பிரசாரத்தின் போது 'நாவிழந்த' ஒரு

பண்டாரநாயக்க குமாரதுங்க தமது வாசஸ்தலமான அலரிமாளிகையில் இலங்கையின் சிரேஷ்ட பிக்குமார்கள் சிலரையும் சந்தித்து உத்தேச அரசியலமைப்புச் சீர்த்திருத்தம் தொடர்பாக விளக்கமளித்திருந்தார்.

இருந்தபோதிலும் இலங்கைப் பௌத்தர்களின் செல்வாக்குமிக்க பௌத்தபீடங்களில் ஒன்றாக இருக்கும் கண்டி மல்வத்த பீடத்தின் பிரதம குரு ரம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்ஸி தேரர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸிடம் உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை ஒரு பல்லின, பல மத, கலாச்சாரப் பின்னணிகளைக் கொண்டிருக்கின்ற போதிலும், உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் பௌத்த சமயத்துக்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை என்றும் மல்வத்த பீடாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்குமிடையே உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம், மற்றும் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வு முயற்சி ஆகியவை குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இப்பேச்சுக்கள் சுமார் பதினைந்து சுற்றுக்களைக் கொண்டிருந்தது. இறுதியாக பெரும்பாலானவிடயங்களில் இருதரப்புக்கும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக ஆளுங்கட்சி அறிவித்திருந்தது.

ஆயினும் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான ஒரு நிரந்தரத் தீர்வை எதிர்பார்க்கும் தமிழ் அரசியல் கட்சிகள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உடன்பாடு குறித்து தமது அதிருப்தியை வெளியிட்டிருந்ததுடன், பிரச்சனைக்குரிய அடிப்படை அம்சங்களை உரிய வகையில் இரு தரப்பினராலும் அணுகவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தன. அத்துடன் அரசாங்கம், எதிர்க்கட்சி, மற்றும் தமிழ் அரசியல் தரப்புடன் ஒரு முத்தரப்பு பேச்சுவார்த்தை இடம் பெறவேண்டு மென்பதையும் தமிழ் அரசியல் கட்சிகள் வலியுறுத்தியிருந்தன.

எனவே தமிழ் அரசியல் கட்சிகள் அரசு–எதிர்க்கட்சி உடன்பாடு குறித்து தமது ஆட்சேபனையை வெளியிட்டுள்ள தருணத்திலேயே உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஏற்கப்படக் கூடியதல்ல என்று மல்வத்த பீடாதிபதியும் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் எதிர்க்கட்சித்தலைவர் திரு.ரணில் விக்கிரமசிங்க கூட ஆளுங்கட்சியுடனான பேச்சுக்களின் இறுதிக்கட்டத்திலிருந்து கடந்த வாரம் வெளியேறியிருந்தார்.

நடந்துகொண்டதாகத் தெரிவித்தே திரு.ரணில் விக்கிரமசிங்க அரசுடனான இறுதிக் கட்டப் பேச்சுக்களில் இருந்து வெளி நடப்புச் செய்திருந்தார்.

தற்போதைய அரசியல் நிலவரத்தை நோக்கும் போது பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு இன்னும் ஒரு மாதகாலமே எஞ்சியிருப்பதை அறியமுடிகின்றது.

அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வது, மற்றும் தத்தமக்குரிய தொகுதிகளைத் தெரிவு செய்வது என்பவை தொடர்பாக பூர்வாங்க கூட்டங்களை நடத்திவரக் காணப்படுகின்றன.

ஆளுங்கட்சியான பொது ஜன ஐக்கிய



அமைப்புக்களை நிராயுதபாணிகளாக்குவது போன்றவற்றுடன், மாகாண சபை என்ற அரைகுறை நிர்வாகத்தை வடக்கு-கிழக்கில் திணிப்பதும் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் நோக்கமாக இருந்தது.

இந்தநோக்கங்களில் பலவற்றை நிறைவேற்றுவதில் ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசு வெற்றி கண்டிருந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே ஒரு தில்லுமுல்லான அரசியலைக் கொண்டிருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் பாசறையில் வளர்ந்தவரே ரணில் விக்கிரம சிங்க. அத்துடன் ஜே.ஆரின் நெருங்கிய உறவினர் என்ற ரீதியில் அவரது வாரிசாகவும் ஐக்கிய தேசியக் கட்சியில் இன்று ரணில் விக்கிரமசிங்க தலைமையைக் கொண்டுள்ளார்.

சூழ்நிலைக்கே முகங்கொடுக்கவும் நேரிடும்.

இதன் காரணமாகவே ஒரு பலவீனமான தலைமையை கொண்டுள்ளதோடு தனித்துவமான நிலைப்பாடுகளையும் முன்னெடுக்கமுடியாது இருந்து வரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசதரப்புடனான இறுதிக்கட்டப்பேச்சிலிருந்து வெளிநடப்புச் செய்திருந்தார் என்பதை அனுமானிக்கமுடிகிறது.

அத்துடன் தமது வெளிநடப்புக்கு அண்மையில் தாம் மேற்கொண்ட சிங்கப்பூர் விஜயம்பற்றிய விஷமப் பிரசாரத்தையும் அவர் ஒரு காரணமாகத் தெரிவித்திருந்தார்.

இதனைப் பாரக்கும் போது 'நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாட்டு' என்ற பழமொழியே நினைவுக்கு வருவதையும் உணரமுடிகின்றது.

எது எப்படியிருந்த போதிலும் உத்தேச அரசியல் சீர்திருத்தம், மற்றும் வடக்கு-கிழக்குப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வுயோசனைகள் என்பவை எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

# தம் வழியைத் தனி வழியாக்க வேண்டிய தமிழ் அரசியல் கட்சிகள்!

முன்னணி கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தன்னைப் பலப்படுத்தியதாக இருக்கின்றது. எனவே எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலும் வெற்றிகளையீட்டுவதையே ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி நோக்கமாகக் கொண்டிருப்பதுடன் அதற்கமைவாகவே தனது அரசியல் சதுரங்கத்தையும் தற்போது ஆடிவருகின்றது.

எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை, கடந்த காலங்களில் இடம்பெற்ற மாகாணசபைத்தேர்தல்களில் போதியளவு வெற்றியைப் பெறமுடியாதிருந்தது. ஜனாதிபதித் தேர்தலிலும் தோல்விகண்டிருந்தது.

எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் கடுமையான விமர்சனத்துக்குள்ளாகியிருப்பதுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் என்றிருந்த பலரும் அக்கட்சியிலிருந்து விலகியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.ரணில் மீது அதிருப்தி வெளியிட்ட போதெல்லாம் அவருடன் சேர்ந்திருந்த திரு.ரொனி டி மெல்லும், தற்போது

மனம்போன போக்கில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்டிப் படைத்திருந்தார்.

அத்துடன் நாட்டில்கூட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையையும் கொண்டுவந்திருந்தார்.

காலஞ்சென்ற ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்கு பிரச்சனைகளைத்தூண்டி விடுவது, மற்றும் குழப்பங்ளை ஏற்படுத்துவது, பின்னர் அவற்றிலிருந்து நாசுக்காகத் தப்பி விடுவது போன்றவையெல்லாம் ஒரு கைவந்த கலையாகவே இருந்தன.

இத்தகைய அரசியல் பித்தலாட்டம் காரணமாகவே அவரால் 1978ம் ஆண்டிலிருந்து 1989ம் ஆண்டு வரை இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதியாக பதினொரு வருடகாலம் வரை நீடித்திருக்க முடிந்திருந்தது.

1957ம் ஆண்டில் பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக கண்டியாத்திரை சென்றவரும் ஜே.ஆர்.ஜயவர்த்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் 1983ம் ஆண்டு இனக்கலவரம் இடம்பெற்றதும் அவரது ஆட்சியிலேயாகும். இதனையடுத்து 1987ம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசில்

இருந்தபோதிலும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையை மட்டுமல்ல ஓர் எதிர்க்கட்சி என்ற ரீதியில் அக்கட்சியை தேசியப்பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க முடியாதவாறு வைத்துக் கொண்டுள்ளார் என்பதே தற்போது ரணில் பற்றிய அரசியல் விமர்சனமாக இருந்துவருகின்றது.

இந்நிலையில் தமது கட்சி சார்பில் தனித்துவமான அரசியல் நடிவடிக்கைகளை மேற்கொண்டிராத திரு.ரணில் விக்கிரமசிங்க, ஆளுங்கட்சியின் உத்தேச அரசியல் சீர்திருத்தம் மற்றும் இனப்பிரச்சனை தீர்வுகுறித்த உடன்பாடுகள் என்பவற்றிலும். ஆட்சியாளர்களோடு பெரிதும் ஒத்துப் போகவேண்டிய சந்தர்ப்பமே தோன்றியிருந்தது.

இத்தகைய உடன்பாட்டு விவகாரத்தில் ஆளுங்கட்சியினரோடு ஐக்கிய தேசியக்கட்சி இணங்கியிருக்கலாம். ஆனால் இந்த உடன்பாடு என்ற சமாச்சாரம் பலமடையும் பட்சத்தில் ஆளுங்கட்சிக்கே அது சாதகமானதாக அமையும்.

ஏனெனில் ஆளுங்கட்சியே உத்தேச அரசியலமைப்பு, மற்றும் வடக்கு-கிழக்குப்

தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை தொடர்ந்தும் ஏமாறாமல் இருக்க வேண்டியதே அவசியமானதாக இருக்கின்றது.

அரசு-எதிர்க்கட்சிக்கிடையிலான உத்தேச உடன்பாட்டில் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் காத்திரமான யோசனைகள் எதுவும் இல்லை என்பதை தமிழ் அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக இழுத்தடிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு தமிழர் பிரச்சனைக்கு இன்னும் ஒரு மாதகாலத்தில் பாராளுமன்றம் கலைக்கப்படுமுன்னர் தீர்வுகளை எட்டுவதற்கான சூழ்நிலை தோன்றுமென எதிர்பார்ப்பது மடமையானதாகவே இருக்கும்.

இந்நிலையில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியினரின் பித்தலாட்டத்தைப் பார்த்து அவற்றுக்கு ஏற்றாற்போல் நடப்பதைத் தவிர்த்து தமிழ் அரசியல்கட்சிகள் தமது வழியைத் தனிவழியாக்கி அதனைக் காத்திரப்படுத்துவதே அர்த்தமுள்ள ஒரு நடவடிக்கையாக இருக்க முடியும்.

## அதிரடி அய்யாத்துரை



**டேவிட் வேலுப்பிள்ளை,** யாருடைய பெயர் இது? என்று நீங்கள் யோசிப்பது எனக்குப் புரியுது. உலகில் இன்று தன்னிகரற்றிருக்கும் விமானக் கம்பனியான ஏயார்பஸ் நிறுவனத்தின் முக்கிய பேச்சாளரே இவர். பிரமாண்டமான இரட்டைத்தட்டு பயணிகள் விமானமொன்றை பிரான்ஸின் எயார்பஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இதன்மூலம் அமெரிக்க போயிங் விமானக்கம்பனி ஓரந்தள்ளப்பட்டுவிட்டது. பிரான்ஸின் எயார்பஸ் விமானத்தயாரிப்பு நிறுவனத்தின் பிரதம பேச்சாளரான தமிழ்மகன் டேவிட் வேலுப்பிள்ளை இன்று சர்வதேச ரீதியாகத் தோன்றிவருகிறார். வேலுப்பிள்ளை என்ற பெயரைக் கேட்டால் நம்ம நாட்டில் பலருக்கு கையும் ஓடாது, காலும் ஓடாது. ஆனால் பிரான்ஸ் ஏயார்பஸ் நிறுவனத்தில் அந்தத் தமிழ்ப் பெயர் நன்றாகவே உயரப்பறக்கிறது.

**முத்தையா முரளிதரன்** ஒரு சாதனையாளராகத் தொடர்ந்து பரிணாமிக்கிறார். காலி டெஸ்ட் போட்டியில் முரளியின் பந்து வீச்சு தென்னாபிரிக்க அணியை நிலைதளரவைத்திருந்தது. காலியில் முரளியின் பந்து வீச்சில் விக்கெட்டுக்கள் வீழ்ந்தபோது தீர்ப்புக்களை வழங்கிய அவுஸ்திரேலிய நடுவர் டரல் ஹெயர் முன்பு முரளியைப் பிரச்சனைக் குள்ளாக்கியுமிருந்தார்.

ஆனால் இன்று தமது தவறை உணர்ந்து முரளியின் அபாரப்பந்துவீச்சு சரியானதேயென்று அந்த அவுஸ்திரேலிய நடுவரே, காலியில் தீர்ப்புச் சொல்லியிருந்தார்.

**அண்மையில் பண்டாரநாயக்க** சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் எல்லாம் வல்ல அம்மையார் பங்குபற்றிய நிகழ்ச்சியொன்று நடந்தது. பாதுகாப்பு நடவடிக்கைகள்எப்படியென்று சொல்லித்தெரிய வேண்டியதில்லை. அம்மையாரது வானூர்தி வந்திறங்குவதற்காக அந்த விசாலமான மண்டபவளவில் இருந்த பல விருட்சங்கள் கூட தறிக்கப்பட்டிருந்தன. பல ஆண்டுகள் பழமைவாய்ந்த அந்த பெருவிருட்சங்கள் ஒருநாள்கூத்துக்காக வெட்டி வீழ்த்தப்பட்டிருந்தன. மருண்டவர் கண்களுக்கு மரங்கள் கூடப் பேய்களாகியிருக்குது.

**ஆடிவேல் விழாக்காலம்.** கேட்டாலே இனிக்கும் அற்புதமான அந்த விழாக்காலம் இன்று சோபையிழந்து அவ்விழா நடந்த அடிச்சுடே இல்லாதிருக்கிறது. கொழும்பில் ஆடிவேல் கந்தனின் ரத பவனி வந்த ராஜவீதியெல்லாம் குண்டுகள் வெடித்தும், இரும்புச் சட்டங்கள் போடப்பட்டும் மூடப்பட்டிருக்கிறன. தலைநகரில் அனைத்து இனங்களுமே கூடிமகிழ்ந்த ஆடிவேல் அமர்க்களம், இன்று இருந்த இடம் தெரியாமலே போயிருக்குது.

**அண்மையில் கதிர்காமக் கந்தன்** ஆலய உற்சவத்தில் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டனர். மலையகப் பகுதியிலிருந்து ஏராளமான தமிழ் இளைஞர், யுவதிகளும் வந்திருந்தனர். விழா முடிவில் 'புலி வேட்டைத் திருவிழா' வை பொலிஸார் நடத்தியிருக்கினம். 50க்குமதிகமான தமிழ் அடியார்கள் கைதாகியிருக்கினம். ஏதோ கதிர்காமக் கந்தன் கல்லாக இருப்பதால் பிரச்சனையில்லாமல் இருக்கிறார், எழுந்து நடமாடினால் அவரும் தமிழர் என்றே கைதாகியிருப்பார்.

# நடந்த கதை

## அடக்க முடியாத ஆசை!

**உண்மையில் நடந்த கதை**

**( 2 வாரங்கள் மட்டும்)**

**அவள் ஓர் அழகி. பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் அளவளவான அவயவங்கள். ஆசிரியரான அவள் கணவர் ஒரு நாள் படுக்கையில் பிணமாகக் கிடந்தார். பொலிஸ் விசாரணை பல நாட்கள் தொடர்ந்தும் பலனில்லை. குற்றவாளி அகப்படவே யில்லை. பள்ளியில் பணிபுரியும் பியூன் கொடுத்த துப்பினால் கொலையாளி யார் என்பதை அறிந்து அவரிடமே வாக்கு மூலம் பெறப்படுகிறது.**

**புஷ்பா தங்கத்துரை**

படுக்கை அறையில் அந்த இளம் பெண் ரூபா உட்கார்ந்து விசித்துக் கொண்டிருந்தாள்.

முதலில் இன்ஸ்பெக்டர் அசோக்கைப் பாதித்தது, அவள் சோகம் இல்லை! அவளது அழகு!

உடம்பின் புஷ்டிக்கு உவமை கிடையாது. அங்கங்கு செழிப்புகள் அருமையாக வளர்ந்திருந்தன. தங்க நிறத்தில மேனி. மரூண் சாரியின், மிருதுவில் அத்தனை அவயவமும் பளிச்சென்று தெரிந்தன.

புருவத்தின் வளைவுகளையும், அதிகம் பருமனான உதடுகளையும் பார்த்தார். நாலு வகைப் பெண்களில் அவள் சித்தினி இனமாக இருப்பாள். 'அசாத்தியக் காமம் இருக்க வேண்டுமே!' என்று நினைத்தார்.

டக்கென்று தம்மையே உதறிக் கொண்டார். அவர் அங்கே வந்திருப்பது பெண்களை வகைப்படுத்திப் பார்க்க அல்ல! அந்த வீட்டில் கொலை நடந்திருக்கிறது. அதை விசாரிக்கத்தான்.

ரூபாவின் விம்மல் குறையவில்லை! "மேடம்! மேடம்!" என்று இரண்டு முறை இன்ஸ்பெக்டர் அழைத்த பிறகு, அவள் தன் கையை எடுத்துக் காண்பித்தாள்.

அவள் காட்டிய மற்றொரு ரூமுக்குள் போய்ப் பார்த்தபோது, அந்தக் கொலை நிகழ்ந்திருந்தது.

முப்பத்தெட்டு வயது நரேந்திரன் சடலமாகக் கிடந்தார்.

உடம்பின் பல பாகங்களிலிருந்து இரத்தம் வந்து உறைந்து கிடந்தது.

அசோக் திரும்பினார்.

"உடனே எல்லா ரூம்களிலும் தேடுங்க!" என்று சிப்பந்திகளிடம் கூறினார்.

உதவி இன்ஸ்பெக்டர் பாலுவும் ஓடினார். சிப்பந்திகளும் ஓடினார்கள்.

வெவ்வேறு இடங்களைப் பார்த்துவிட்டுத் திரும்புவதற்குப் பத்து நிமிடங்கள் ஆயிற்று.

"என்ன பாலு? ஏதாவது திருட்டுப் போயிருக்கா?" என்று கேட்டார்.

"தெரியல்லே. அந்த அம்மா அழுகையிலே இருக்காங்க. பேச முடியல்லே."

"கொலை நடந்தபோது வீட்டிலே யாராவது இருந்தாங்களான்னு கேட்டியா?"

"கேட்டேன்! இல்லையாம். தோழி கிரிஜா வீட்டிற்குப் போயிருக்காங்க. பதினோரு மணிக்குத் திரும்பியிருக்காங்க. வீட்டுக் கதவு திறந்திருக்கு. உள்ளே பார்த்தா, கணவர் கொலையாகியிருக்காரு."

சிறிது நேரத்தில் கைரேகைக்காரர்கள், போட்டோகிராபர்கள், டாக்டர்கள் எல்லாரும் வந்தார்கள்.

டாக்டர் உள்ளே வந்தார். பிரேதத்தைப் பரிசோதித்தார்.

"ஆள் இறந்து இரண்டு மணி நேரம் ஆகியிருக்கணும்," என்றார்.

ஆயுதம் ஏதாவது கிடைக்குமா என்று தேடினார்கள். கிடைக்கவில்லை.

"அந்த அம்மா எப்போ வெளியே போனாங்க?" என்று அசோக் திரும்பவும் பாலுவைப் பார்த்துக் கேட்டார்.

"ஏழு மணிக்குப் போயிருக்காங்க."

"தோழி கிரிஜா வீட்டு முகவரி வாங்கிட்டீங்களா?"

"இன்னும் கொஞ்ச நேரத்திலே வாங்கிக்கிறேன். ஒரே அழுகையிலே இருக்காங்க."

ராத்திரி 12.00 மணிக்கு மேல் நாய் வந்து சேர்ந்தது.

எவ்வளவு மோப்பம் பிடிக்கச் சொல்லியும், வீட்டைவிட்டுச் சிறிது தூரம் போய் விட்டு, மோப்பத்தை எடுக்க முடியாமல் திரும்பிவிட்டது.

சடலத்தை லாபரட்டரிக்கு அனுப்பி வைத்தார்கள்.

"அந்த அம்மாளும், பையனும் எங்கே தங்கப் போறாங்க?" என்றார் அசோக்.

திருமதி ரூபாவுக்கு ஒரே மகன் இருந்தான்.

"பக்கத்து வீட்டுக்குச் சொல்லியாச்சு. அவங்க கவனிச்சுக்கிறாங்க!"

எல்லாரும் ஜீப்பில் ஏறினார்கள்.

திரும்பப் போகும்போது, "முதல்லே அந்தப் பெண் ரூபாவையே சந்தேகப் படணும் பாலு!" என்றார் அசோக்.

"மனசு கேட்கலை," என்றார் பாலு.

"உம் மனசு இளசு! முதல்லே இதைக் கவனிச்சுக்க. கணவன் இறந்தால், மனைவி யைச் சந்தேகப்படணும். மனைவி இறந்தால், கணவனைச் சந்தேகப்படணும்! முதல் சந்தே கம் இவங்க மேலேதான். அப்புறம்தான் மற் றெல்லாம்!"

"அந்த அம்மா கூச்சல் போட்டு அழுததைப் பார்த்தீங்கன்னா, நீங்க இந்த மாதிரிச் சொல்ல மாட்டீங்க!"

புன்னகை காட்டினார் அசோக்.

"இந்தாப் பாரு; அவங்களே கொன்னுட்டு அழலாம். உண்மையாகவும் அழலாம். இரண்டு விதமும் உண்டு. சட்டுன்னு நம்பிடாதே!" என்றார்.

"ஆமாம்! தோழி வீட்டுக்குப் போனபோது பையனை அழைச்சுட்டுப் போனாங்களா?"

"இல்லை. வீட்டுலே விட்டுட்டுப் போயிருக்காங்க.

"பிள்ளை கொலையை கவனிச்சுதா?"

"இல்லை. தூங்க ஆரம்பிச்சாச்சு. நம்ப வந்த பிறகும் தூங்கிட்டுத்தான் இருந்திச்சு."

டாக்டர் குறுக்கிட்டார்.

"அந்தப் பெண் ரூபா உண்மையிலே ஒரு பெரிய மனத்தாங்கல்லே இருக்கா. நான் ஊசி போட்டேன்," என்றார்.

"நீங்க செய்வீங்க! பாலுவுக்கு அடுத்தபடி. பெண்மீது இரக்கம் வைக்கிறது நீங்கதான்!" என்று கண்ணைச் சிமிட்டினார் இன்ஸ்பெக்டர்.

மறுநாள் அசோக் தீவிர விசாரணையில் இறங்கினார்.

அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களை விசாரித்தார்.

அங்குள்ள வீடுகள் தள்ளித் தள்ளி இருந்தன.

ஒரு வீட்டில் கூச்சல் போட்டால் அடுத்த வீட்டுக்குக் கேட்பதற்குக்கூட வழியில்லை.

நரேந்திரனும், ரூபாவும் நல்லபடி வாழ்ந்தார்கள். "அதுபோல அந்நியோன்னியத் தம்பதிங்களைப் பார்க்க முடியாது!" என்றும் எல்லாரும் கூறினார்கள்.

"அவங்க வீட்டுக்கு யாராவது வருவாங்களா?" என்று கேட்டார் அசோக்.

"யாரும் வாறதில்லை."



நரேந்திரன் உயர்நிலையில் ஆசிரியராக இருந்தார். டியூஷனும் வைத்திருந்தார். நல்ல வருமானம். முப்பத்தேழு வயது தாண்டிய பிறகுதான், திருமணத்தைப் பற்றி யோசித்து பத்திரிகையில் விளம்பரம் போட்டு, ரூபாவை மணந்து கொண்டிருந்தார்.

"பாலு! நரேந்திரனுக்கு வயது முப்பத்தெட்டு! ரூபாவுக்கு வயது இருபத்தி நான்கு."

"எஸ் சார்!"

"அந்தப் பெண்ணுக்குக் காதலன் யாராவது இருந்திருக்கணும்! 'கள்ளக் காதலன்'!"

"அப்படி ஏன் நினைக்கிறீங்க?"

"முதல்லே கள்ளக் காதலன் இருந்தா, அவன்தான் இந்த நரேந்திரனைக் கொல்வான். நரேந்திரன் இறந்து போறது மூலம் அவனுக்கு அவனோட காதலி கிடைக்கிறாள். தவிர நரேந்திரனின் சொத்தும் கிடைக்குது. ஒரே கல்லிலே இரண்டு மாங்காய்."

அடுத்தது, கிரிஜாவின் பிளாட் மாடியில் இருந்தது.

மணியை அழுத்தியதும் ஓர் இளம் பெண் வந்து கதவைத் திறந்தாள்.

அசோக், தமது அடையாளக் கார்டை எடுத்துக் காட்டியதும், "வாங்க!" என்று சொல்லி உள்ளே அழைத்துப் போனாள்.

"நீங்கதான் கிரிஜாவா?"

"ஆமாம்."

ஒரு கம்பெனியில் அவள் செகரட்டரியாக இருந்தாள். தனியாகத்தான் வீட்டில் இருக்கிறாள்.

ஒட்டலில் சாப்பிடுகிறாள். வீட்டில் காலையில் வேலைக்காரி வந்துவிட்டுப் போய்விடுவாள்.

முந்தைய நாள் ரூபா, ஏழரை மணி சுமாருக்கு அவள் வீட்டிற்கு வந்திருந்தாள்.

இருவரும் தோழிகள்.

இருவரும் பேசிக்கொண்டே டி.வி. பார்த்தார்கள்.

கிரிஜா வற்புறுத்தியதன்பேரில், ரூபா அங்கேயே இரவு சாப்பிட்டாள்.

பிறகு 8.05க்கு அந்த இடத்தைவிட்டு வெளியேறினாள்.

"எப்படி போனாங்க?"

"8.05க்கு அவங்க பஸ் ஏறிப் போயிட்டாங்க."

அசோக், சில கேள்விகளை மடக்கிக் கேட்டார்.

கிரிஜா சரியாகப் பதில் கூறினாள்.

அடுத்த தினம் கைரேகை நிபுணர் தமது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

வீட்டில் பல்வேறு இடங்களிலிருந்து ரேகைகளைச் சேகரித்திருந்தார்!

அவை பெரும்பாலும் நரேந்திரன், ரூபாவின் ரேகைகளாக இருந்தன. ஒரு ரேகை மட்டும் முற்றிலும் அன்னியருடையதாக இருந்தது.

அந்த ரேகை நரேந்திரனின் கட்டில் கம்பியின் மேல் இருந்தது. சமீப காலத்தில் தான் அது படிந்திருக்க வேண்டும். அது யாருடைய கைரேகை?

"அதான் நான் சொன்னேனே? ரூபாவின் கள்ளக்காதலன் யாராவது இருந்திருக்கணும்," என்றார் அசோக்.

"சார், இதுவரை ரூபாவின் ஒழுக்கத்தைப் பற்றி யாரும் குறை சொல்லவில்லை," என்றார் பாலு.

"யார் கண்டாங்க? சில இடங்களிலே இந்தக் கள்ளக்காதல் மிக இரகசியமாக நடக்கும். யாருமே கண்டுபிடிக்கவே முடியாது!" என்றார் அசோக்.

ஒரு வாரம் வரை ரூபாவை இரகசியக் கண்காணிப்புச் செய்தார்கள்.

எந்தவித பலனும் கிடைக்கவில்லை.

ரூபா, ஒரு சராசரி குடும்பப் பெண்ணாகவே இருந்தாள். கணவர் மறைந்த சோகம் இன்னும் நிறையவே இருந்தது.

அவளது நடவடிக்கை எதுவும் தவறாகத் தெரியவில்லை.

அசோக்குக்கு அது ஏமாற்றமாக இருந்தது. தவிர, மற்றச் செய்தியும் அசோக்கின் கவனத்தை இழுத்தது. லாக்கரில் 3,000 ரூபாய் வைக்கப்பட்டு இருந்தது. ஒரு வைரத்தோடும் உள்ளே இருந்தது. அவை காணாமல் போய் விட்டன என்று அவள் தெரியப்படுத்தினாள்.

'இந்தப் பணத்தைத் திருட வந்தவன் அந்தக் கொலையைச் செய்திருப்பானா?'

'அவன் எப்படி உள்ளே வந்தான்? நரேந்திரன் அவனை எப்படி உள்ளே விட்டிருப்பார்?'

"ஏன் பாலு? ரூபா இப்படி ஒரு பொய்யைச் சொல்லியிருப்பாளா?" என்றார் அசோக்.

"சார்! அவ மேல நீங்க ரொம்பவும் சந்தேகப்படறீங்க!" என்றார் பாலு.

"இல்லை பாலு. இதை முன்னாடியே சொல்லியிருக்கலாமில்லே?"

"சார்! அவள் ஒரு திக்பிரமையில இருந்திருக்கிறா. வீட்லே என்ன இருந்தது; என்ன போயிருக்கிறது என்பதை அவளால் நினைக்க முடியல்லே," என்றார் பாலு.

"சரி பாலு, லாக்கரிலே கை வச்சவன் வேறே இடத்திலே கை வைக்கமாட்டானா?"

"வச்சிருக்கலாம் சார்!"

"இப்ப அவளாலே சொல்ல முடியலை. பின்னாலே சொல்லலாம் இல்லையா?"

அசோக் சிரித்தார். "ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணம் சொல்லிடறே," என்றார்.

மேலும் ஒரு வாரம் சென்றது. அசோக்குக்குக் கவலை ஏறியது.

நகரத்தின் ரவுடிக் கும்பலை எல்லாம் விசாரித்து விட்டார். பொலிசுக்கு உளவு சொல்வோரை, வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பி அவர்கள் பதிலைச் சேகரித்து வந்தார். ஆனால் எந்தவிதப் பயனுமில்லை.

இப்போது அசோக்குக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது.

அந்த ரூபாவைத் தீவிரமாக விசாரிப்பது தான்!

(நடந்த கதை தொடரும்)

## கனவு நாயகனின் காதலில் விரிசல்



'டைட்டானிக்' படம் மூலம் பலரின் கனவு நாயகனாக வலம் வந்த ஹொலிவூட் நடிகர் லியோர்னடோ டி காப்ரியோ, கடந்த 5 வருடமாக கிறிஸ்டன் ஜங் என்ற மொடல் அழகியைக் காதலித்து வந்தார்.

இப்போது இவர்களின் காதலில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

டி காப்ரியோவின் காதலி கிறிஸ்டன் ஜங் வெறும் மொடல் அழகி மட்டுமல்ல, மிகப்பெரும் செல்வந்தரின் மகள். ஏராளமான சொத்துக்களுக்கு ஒரே வாரிசு.

டி காப்ரியோவும் கிறிஸ்டனும் முதன் முதலில் நியூயோர்க்கில் உள்ள கிளப் ஒன்றில் தான் சந்தித்துக் கொண்டார்கள். முதல் சந்திப்பிலேயே காதலர்களாகி விட்டார்கள்.

பிறகு, இவர்களிருவரும் சுற்றாத இடங்களே கிடையாது எனலாம். இவர்களின் காதல் விவகாரம் கிறிஸ்டனின் தந்தைக்கும் தெரிய வந்தது. டி காப்ரியோவை அவருக்குப் பிடித்துப் போக காதலுக்குப் பச்சைக்கொடி காட்டிவிட்டார்.

காதல் ஜோடி பல சமயங்களில் இரவு நேரங்களை ஒன்றாகவும் கழித்திருக்கிறது.

ஆனால் என்ன நடந்ததோ தெரியவில்லை. இப்போது இவர்களின் காதலில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது.

## சாதனை படைத்த சகோதரிகள்



பாகிஸ்தானில் பெண்களுக்குக் கட்டுப் பாடுகள் அதிகம். பழமைவாதிகள் போடும் அந்தக் கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் வெறித்தனமாகக் கொல்லப்படுவது உண்டு.

அப்படிப்பட்ட சூழலில் வளர்ந்த இரண்டு இளம் பெண்கள் தங்கள் நாட்டில் பெண்களுக்காகக் கிரிக்கெட் குழுவை ஏற்படுத்தியுள்ளனர். இதற்காக அவர்களுக்கெல்லாம் கொலை மிரட்டல்கள் வந்தவண்ணம் தான் உள்ளன.

உலக அளவில் பெண்கள் கிரிக்கெட் என்றால் கேலிப்பேச்சுக்கள் தான். ஆனால் அதைப்பொருட்படுத்தாது கிரிக்கெட்டில் ஆர்வங் கொண்ட பெண்கள் பலர் உலக அளவில் பெண்கள் கிரிக்கெட்டைப் பிரபலப் படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் செர்மினா கான்(30), சர்மின் கான்(26) ஆகிய சகோதரிகள் பாகிஸ்தானில் பெண்களுக்கான சர்வதேச கிரிக்கெட் குழு ஆரம்பித்துச் சாதனை படைத்துள்ளனர்.

கராச்சியில் கம்பளம் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் மிகப்பெரிய தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்கள் தான் இந்தச் சகோதரிகளின் தந்தை. இவர்களை இலண்டனுக்கு அனுப்பி உயர் கல்வி படிக்க வைத்தார். அப்போது அக்கல்லூரியில் கிரிக்கெட் அணியின் தலைவியாகவும் உபதலைவியாகவும் கான் சகோதரிகள் பிரகாசித்தனர்.

நாடு திரும்பியதும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியைத் துவக்கினர். இதற்கு முதலில் பலத்த எதிர்ப்புக்கள் கிளம்பின. இந்தச் சகோதரிகள் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. கிரிக்கெட்டில் ஆர்வங்கொண்ட பெண்கள் இதில் சேர்ந்தனர்.

இதன் பின் தான் பாகிஸ்தான் அரசு இவர்களது கிரிக்கெட் குழுவை அங்கீகரித்துள்ளது.

## ஆட்டோ சாரதிக்கு நடிகர் விட்ட 'பளார்'



படங்களில் மட்டுமன்றி உண்மையிலும் இந்தி நடிகர் சஞ்சய் தத் கோபம் கொண்டவராகவே இருக்கிறார்.

மும்பாயின் 'கர்' என்ற பகுதிக்கு வந்திருந்தார் சஞ்சய் தத். காரை நிறுத்திவிட்டு கொஞ்சம் தள்ளி நின்று யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். அவரது காருக்கு முன்னால் ஆட்டோ ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

ஆட்டோவை எடுக்க முடியாதவாறு சஞ்சய் தத்தின் கார் வழியை மறித்து நின்றிருக்கிறது. சஞ்சய் தத்திடம் சென்ற ஆட்டோ சாரதி,

"சார் உங்க காரைக் கொஞ்சம் ஒதுக்கி நிறுத்தினால் என் ஆட்டோவை எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும்" என்று பணிவாகக் கேட்டார்.

கேட்டதென்னவோ பணிவாகத்தான். ஆனால் அதற்குப்பதிலாக 'பளார்' தான் விழுந்தது. ஒன்றல்ல இரண்டு 'பளார்கள்'.

சஞ்சய் தத்திடம் 'பளார்' வாங்கிய இந்த ஆட்டோ சாரதியின் பெயர் சத்னம் யாவ்.

அடுத்த சில நிமிடங்களில் அந்தப் பகுதியில் இருந்த அத்தனை ஆட்டோ சாரதிகளும் ஒன்று திரண்டு 'கர்' பகுதி பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

மேம்போக்காக மறைத்துக்கழுவி விட்டு விடலாம் என்று எண்ணிய சஞ்சய் தத்திற்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் சிக்கலாகி விட்டது. வேறு வழியில்லாமல் சஞ்சய் தத் மீது குற்றப்பத்திரிகை எழுதிப் பதிவு செய்துவிட்டார்கள்.

## ஆயிரம் பாம்புகளைச் சாப்பிட்டவர்



'பாம்பு என்றால் படையும் நடுங்கும்' என்பார்கள். ஆனால் தமிழ் நாட்டில் உள்ள சேலம் மாவட்டத்தில் இருக்கும் திருச்செங்கோடைச் சேர்ந்த ராமலிங்கம் என்பவர் ஆயிரம் பாம்புகளைச் சாப்பிட்டுள்ளார்.

பழைய இரும்புச் சாமான்களை வாங்கிவிற்கும் ராமலிங்கத்திற்கு பாம்பு பிடிப்பது உபதொழில். பாம்புகளைப் பிடிப்பது மட்டுமல்ல, அவற்றைச் சாப்பிட்டும் விடுவார்.

மற்றவர்களுக்கும் பாம்புக்கறியைச் சமைத்துக் கொடுக்கிறார். "சரவாங்கி, கை கால் நரம்புச் சுருக்கம் போன்ற உபாதைகளுக்கு பாம்புக்கறி நல்ல மருந்து" என்று கூறும் ராமலிங்கம், "சாரைப்பாம்புக் கறியின் சுவையே தனி தான்!" என்றார்.

ஆயிரத்திற்கும் அதிகமான பாம்புகளைச் சாப்பிட்டிருப்பதாகத் தெரிவிக்கும் இவர், பாம்புப் பிடிக்கும் வித்தையைத் தனது மைத்துனரிடமிருந்து கற்றுக் கொண்டதாகக் கூறுகிறார்.

பாம்புகள் கடிக்காமல் இருக்கவும், பாம்புக்கடியால் பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும் பச்சிலை மூலிகைகளைப் பயன்படுத்துகிறார்.

## தீக்குழியைத் தாண்டும் விழா

கீழைத்தேய நாடுகளில் நடக்கும் சில விழாக்களைப் போன்றே சில விழாக்கள் மேலைத்தேய நாடுகளிலும் நடைபெறுகின்றன. கீழைத்தேய, குறிப்பாக ஆசிய நாடுகளில் தீமிதிப்பு விழாக்கள் நடைபெறுகின்றதைப் போன்று மேலை நாடுகளிலும் அதைப் போன்ற விழாக்கள் நடைபெறுகின்றன.

ரஷ்யநாட்டில் உள்ள கீவ் நகரின் காடுகளில் ஒவ்வொரு வருடமும் தீக்குழியைத் தாண்டும் விழா நடைபெறுகிறது. அவ்விழாவின் போது கணவனும் மனைவியும் பாரம்பரிய உடைகளில் தீக்குழியைத் தாண்டும் காட்சி தான் இது.



## குண்டோதரிகள் போட்டி

குண்டான உடலமைப்பைக் கொண்டவர்கள் ஆண்களாயின் குண்டோதரன் என்றும் பெண்களாயின் குண்டோதரி என்றும் பட்டப் பெயரிட்டு அழைப்பார்கள்.

அண்மையில் தாய்லாந்தில் குண்டோதரிகள் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் 'தாய்லாந்தின் மிகப் பருமனான பெண்' என்ற 'பெரு'மையைத் தட்டிச் சென்றார் இந்தா லக்ஷனா என்ற 34 வயதுடைய பெண். இவரது நிறை 187 கிலோ. இந்தப் போட்டி யானைகள் உயிரியல் பூங்கா ஒன்றில் நடந்தது. போட்டிக்கும் போட்டி நடந்த இடத்திற்கும் என்னவொரு பொருத்தம் பார்த்தீர்களா?




## தகவல் பெட்டி

### திமிங்கிலங்கள் பாதுகாப்பு

திமிங்கிலத்தின் வாயினுள் சிறுவன் ஒருவன் அகப்பட்டிருக்கிறானா என்று படத்தைப் பார்த்ததும் நினைக்கத் தோன்றும். அவுஸ்திரேலிய நாட்டின் அடிலெய்ட் நகரில் அமைக்கப்பட்ட பலூன் திமிங்கிலத்தின் வாயினுள் தான் சிறுவன் நுழைகின்றான்.

தெற்கு பசிபிக் பகுதியில் திமிங்கிலங்கள் வேட்டையாடப்படுவதைத் தடுக்க, 'திமிங்கில பாதுகாப்பு மாநாடு' அடிலெய்ட் நகரில் நடை பெற்றது. அம்மாநாட்டின் போது தான் இந்த பலூன் திமிங்கிலங்கள் அமைக்கப்பட்டிருந்தன.





## ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள்

ஒரே பிரசவத்தில் இரட்டைக்குழந்தைகள் பிறப்பது அபூர்வமாக நடந்து வருகிறது. சிலர் ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதும் உண்டும். இதுவும் அரிதான நிகழ்வு.

ஆனால் ஒரே பிரசவத்தில் 4 அல்லது 5 குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதென்பது மிக மிக அபூர்வம். எகிப்து தலைநகர் கெய்ரோவில் அஸ்ஸா முஹமது என்ற பெண் மணி அண்மையில் ஒரே பிரசவத்தில் பெற்றுக்கொண்ட 5 குழந்தைகள் தான் இவர்கள். இந்த 5 சேய்களும் இவர்களின் தாயும் நலமாக இருக்கிறார்கள்.



## குடிமகன்கள் திருவிழா

பாரம்பரிய விழாக்கள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, மறுபுறம் புதிது புதிதாக விழா எடுத்துக் கொண்டாடி வருகிறார்கள். அண்மையில் ஸ்பெயின் நாட்டின் பாம்லோனா நகரில் குடிமகன்கள் திருவிழா நடைபெற்றது.

ஒரு வாரகாலமாக நடைபெற்ற இந்த விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தன. அவற்றில் பார்வையாளர்களைக் குஷிப்படுத்த இளைஞர் ஒருவர் உயரத்தில் இருந்து கீழே குதித்து சாகசங்கள் செய்தார். ஐரோப்பியப்பயணம் மேற்கொள்ளும் கல்லூரி மாணவர்கள் இந்த குடிமகன்கள் திருவிழாவில் கலந்து கொண்டு சந்தோஷமாக இருப்பார்கள்.



## தீக்கோழிகளுடன் பந்தாட்டம்

நியூஸிலாந்து நாட்டில் உள்ள தப்வாரா நகரில் வசிக்கும் ஷரி முஃபிட், தினமும் தீக்கோழிகளுடன் பந்து விளையாடி மகிழ்கிறார். 'தீக்கோழிகளுடன் எப்படி பந்து விளையாடலாம்?, என்று கேட்பீர்கள்.

ஷரி முஃபிட் கூட இதனை முதலில் அறிந்திருக்கவில்லையாம். ஒரு நாள் தன்னைத் தாக்க ஓடிவந்த தீக்கோழி மீது பந்தொன்றை வீசினாராம். அது அப்பந்தை இலாவகமாகத் தடுத்துத் திருப்பி அடித்ததாம்.

அச்சம்பவம் மூலம் தான் தீக்கோழிக்கு அத்திறமை இருப்பதாக அறிந்தாராம் முஃபிட்.

திரையுலக மறுபக்கம் (158)

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# தயாரிப்பாளரைத் தரகராக்கிய நடிகர்

உலகத்திலேயே மிகவும் சொகுசான தொழிலாளி யார் தெரியுமா? நடிகர்கள் தான். தயாரிப்பாளர்களிடமிருந்து எல்லா சௌகரியங்களையும் அனுபவிக்கும் நடிகர்கள் சில வேளைகளில் சில தயாரிப்பாளர்களைத் தரகர்களாக்கியும் விடுகிறார்கள்.

புதிய படத்தயாரிப்பாளர் ஒருவர் படமொன்றைத் தயாரித்தபோது அவருக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை அப்படத்தின் தயாரிப்பு உதவியாளர்களாகப் பணியாற்றியவர்களில் ஒருவர் கூறியது இது :

'கிழக்கு' என்று தொடங்கும் பெயருடைய படத்தைத் தயாரிக்க முடிவு செய்தார் ஒரு புதிய தயாரிப்பாளர்.

கதாநாயகனாக பிரபல வாரிக நடிகரையும் ஏற்கனவே சில படங்களில் நடித்த இளம் நடிகை ஒருவரின் பெயரை மாற்றிப் புதுமுகம் என்று கதாநாயகியாகவும் வைத்துப் படத்தை தொடங்கினர்.

திட்டமிட்டபடி மொத்த படப்பிடிப்புக்குழுவும் வெளிப்புறப் படப்பிடிப்புத்தளத்திற்கு வந்திருந்தனர். நாயகி நடிகையை கதாநாயக நடிகர் இருந்த அறைக்கு அனுப்பி வைத்தனர். ஹீரோ அறைக்குப்போன நடிகை சில நிமிடங்களிலேயே சோகமாகத்திரும்பி வந்தார்.

நடிகைக்குப் பின்னாலேயே வந்த நடிகர், "இவளை யார் ஹீரோயினாகப் போட்டது? புதுமுகம்னு சொல்றீங்க. 'அந்த' விஷயத்தில் ரொம்ப பழக. எனக்கு உடனடியாக ஒரு நல்ல கதாநாயகியை ரெடி பண்ணுங்க. இவளைத் திருப்பி அனுப்புங்க. அப்பதான் ஷூட்டிங். இல்லேன்னா ஷூட்டிங் கான்சல்" என்று சொல்லியபடியே போய் விட்டார். அந்த நடிகையை வைத்து, படம் தயாரிக்க கடன் கொடுக்கும் 'பைனான்ஸியர்'களிடம் கடன் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனால் படத்தில் இருந்து அந்த நடிகையை நீக்க முடியாத நிலை அந்தத் தயாரிப்பாளருக்கு.

நடிகர் பின்னால் சென்ற தயாரிப்பாளர், நடிகரிடம் இதுபற்றிக் கூறியிருக்கிறார். அதன்பின் நடிகர் ஏதோ சொல்லத் தயாரிப்பாளர் தலையாட்டியபடி திரும்பி வந்தார்.

அப்போதே அந்தத் தயாரிப்பாளர் சென்னைக்குத் தொடர்புகொண்டு தங்கை வேடங்களில் நடிக்கும் கன்னன் மேல் காதல் கொண்ட பெயருடைய இரண்டெழுத்து நடிகையை உடனடியாக வரவழைத்தார்.

அன்றிரவே அங்கு வந்தார் அந்தத் தங்கை நடிகை. இரண்டு நாட்கள் ஹீரோவுடன் தங்கியிருந்து அவரைத் திருப்திப்படுத்தினார். நடிகையினால் திருப்தியடைந்த ஹீரோ சந்தோஷத்துடன் ஷூட்டிங்கில் கலந்துகொண்டார்.

ஹீரோவின் மனமாற்றத்துக்குக் காரணமான அந்தத் தங்கை நடிகைக்கு இருபத்தையாயிரம் ரூபா பணம் கொடுத்து அனுப்பி வைத்தார் அந்தப் புதிய தயாரிப்பாளர்.

**முகப்பில்**
**விந்தியா & விந்தியா**
**பிரபுதேவா-சரத்குமார்**
**படம்: பெண்ணின் மனதைத் தொட்டு**

## கதாநாயகனாகும் விவேக்

தற்போதுள்ள நகைச்சுவை நடிகர்களில் அதிகப் படங்களில் நடித்து வருபவர் விவேக். கவுண்டமணியைப் போல் இவருக்கும் இப்போது கதாநாயகனாக நடிக்கும் ஆசை வந்து விட்டது.

இவர் கதாநாயகனாக நடிக்கும் படத்தை ரோஜா கம்பைன்ஸ் பட நிறுவனத்தின் பங்குதாரர்களில் ஒருவரான ஞானவேல் என்பவர் தயாரிக்கிறார். முழுக்க முழுக்க நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படும் இப்படத்தை அதிகாரி என்ற புதிய இயக்குநர் இயக்கவுள்ளார்.

## நண்பனுக்காக அபூர்வன்

'ரட்சகன்', 'ஜோடி' ஆகிய படங்களை இயக்கிய ப்ரவீன் காந்த் இயக்கும் 'அபூர்வன்' படத்தில் அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இப்படத்தை அஜித்தின் நண்பரான கார்த்திகேயன் என்பவர் தயாரிக்கிறார்.

கே.பாக்யராஜின் முன்னாள் மனோஜ் கும் 'இரட்டை ஜடை வயசு' உட்பட பல படங்களைத் தயாரித்தவருமான பழனிச்சாமியின் மகன் தான் கார்த்திகேயன்.

## ரம்யாவுக்குப் பதில் ப்ரீதா

'துபாய்' என்ற மலையாளப்படத்தில் மம்முட்டி ஜோடியாக நடிப்பதற்காக துபாய் சென்றார் ரம்யா கிருஷ்ணன். அங்கு மம்முட்டியுடன் ரம்யா மோட்டார் சைக்கிளில் செல்வது போன்ற காட்சி படமாக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்திருந்த ரம்யாவின் துப்பட்டா, சைக்கிள் சக்கரத்தில் சிக்கியதால் ரம்யாவின் கழுத்து நெரிபட்டு விட அப்படியே இந்தியா திரும்பினார் ரம்யா.

இதனால் ரம்யாவுக்கு ஏற்பட்ட கழுத்து வலியால் படத்தில் இருந்து அவர் விலகிக் கொள்ள, ப்ரீதா விஜயகுமாரை மம்முட்டிக்கு ஜோடியாக்கி விட்டனர்.



அன்டனி-இந்து
படம்: பத்தாங்கிளாஸ் மாஸாயிட்டேன்

## விஜயசாந்தி தயாரிக்கும் 'ஸ்ரீ ஸ்ரீமதி சத்யபாமா'

'லேடி சூப்பர் ஸ்டார்' விஜயசாந்தி தமிழ்-தெலுங்கு ஆகிய இருமொழிகளில் சொந்தமாகத் தயாரித்து நடிக்கும் படம் 'ஸ்ரீ ஸ்ரீமதி சத்யபாமா'.

இப்படத்தில் இதுவரை நடிக்காத வேடத்தில் நடித்துள்ளார் விஜயசாந்தி. படத்தில் இவருக்கு சண்டைக் காட்சிகள் எதுவும் கிடையாது. படம் முழுவதும் சேலை அணிந்து நடிக்கிறார்.

கதாநாயகனாக ரகுமான் நடிக்கிறார்.

எஸ்.வி.கிருஷ்ணாரெட்டி கதை திரைக்கதை எழுதி இசையமைத்து இயக்குகிறார்.

## குருவை இயக்கும் சிஷ்யன்

பாக்யராஜுடன் அவரது சிஷ்யர்களான பார்த்திபன், பாண்டியராஜன், லிவிங்ஸ்டன் ஆகியோரை வைத்து படமொன்றை இயக்கவுள்ளார் சிவகுமார்.

'இரட்டை ஜடை வயசு', 'ஆயுதபூஜை' ஆகிய படங்களை இயக்கியுள்ள சிவகுமாரும் பாக்யராஜின் சிஷ்யர்தான்.

## மினி சினி

★ 'முதல்வன்' படத்தில் 'ஷக்கலக்க பேபி..' பாடலுக்கு நடனமாடிய முன்னாள் பிரபஞ்ச அழகி சுஷ்மிதா சென் 'காவேட் அழகி யாந்ரே' என்ற கன்னடப் படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடவுள்ளார். இப்படத்தில் நாயகனாக சிவராஜ்குமார் நடிக்கிறார்.

★ 'கண்ணோடு காண்பதெல்லாம்' படத்தை இயக்கிய பிரபு தற்போது இயக்கும் படம் 'விகடன்'. இதில் கதாநாயகனாக நடிக்கும் விக்ரம் மாஜிக் நிபுணர் வேடத்தில் தோன்றவுள்ளார்.

★ தமிழில் அறிமுகமாகிப் பின் தெலுங்கிற்குச் சென்ற கீர்த்தி ரெட்டி இப்போது இந்திப்படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இதில் அமிதாப்பச்சனின் மகன் அபிஷேக் பச்சன் கதாநாயகனாக நடிக்கிறார்.

★ 'அமர்க்களம்' படத்தில் இடம் பெற்ற 'மகா கணபதி' பாடல் உட்பட பல படங்களில் நடனமாடிய லாரான்ஸும் 'அலைபாயுதே' மாதவனும் கதாநாயகர்களாக நடிக்கும் படமொன்றை சூப்பர் குட் ஃபிலிம்ஸ் சௌத்ரி தயாரிக்கவுள்ளார்.

★ பாரதிராஜாவின் 'கடல் பூக்கள்' படத்தில் முரளிக்கு ஜோடியாக அறிமுகமாகும் ப்ரீத்தி உஷா, 'சமுத்ரம்', 'ராயுடு' ஆகிய இரண்டு தெலுங்குப் படங்களில் கதாநாயகியாக நடித்திருக்கிறார்.

★ பிரசாந்த்-புதுமுகம் ஸ்னேகா நடிக்கும் 'விரும்புகிறேன்' படத்தில் முக்கிய வேடமொன்றில் பிரகாஷ்ராஜ் நடிப்பதாக இருந்தது. இப்போது அந்த வேடத்தில் அவருக்குப் பதிலாக லிவிங்ஸ்டன் நடித்து வருகிறார்.

★ விஜய்-ஜோதிகா நடித்து வெற்றி பெற்றுள்ள 'குஷி' இப்போது தெலுங்கில் தயாராகி வருவது தெரிந்ததே. விஜய் வேடத்தில் பவன் கல்யாண் நடிக்கிறார். தெலுங்கிலும் ஜோதிகாவையே கதாநாயகியாக நடிக்க வைக்கவுள்ளனர்.

★ 'என்றென்றும் காதல்', 'குட்லக்' ஆகிய படங்களைத் தயாரித்துத் தோல்வி கண்ட இயக்குநர் மனோஜ் பட்நாகர் மீண்டும் படத் தயாரிப்பில் இறங்குகிறார். இம்முறை படத்தயாரிப்பு மட்டும் தான் வேறொருவரை வைத்து இயக்கவுள்ளார்.

## இளம் நாயகனுடன் ஷாலினி நடித்துள்ள 'வாழ்த்துகிறேன்'


ஷாலினி கதாநாயகியாக அறிமுகமானது 'அனியத்தி புறாவு' என்ற மலையாளப் படத்தில். இதுதான் 'காதலுக்கு மரியாதை' என்ற பெயரில் தமிழில் மறுபதிப்பாகியது. 'அனியத்தி புறாவு' படத்தில் நாயகனாக நடித்தவர் குஞ்சாக்கோ போபன் என்ற புதியவர். இப்படத்தின் பின் ஷாலினி-போபன் இரண்டு படங்களில் இணைந்து நடித்தனர். அவையும் வெற்றி பெற்றன.

அந்த வெற்றிப் படங்களில் ஒன்று 'வாழ்த்துகிறேன்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. குஞ்சாக்கோ போபன், ஷாலினியுடன் முக்கிய வேடத்தில் வினீத்தும் இப்படத்தில் நடித்துள்ளார்.

மலையாளத்தில் பல வெற்றிப்படங்களை வழங்கியுள்ள பிரபல மலையாள இயக்குநர் ஹரிகரன் இப்படத்தை இயக்கியுள்ளார்.



விக்னேஷ்-சங்கீதா
படம்: என்றும் ஆனந்தம்



பிரசாந்த்-தேவயானி
படம்: அப்பு

# காதோடு சொல்லுகிறோம்

திரையுலகில் நீண்ட காலமாகப் போராடி, இப்போது வெற்றிபெற்றிருக்கும் அந்த இரண்டெழுத்து நாயகன் பற்றிப் பலர் புகார்கள் கூறி வருகிறார்கள். கையில் பல புதிய படங்களை வைத்திருக்கும் அந்த ஹீரோ படப்பிடிப்புக்களுக்கு சொன்ன நேரத்தில் வருவதில்லையாம். இவருக்காகப் பலர் படப்பிடிப்புத்தளத்தில் காத்திருக்க இவரோ ஆடி அசைந்து தாமதமாகத் தான் வருகிறாராம்.

இரண்டெழுத்து மீன் நடிகைக்கு மேல் உதட்டில் அரும்பு மீசை வளர ஆரம்பித்ததோடு, குரலிலும் சற்றுக் கரகரப்பு கூடியிருக்கிறதாம். இதனால் படங்களில் பின்னணி பேசும்போது குரல் கரகரப்பாக இருக்கிறதாம். இதன் காரணமாக 'வெற்றிக்கொடி கட்டு'ம் படத்தயாரிப்பாளர், அப்படத்தில் வேறொருவரைக் கொண்டு நடிகைக்குக் குரல் கொடுக்க வைத்தாராம்.

புதியவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும் தயாரிப்பாளர் ஒருவரின் பெயரைப் பின்பாதியாகக் கொண்ட புதிய நடிகை ஒருவர், 'சம்பளம் பற்றி எனக்குப் பிரச்சனை இல்லை. யாருடன் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் நடிக்கத்தயார். எப்படியாவது நம்பர் வண்ணாக வரவேண்டும். இதுதான் என் இலட்சியம்' என்ற கூறி வருகிறாராம்.

புதிதாய் ஜோடி சேர்ந்து கலக்கி வரும் நகைச்சுவை நடிகரும், நகைச்சுவை நடிகையும் ரொம்பவும் நெருக்கமாகி விட்டார்களாம். எந்த நேரத்திலும் அதிரடியான அறிவிப்புகள் வெளியாகலாம் என்று திரையுலகப் புள்ளிகள் எதிர்பார்க்கிறார்களாம். இது ஒருபுறமிருக்க, நடிகர் வீட்டில் இதனால் பெரும் புகைச்சல் கிளம்பியிருக்கிறதாம்.

## பிரபு–நெப்போலியன் நடிக்கும் 'மிட்டா மிராசு'

பிரபு-நெப்போலியன் இணைந்து நடிக்க பிரமாண்டமாகத் தயாராகும் சினிமான்கோப் படம் 'மிட்டா மிராசு'.

'பூமணி', 'பூந்தோட்டம்', 'கிழக்கும் மேற்கும்', ஆகிய படங்களை இயக்கிய மு.களஞ்சியம் இப்படத்தை இயக்குகிறார்.

கிராமிய மணங்கமழும் படமாக உருவாகும் இப்படத்தின் கதை நில உச்சவரம்பு பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டது.

பிரபு,நெப்போலியனுடன் ரோஜா, மும்தாஜ், மணிவண்ணன், வடிவேலு, கோவை சரளா, ரவிராகுல், சத்ய பிரகாஷ், சுந்தர், புதுமுகம் சக்தி, அலெக்ஸ், சாப்ளின் பாலு ஆகியோர் நடிக்கின்றனர்.

கே.வி.மணி ஒளிப்பதிவு செய்கிறார். பிரபல பின்னணிப் பாடகர் அஸ்லம் முஸ்தபா இப் படத்தின் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

கதை, திரைக்கதை, வசனம் அமைத்துப் படத்தை இயக்குகிறார் மு.களஞ்சியம்.

## மாதவன் ஜோடியாக ஸ்னேகா

'பூவே உனக்காக', பொற்காலம்' ஆகிய படங்களைத் தெலுங்கில் தயாரித்த ஸ்ரீசாய்தேவா புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தமிழில் முதல்முறையாக படமொன்றைத் தயாரிக்கிறது.

இன்னமும் பெயர் சூட்டப்படாத இந்தப் படத்தில் கதாநாயகனாக மாதவன் நடிக்கிறார்.இவருக்கு ஜோடியாக 'விரும்புகிறேன்' படத்தில் நாயகியாக நடித்து வரும் புதுமுகம் ஸ்னேகா நடிக்கிறார்.

மற்றும் மணிவண்ணன், தலைவாசல் விஜய், பாண்டு, சார்லி, வையாபுரி, எஸ்.என்.லட்சுமி, பேபி தீபிகா, அஸ்வினி ஆகியோர் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை வசனம் அமைத்து படத்தை, இயக்குகிறார் புதிய இயக்குநர் சுரேஷ்.



பிரபு-ரோஜா
படம்: கந்தா கடம்பா கதிர்வேலா

## விந்தியாவின் வீராப்பு

'சங்கமம்' படத்தில் நடிக்கும் போதே விந்தியாவை 'ரிதம்' படத்தில் ஒப்பந்தம் செய்து விட்டார் தயாரிப்பாளர் பிரமிட் நடராஜன்.

இப்போது 'ரிதம்' படத்தில் இருந்து விந்தியாவை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக சங்கவியை நடிக்க வைத்துள்ளார்கள். ஏனென்று தயாரிப்பாளரிடம் விந்தியா கேட்டபோது, அந்த வேடத்தை இயக்குநர் கவர்ச்சிகரமாக்கி விட்டதால் தான் சங்கவியை நடிக்க வைத்திருப்பதாக தயாரிப்பாளர் சொல்லியிருக்கிறார்.

இதனால் கொதித்துப் போன விந்தியா "எனக்கும் கவர்ச்சியாக நடிக்கத் தெரியும் என்று காட்டத்தான் சூர்யா-ஜோதிகா நடிக்கும் 'உயிரிலே கலந்தது' படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடச் சம்மதித்தேன்" என்று வீராப்பாகக் கூறி வருகிறார்.

## பிஸியான சீனியர்கள்

வாய்ப்புக்கள் குறைந்திருந்த விஜயகாந்த், சத்யராஜ், பிரபு ஆகிய சீனியர் நடிகர்கள் மறுபடி பிஸியாகி உள்ளார்கள்.

'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா', 'தைபொறந்தாச்சு' ஆகிய படங்களின் வெற்றியால் பிரபு பிஸியாக, மறுபக்கம் 'வல்லரசு' படத்தின் மூலம் விஜயகாந்தும், 'என்னம்மாகண்ணு' படம் மூலம் சத்யராஜும் பிஸியோ பிஸி.

## குஷியான குஷ்பு

...மணத்திற்கு முன் தான் நடிக்க ஒப்புக்... பல படங்களை நடித்து முடித்துக் ...த்துள்ளார் குஷ்பு. இன்னும் ஓரிரு படங்கள் ...யில் இருக்கின்றன.

...கமாக இந்தப் படங்களை குழந்தை பெற்... பின்தான் குஷ்பு நடித்துக் கொடுப்... தெரிகிறது.

...யில் வயிற்றிலிருக்கும் குழந்தை ...பெண்ணா என்று பரிசோதனை செய்த... பெண்குழந்தை என்றதும் குஷியாகி விட்...

இன்னொரு 'குவா குவா' தகவல்: இந்திப் ...தயாரிப்பாளர் போனி கபூரைத் திருமணம் ...கொண்டு ஒரு பெண் குழந்தைக்குத் ...ன ஸ்ரீதேவி, இப்போது இன்னொரு ...தை பெறத் தயாராகி விட்டார். இதுவும் ...குழந்தைதானாம்.

## பிரபுதேவாவின் கூட்டணி

தனிக்கதாநாயகனாகத்தான் நடிப்பேன் என்று அடம்பிடிக்காமல் ஏனைய நாயக நடிகர்களுடன் நடிப்பதை விரும்புகிறார் பிரபுதேவா.

'வானத்தைப் போல' படத்தில் விஜயகாந்த், 'ஜேம்ஸ் பாண்டு' படத்தில் பார்த்திபன், 'பெண்ணின் மனதைத் தொட்டு' படத்தில் சரத்குமார் என்று இன்னொரு நாயகனுடன் கூட்டணி சேர்ந்து நடித்துள்ளார்.

அடுத்து இவர் முரளியுடன் இணைந்து ஒரு புதிய படத்திலும் நடிக்கவிருக்கிறார்.

## இளைஞர்களோடு இளைஞராக

விஜய்யுடன் 'ஒன்ஸ்மோர்', அஜய்யுடன் 'பூப்பறிக்க வருகிறோம்' ஆகிய படங்களில் முக்கிய வேடத்தில் நடித்துள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மறுபடி இளைஞர்களோடு இளைஞராக நடிக்கவுள்ளார்.

பிரசாந்த் நடிக்கும் 'என்ன விலை அழகே' படத்திலும், விக்ரம் நடிக்கும் 'விகடன்' படத்திலும் சிவாஜி கணேசனை முக்கிய வேடங்களில் நடிக்க வைக்கப் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன.

## மனோஜ் நடிக்கும் 'அந்த மான்'

'குருபார்வை' படத்தைத் தயாரித்த இயக்குநர் மனோஜ்குமாரின் குரு ஃபிலிம்ஸ் 'வானவில்' படத்தை அடுத்துத் தயாரிக்கும் படம் 'அந்தமான்'.

இதில் 'தாஜ்மஹால்' மனோஜ் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக அனிதா என்னும் புதுமுகம் அறிமுகமாகிறார். ஏனைய நடிக, நடிகையர் தேர்வு நடைபெற்றுவருகிறது.

கார்த்திக்ராஜா ஒளிப்பதிவு செய்ய, தேவா இசையமைக்கிறார்.

கதை, திரைக்கதை அமைத்து இயக்குகிறார் ராஜதுரை என்னும் புதியவர். இவர் மனோஜ்குமாரிடம் பல படங்களுக்கு இணை இயக்குநராகப் பணிபுரிந்தவர்.

இப்படத்தின் படப்பிடிப்புகள் யாவும் அந்தமான் நிகோபார் தீவுகளில் நடைபெறவுள்ளன.

## 'என் காரக்டரையே புரிஞ்சுக்க மாட்டேங்கிறீங்களே'

'என்னம்மா கண்ணு' படம் வெற்றிகரமாக ஓட ஆரம்பித்தும் சத்யராஜ் வீட்டுக்குத் தயாரிப்பாளர்கள் படையெடுக்க ஆரம்பித்தார்கள். அவர்களில் பத்துக்கும் மேற்பட்ட தயாரிப்பாளர்கள் படத்திற்கு வைக்கச் சொன்ன பெயர், 'என் காரக்டரையே புரிஞ்சுக்க மாட்டேங்கிறீங்களே.....'

சத்யராஜ் வில்லனாக நடித்தபோது பேசிய வசனங்களில் ஒன்றுதான் 'என்னம்மா கண்ணு'. இது நன்றாக ஓடுவதால் '24 மணி நேரம்' படத்தில் பேசிய 'என் காரக்டரையே....' என்று தொடங்கும் வசனத்தை அடுத்த படத்திற்கு வைத்தால் நன்றாக ஓடும் என்ற சென்டிமென்ட் தான் இதற்குக் காரணம்.

# மறப்பேனா...?

ஒரு மழைநாள் -உன்
வாசலில்
நீ முகம் பார்த்த
நீர்க்குமிழியில்-உன்
முகத்தோடு
என்முகம் சேர்த்துப்
பார்க்கத் துடித்த போது,
முகம் சேர்க்க முன்னமே
உடைந்து போன
மழைக்குமிழியை
மறப்பேனா....?

நீ தீவைத்த சூடத்தின்
சுவாலையை-என்
கைவிரல்கள் மூடிக்
காத்த போது
தீபம் அணைந்து
கரி மட்டும்-என்
கை நனைத்த போது-உன்முன்
உருகிய சூடம் போல்
உருமாறி நின்றேனே
மறப்பேனா....?

மரத்தடி நிழலில்
நீ மண்டியிட்டு
அழுதது அறியாமல்
தட்டில் வழிந்திருந்த-உன்
கண்ணீர்க் கரைசலைத்
தொட்டுக் கொண்டு
மாங்காய் தின்றேனே
மறப்பேனா...?

நான் உனக்காய் எழுதிய
கவிதை நோட்டின்
கடைசித் தாளில்
கடற் கரையோரம்-கடையில்
சுண்டல், கடலை வாங்கியபோது
கடலைப் போல்
கலங்கி நின்றேனே
மறப்பேனா...?

நீ தொலைத்த
இரண்டு ரிபன்களுக்காய்
கண்ணீர் வராமல்
சிணுங்கிய போது-நான்
கண்டெடுத்ததாய்ச் சொல்லி
நான்கு ரிபன்கள்
தந்தேனே-வீட்டில்
புதுக்குடை கிழிந்ததற்காய்
கம்படி பட்டேனே
மறப்பேனா.....

நீ தினம்-என்
கனவில் வருவதைச் சொல்ல
காத்திருந்த என்னிடம்
கனிவாய்ப் பேசி-என்
நண்பனை நேசிப்பதாய்ச்
சொன்னபோது,
போலியாய்ச் சிரித்தேனே...
"போங்கள் அண்ணா!" என்றாயே
மறப்பேனா-என்னுயிர்
மரிக்கும் வரையும்....

எம். வதனரூபன்,
சம்பூர்-05.

## மௌன உணர்வுகள்

என் கற்பனைகள்
நிலையில்லாத
நிம்மதியற்றுத்
துப்பறியும்
நினைவுகளைக்
கட்டிக்காக்க முடியாத
பிணமாய்ப் போன
வாழ்வுக்காகச்
சிறகடித்துப்
பறந்து கொண்டன.
***
குமுறுகின்ற
எரிமலைபோல்
குழம்பித்துடிக்கும்
என் வாழ்வு
நிஜமில்லாத
உணர்வுகளால்
தூக்கியெறியப்படுகின்றது
***
பேய்களின் ராஜ்ஜியத்தில்
உயிர் ஜீவனம்
செய்வது போல்
ஒரு பிரமை;
என் இளமையின்
உணர்வுகள்
சுதந்திர உரிமைகளுக்காய்ப்
போராடி
மௌனியாய்
இதயம்
குமுறிக் கொள்ளும் போது,
***
குழி விழுந்த
உலகப் புள்ளிக்குள்
ஞாபகமற்றுத்
துயில் கொள்ளும்
என் மௌன உணர்வுகள்
இமைகள் திறக்க முடியாதவாறு,
மரணித்துக்
கொண்டிருக்கின்றன.....
சமாதானம் வேண்டி!
எம்.பீ. முர்ஷிதா-பொத்துவில்.

எத்தனை
எதிர்பார்ப்புகளோடு
என்
வாலிபத்தினுள் நுழைந்தேன்...!
***
கல்வியில்
கரைகாண
கங்கணம் கட்டிக்கொண்டிருந்த
என் கனவுகள்
கரையான் அரித்த
அரிச்சுவடியாய்
அழிந்து போனதே...
***
வசந்தமான
என்
வாலிபப் பருவம்
'இலையுதிர்காலத்தைப் போல்'
உதிர்ந்து போனதே....
***
விடிவு பிறக்கவேண்டும்
என்றெண்ணி
வியாபாரத்தில்
கால்பதித்த-என்னை
வீதிக்கு கொண்டுவந்ததே....
***
தறிக்கெட்டோடிய
என்
வாலிபத்தை தடுத்து நிறுத்த
அருகில்
தாயில்லாமல்
நான் தவித்துப்போனேனே...
***
எதைச்
சொல்வேன்...!?
அன்புக்காக ஏங்கிக்
கொண்டிருந்த
என் வாலிபத்தை
காதல் என்ற பெயரில்
அவள்
காயப்படுத்திவிட்டுப் போனதை
சொல்வேனா.....?
***
என்
உறவுகள் எல்லாம்
ஒருசேர
உதிர்ந்து போனதைத்தான்
சொல்வேனா....?
***
ஊமையாய்
எனக்குள்
நான் அழுவதுதான்



## நேசிக்கிறேன்...!

என் புன்னகை என்பதை
எப்படிச் சொல்வேன்....?
***
என்
எதிர்பார்ப்புகள் எல்லாம்
என்னை ஏய்த்துவிட்டாலும்
இன்னும்
நான் நேசிக்கின்றேன்....
என்னையும்
எனக்குரிய
எதிர்காலத்தையும்...!

ராம். யுவராஜ்-
கண்டி.

## எங்கள் தேசமடா!

எங்கள் தேசம் எங்கள் தேசம்-இது
எங்கள் தேசமடா!
சிங்கத் தமிழன் ஆண்டதேசம்-இது
எங்கள் தேசமடா!
பொங்கும் மகாவலி பாயும் தேசம்-இது
எங்கள் தேசமடா!
பொறுமைக்குப் பெருமை கண்டதேசம்-
இது
எங்கள் தேசமடா!
குருதி மழையில் ஊறியதேசம்-இது
எங்கள் தேசமடா!
குருட்டுப்பாணன் பெற்ற தேசம்-இது
எங்கள் தேசமடா!
அருவிகளோடி களைத்த தேசம்-இது
எங்கள் தேசமடா!
அழகுடன் வளங்கள் கொண்டதேசம்-இது
எங்கள் தேசமடா!
சங்கிலி மன்னன் ஆண்ட தேசம்-இது
எங்கள் தேசமடா!
சரித்திரப் பெருமை கொண்டதேசம்-இது
எங்கள் தேசமடா!
ஆங்கில மொழியார் ஆண்ட தேசம்-இது
எங்கள் தேசமடா!
அமைதியை இழந்து தவித்திடும் தேசம்-இது
எங்கள் தேசமடா!

ஈழத்துக்கவிராயர்-
திருகோணமலை.

## தேன் கிண்ணம்

# தந்தையின் பாதையில் தனயன் கபிலன்

கம்பருக்குப் பின் நம் கண்களுக்குள் பளிச் சென வரும் கவிஞர்கள் என்றால் பாரதியார், பட்டுக்கோட்டையார், பாரதிதாசன், கண்ணதாசன், வாலி போன்றவர்களுடன் வைரமுத்துவையும் சொல்லலாம்.



தமிழக முதலமைச்சருக்கு கவிதைநூல் வழங்குகிறார் கபிலன். அருகில் அப்பா, அண்ணன்.

கம்பருக்கு அம்பிகாபதி வாரிசாக இருந்து கவிதை புனைந்ததனைப் படித்திருக்கிறோம். ஏனைய கவிஞர்களது வாரிசுகள் கவிதை புனைந்திருக்கிறார்களா என்று தெரியவில்லை.

ஆனால் வைரமுத்துவுக்கு வாரிசு உண்டு. தந்தையின் பாதையில் கவிதை புனையும் தனயன் கபிலன் தான் அந்தப் பதினெட்டு வயது வாரிசு.

'உலகம் யாவையும்' என்கிற கபிலனின் கவிதைத் தொகுப்பு அண்மையில் வெளியீட்டு விழா நடந்தது. விழாவில், "நான் எழுதிய நல்ல கவிதை இவன் தான் என்று நிறைந்து நிற்கின்றேன்!" என்று கர்வப்பட்டார் வைரமுத்து.

கபிலனின் கைவண்ணத்தில் வந்த முத்துச் சிதறல்கள் சில:

மிருகத்திலிருந்து வந்தவன்
மனிதன்
மனிதனிலிருந்து வந்த மிருகம்
மதம்!
**
செங்கல் சுமந்து
சாலை கடந்த
ஏழைச் சிறுவன்
சுவர் சுமந்த எழுத்துக்களைப்
படித்து விட்டுச் சிரித்தான்
'இளமையில் கல்'!
**

மின்னலுக்கு கபிலன் எழுதிய வரிகள்:

எத்தனையோ ஆண்டுகளாய்
முட்டிப் பார்த்து
மோதிப்பார்த்து
எரியாமல் போன
டியூப் லைட்!
**

இன்னும் கொஞ்சம் கேளுங்கள்:

வானம் ஓர்
அலாவுதீன்
நிலவு-அதன்
அற்புத விளக்கு
மேகக் கரங்களால்
அடிக்கடி அது
தேய்க்கப்படுகிறது.
பூதங்கள் வருவதோ
பூமியில் தான்!
**

'சுதந்திரம்' பற்றிக் கபிலன் சொன்னது:

பாடுபட்டு வாங்கினோம்
பாடுபடாமல் தொலைத்தோம்
பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரட்டல்: தேனீ


## யார் இவர்?




ஒல்லியான இந்த இளைஞர் இன்று ஒரு பிரபல நகைச்சுவை நடிகர். இப்போது இவர் இல்லாத படங்களே இல்லை என்று சொல்லுமளவிற்கு பிஸியாக நடித்து வரும் இவர் யார் என்று தெரிகிறதா? தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் பக்கம் 18ஐப் புரட்டிப்பாருங்கள்.

பக்கம் 18ஐப் புரட்டிப்பாருங்கள்.

## பேனா நண்பர்கள்



பெயர்: கே.கஜாந்தராசா
வயது: 17
முகவரி: தபால் கந்தோர் வீதி, கோளாவில் 01, அக்கரைப்பற்று.
பொழுது போக்கு: பத்திரிகை வாசித்தல்.



பெயர்: எம். சோபா,
வயது: 18
முகவரி: இல. 54/2, நலன்புரி நிலையம், சிதம்பரம், வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை படித்தல்.

# இந்தவாரம் உங்கள் பலன்

30.07.2000 முதல் 05.08.2000வரை

ஜோதிடர் 'கார்னர்'

**மேடம்:**
தொழில் வளர்ச்சி பெறும். பரீட்சை வெற்றி அளிக்கும். உதவிகள் வந்துசேரும். தடைகள் விலகும். மாமன் வழி உறவினர்களின் உதவிகள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 3
அதிஷ்ட திகதிகள் : 30, 03

**இடபம்:**
தடைப்பட்ட செய்திகள் கிடைக்கும். உறவினர்களால் உதவிகள் அமையும். இயந்திர, வக்கீல் தொழில் செய்வோர் பெரும் பண வசதிகளைப் பெறுவார்கள். ரோகினிக்காரப் பெண்களுக்கு அரசகரும விடயம் கைகொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 7
அதிஷ்ட திகதிகள் : 31, 02

**மிதுனம்:**
உறவினர்களால் பணவசதியும் பெருமையும் ஏற்படும். நோய் துன்ப நிலை ஏற்படலாம். திட்ட மிட்ட விடயங்கள் தள்ளிப்போகும். ஏஜென்ஸி தொழில் செய்வோர் நன்மையடைவார்கள். திருவாதிரைக்காரருக்கு, சுபகரும விடயம் கைகூடிவரும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், செவ்வாய்
அதிஷ்ட நிறம் : கபிலம்; எண்: 2
அதிஷ்ட திகதிகள் : 02, 04

**கடகம்:**
மாற்றமான முடிவுகள் அலைச்சல் கொடுக்கும். வேலைப்பளு, மிக அதிகமாகக் காணப்படும். திருமணத் தடைகள் விலகும். உறவினர்களின் வருகையுண்டு. தொழில் நுட்பக்கல்வி பயில்வோர் உயர்வடைவர். பூசநட்சத்திர பெண் குடும்பத்தவர்களுக்கு அலைச்சல் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், சனி
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 4
அதிஷ்ட திகதிகள்: 31, 04

**சிம்மம்:**
வெற்றிகளால் மனம் பூரிக்கும். பணவசதிகள் பன்மடங்கு பெருகும். நெடுநாள் காதல் கைகூடும், புதிய திட்டங்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும். மக நட்சத்திரருக்கு மன மகிழ்ச்சியான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 1
அதிஷ்ட திகதிகள்: 01, 05

**கன்னி:**
எதிர்பார்த்த கருமம் நிறைவேறும். கணவரால் சிறுபிரச்சனைகள் வந்து போகும். இருப்பிடமாற்ற நிலையுண்டு, பல்வேறுபட்ட சிக்கல்கள் வந்துபோகும் உத்தர அத்த பெண்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்
அதிஷ்ட நிறம்: மண்ணிறம்; எண்: 6
அதிஷ்ட திகதிகள்: 30, 05

**துலாம்:**
கல்வி முயற்சிகள் திருப்தியளிக்கும். பண வசதிகள் பெருகும். தூர இடத்து நற்செய்திகள் கிடைக்கும். சகோதரர்களின் உதவியும் ஸ்தல யாத்திரையும் ஏற்படும். சிங்க இராசிக்காரரால் உதவிகள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம்: மருண்; எண்: 5
அதிஷ்ட திகதிகள்: 01, 05

**விருட்சிகம்:**
பணவசதிகள் பெருகும். கஷ்டமான விடயம் நிவர்த்திபெறும். நோய்துன்ப நிலை மாற்றம் கொடுக்கும். மனதில் சந்தோஷம் பெருகும். முக்கியமான தொழில் பெரிய மாற்றத்தைக் கொடுக்கும். கேட்டை நட்சத்திரருக்கு பணவசதிபெருகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 9
அதிஷ்ட திகதிகள் : 30, 02

**தனுசு:**
செய்கருமங்கள் தடைப்படலாம், எதிலும் நிதானமாக நடந்து கொள்ளவும். விவசாயத் தொழில் செய்வோருக்கு நஷ்டம் வரும். கல்வி சீராக இருக்காது. முயற்சிகளில் கூடுதலாக கவனம் எடுக்கவேண்டும். மூலநட்சத்திரர் தொழில்செய்வோர் கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : இளஞ் சிவப்பு; எண்: 3
அதிஷ்ட திகதிகள் : 30, 03

**மகரம்:**
பிள்ளைகளின் சுப செய்திகள் கிடைக்கும். பணஉதவிகள் கிடைக்கும். பெரியோர்களின் ஆசிர்வாதமும் பரீட்சையில் வெற்றிநிலையும் காணப்படும். திருவோண நட்சத்திரர் உற்சாகம் அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 8
அதிஷ்ட திகதிகள்: 31, 03

**கும்பம்:**
தன்னம்பிக்கை பிறக்கும்; விடுபட்டுப்போன கடன்-கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகள் தீரும். பலமாற்றங்கள் வரப்பெறும். நோய்துன்ப நிலைமாறும். கலைத்துறையினருக்கு உயர்வான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம்: ஊதா; எண் : 6
அதிஷ்ட திகதிகள்: 01, 03

**மீனம்:**
தடைப்பட்ட விடயம் கைகூடும். பரீட்சைகள் வெற்றிதரும். வெளிநாட்டு கல்வி முயற்சிகள் நன்மையைக் கொடுக்கும். பணவரவு தாராளமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய் வியாழன்
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 5
அதிஷ்ட திகதிகள் : 2, 4.

# நில்—கவனி—முன்னேறு

நிறையப்பேர்கள் தேவையற்ற பல சிறிய கவலைகளை உருவாக்கிக் கொண்டு எப்போது பார்த்தாலும் கவலைப்பட்டு வருகிறார்கள். ஒரு காசு பெறாத விஷயங்களைக் குறித்து அனைத்து நேரமும் கவலைப்பட்டு தங்களுக்கு தாங்களே எதிரிகளாக செயல்பட்டு தங்களுடைய சந்தோஷத்தை அழித்துக் கொண்டு விடுகிறார்கள்.

இதைவிட மோசமான பழக்கம்-தங்களிடம் இல்லாத தவறுகளை கற்பனையில் உருவாக்கிக் கொண்டு எப்போதும் சோகத்தில் மூழ்கிக் கிடப்பதுதான். 'நான் எதற்கும் உபயோகமற்றவன். என்னால் எந்த ஒரு



காரியத்தையும் நன்கு செய்து முடிக்க முடியாது. எனக்கு உதவி செய்பவர்கள் யாரும் இந்த உலகில் இல்லை,' என்பதைப் போன்று தன்னைத் தாழ்வாக மதிப்பிட்டுக் கொண்டு நிறையப் பேர்கள் தாங்க முடியாத வேதனையை அனுபவித்து வருகிறார்கள். கற்பனைதன் வளர்ச்சிக்கு உதவும்படி இருக்க வேண்டுமே தவிர, கவலை என்ற சேற்றைப் பூசிக் கொள்ளக் கூடாது. கவலைப்படுவதை ஒருவன் நீண்ட காலமாக கடைபிடித்து வந்தால், அது ஒரு பழக்கமாகவே மாறிவிடும்.

கவலைப்படுவதினால் நாளை வரும் கஷ்டங்கள் தடுத்து நிறுத்தப்படப்போவதில்லை. அவைகள் இன்று நம்மிடம் குடி கொண்டிருக்கும் நம்பிக்கையை அகற்றி விட்டு நம்மை வலுவற்றவனாகச் செய்து விடும். 'இந்த உலகத்தில் இதுவரையில் நடந்த போர்களினால் மாண்டவர்களைவிட கவலைப்படுவதினால் மாண்டவர்களின் எண்ணிக்கை பல மடங்குகள் அதிகம்' என்று ஒருவர் தான் எழுதிய நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

'கடினமாக உழைத்து நிறைய வேலைகளைச் செய்து வரும் ஒருவன் முழு வாழ்க்கை வாழாமல் இறந்ததை நான் கண்டதே கிடையாது. அதற்கு மாறாக கவலைப்படுபவர்கள் பலவிதமான வியாதிகளை வரவழைத்துக் கொண்டு முழுவாழ்க்கை வாழாமல் இறந்து விட்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன்,' என்று ஒரு மருத்துவர் கூறியிருக்கிறார்.

வாழ்க்கையில் நிறைய வெற்றி பெற்றவர்களுடைய செய்கைகளை நீங்கள் கவனித்துப் பாருங்கள். வெற்றி வீரர்கள் தொடர்ந்து தம் இலட்சியங்களை அடையும் முயற்சிகளில் எப்போதும் தீவிரமாக ஈடுபட்டிருப்பார்கள். அவர்களுக்கு கவலைப்படுவதற்கே நேரம் இருக்காது. சோம்பேறிகள் தான் எப்போது பார்த்தாலும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். 'கவலைப்படுவது சோம்பேறிகளின் பொழுது போக்கு' என்று ஒருவர் கூறியிருப்பது முற்றிலும் உண்மையாகும்.

நேற்றைய கவலைகளைப் பற்றி இன்று கண்ணீர் விட்டுக் கொண்டிருக்காதீர்கள். அவைகளை உடனே மறந்து விட்டு, புதிய முயற்சிகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

# உடலுக்கு அழகு தருவது உடை!

## நலம் தருவது நடை!

நோயில்லாமல் வாழ மனிதர்கள் பின்பற்ற வேண்டிய எளிய வழிமுறைகளில் ஒன்று நடப்பது ஆகும்.

மனிதனுக்கு வரும் இரத்த அழுத்தம், இதயநோய், நீரிழிவு, உடற்பருமன், மனத் தளர்ச்சி போன்ற பல விளைவுகளைக் குறைக்க பணம் செலவு செய்யாத வழி நடப்பது தான்.

நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் நடப்பது நுரையீரல்களுக்குச் சிறந்த பயிற்சி ஆகும். நல்ல பசுமையான மரங்களை பார்த்துக்கொண்டே நடப்பது கண்களுக்கு நல்ல பயிற்சி ஆகும். தனிமையில் சிந்தித்தபடி நடப்பதும் மனதை ஒரு முகப்படுத்தும் உள்ளத் திற்குச் சிறந்த பயிற்சி ஆகும்.



### இதய நோய்களைக் குறைப்பதற்கு....

இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய்களுக்குக் காரணமாக இருப்பது கொழுப்பு. விறுவிறுவென்று நடக்கும்போது இதயப் பாதிப்பில் இருந்து காப்பாற்றக்கூடிய இரத்தக் கொழுப்புகள் அதிகரிக்கின்றன. அதே சமயம் இரத்த ஓட்டத்திற்குத் தடை செய்யும் கொழுப்புக்கள் குறைகின்றன. இதனால் இரத்த ஓட்டல் சீராகிறது.

ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை செய்பவர்களைக் காட்டிலும் நடந்து வேலை செய்பவர்களுக்கு இதயபாதிப்பு குறைவு.

### நீரிழிவு நோயைக் குறைப்பதற்கு...

ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்பவர்களையும் பொதுவாகப் பருமனாக உள்ளவர்களையும் நீரிழிவு நோய் அதிகம் பாதிக்கின்றது. நீரிழிவு நோய் உள்ளவர்களுக்குக் கூறப்படும் சிகிச்சை முறையில் முதலிடம் வகிப்பதும் நடைப்பயிற்சிதான். நடப்பதால் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு குறைகிறது.

இந்தவிளைவு குறைந்தது இரண்டு நாட்கள் வரை இருக்கலாம்.. என்பதனால் நீரிழிவு நோயுள்ளவர்கள் நாள்தோறும் சிறிது நேரம் தொடர்ந்து நடந்தால் நன்மைகள் கிடைக்கும்.

### மாரடைப்பு நோயைக் குறைப்பதற்கு....

இன்று மனிதனை திடீரென்று தாக்கும் மாரடைப்புக்கான காரணங்களில் உடல் பருமனும் ஒன்றாகும். மேலும் மனிதனின் உடல் அழகை குறைப்பதும் உடல் பருமன் ஆகும். உடற் பருமனை குறைக்க நடக்கும் பயிற்சி மிக அவசியமாகும். நடக்கும்போது உடம்பில் சேர்ந்துள்ள கலோரிகள் செலவழிகின்றன. இதனால் உடம்பில் உள்ள கொழுப்புச்சக்தியின் அளவு குறைகின்றது. இதனால் உடற் பருமன் குறைவதோடு, உடலுக்கு அழகான தோற்றம் கிடைக்க வழிஏற்படுகிறது.

### முதுகு வலியைக் குறைப்பதற்கு....

முதுகு வலியைக் குறைப்பதற்கு நடப்பது அவசியம். நடப்பதால் முதுகெலும்பைச் சுற்றியுள்ள தசைப்பகுதி வலுவடைவதால் முதுகெலும்பும் வலுப்பெறுகிறது. சுத்தமான காற்றை சுவாசித்தபடி நடக்கும்போது, முதுகெலும்பிற்கு உறுதி கிடைக்கிறது. இதனால் முதுகுவலி குணமடைய வழி ஏற்படுகிறது.

### பெண்களின் சுகப்பிரசவத்திற்கு....

நாள்தோறும் கர்ப்பிணிப் பெண்கள் நடப்பதால், இடுப்பெலும்பு வலுப்படுகிறது. இதனால் சுகப்பிரசவம் ஏற்பட வழி ஏற்படுகிறது. எனவே கர்ப்பிணிப் பெண்கள் நடப்பது அவசியம் என்று மகப்பேறு மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

### எலும்புகள் தேய்மான குறைவிற்கு....

வயது ஆவதால் ஏற்படும் எலும்புகள் தேய்மான பாதிப்பு, நடப்பதால் குறைகிறது. உடம்பின் எடை, மூட்டுகளுக்குச் சம அளவில் கிடைக்கிறது. மூட்டுகள் உறுதி பெற நடக்கும் பயிற்சி உதவுகிறது.

### நடப்பது எப்படி? எப்பொழுது?

முடிந்தளவு தனியாக நிமிர்ந்தபடி காலை அல்லது மாலை நேரத்தில் நடப்பது நல்லது. அப்போதுதான் உடல் தேவைக்கேற்ப மட்டுமல்ல விறுவிறுப்பாகவும், வேகமா கவும் நடக்க முடியும். சுருக்கமாகச் சொன்னால்....

"உடலுக்கு அழகு தருவது உடை"

"உடலுக்கு அழகுடன், நலம் தருவது நடை"


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HY

பெயர்:.......................................

முகவரி:.......................................

.......................................

தொழில்:.......................................

கையொப்பம்:.......................................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05.08.2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 48 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

கிளின்ரன் தனது இளமைக்காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை அவர் வாயால் கேட்ட மோனிக்கா, தன்னிடம் இத் தகவல்களை ஏன் விவரிக்க வேண்டும், என்று முதலில் கருதினாள். பின்னர், இனிமேலாவது தன் குடும்பத்துடன் ஒன்றிவாழவிரும்புவதாகக் கூறி மோனிக்காவுடனான உறவை வெட்டி விடுவதற்காகத்தான் இக்கடந்த கால வரலாற்றை அவர் கூறியிருக்கிறார் என்பதை மோனிக்கா உணர்ந்து கொண்டாள்.

கிளின்ரன் தனது முடிவை அறிவித்ததும் மோனிக்கா அழுதாள். கிளின்ரனும் அழவே செய்தார்.

மோனிக்காவைப் பொறுத்தவரை அன்றைய தினம் 1997 மே 24 ஒரு வெற்றிநாளா அல்லது தன்னை பாதாளத்தில் தூக்கியெறியப் பட்ட நாளா என்பதை அனுமானிக்க முடியவில்லை. பின்னர் அந்த நாளைப் பற்றி எண்ணிப்பார்க்கும் போது "உண்மையில் அவருக்கு இது ஒரு பெரும் மனப்போராட்டமான நாள் என்று தான் கருதினேன். அவர் எத்தகைய வேதனையில் உழல்கிறார் என்பதை நினைக்கும் போது எனக்கும் மிகுந்த வேதனை தான்" என்று தெரிவித்தாள்.



சற்று நேரத்தின் பின்னர் ஜனாதிபதியின் அந்தரங்கச் செயலாளரான பெட்டி கியூரி, மோனிக்காவை வெளியே அழைத்துச் செல்ல வந்தார். இருவரும் அழுது கொண்டிருந்ததை அந்த அம்மையாரும் அவதானித்துள்ளார். மோனிக்காவை தன் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு சென்றதும் மோனிக்காவால் தன்னைக் கட்டுபடுத்த முடியவில்லை. ஓவென அழுதாள். கியூரி அவளைத் தேற்றினார். "எனக்குத் தெரியும் நானும் ஒரு பெண் தானே? இது சிறியவளான உன்னால் தாங்கிக் கொள்ள முடியாத பெரும் துயரம் தான்!" என்று அணைத்துக் கொண்டு மோனிக்காவின் கண்களைத் துடைத்துவிட்டார்.

காதல் லீலைகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டாலும், தன் வாழ்க்கையில் மோனிக்காவுக்கும் ஓரிடம் என்றும் இருக்கவே செய்யும் என்று கிளின்ரன் அவளிடம் கூறியிருந்தார். "இருவரும் நல்ல சினேகிதர்களாக வாழலாம்," என்று கூறித்தான் வழியனுப்பினார்.

மோனிக்கா வெள்ளை மாளிகையிலிருந்து தனது காரில் எவ்வாறு வீடு வந்து சேர்ந்தாள் என்பதே அவளுக்குத் தெரியது. தான் இருந்த மனப்பான்மையில், வேறுவாகனங்களில் முட்டுப்படாமல், எவ்வாறு பயணம் செய்தாள் என்பதைப் பின்னர் எண்ணிப்பார்க்கையில், தனக்கே வியப்பாக இருந்ததாகக் கூறியிருக்கிறாள். அன்று மட்டுமல்ல, தொடர்ந்து பல நாட்கள் வரை மோனிக்கா பெரும் துயரக்கடலிலாடினாள்.

மோனிக்காவின் அப்போதைய நடவடிக்கைகளை அவதானித்த அவளுடைய தாய் மார்சியாவும் சித்தி தெப்ராவும் அவளுடைய உண்மையான நிலையை ஓரளவு அனுமானித்துக் கொண்டனர். ஜனாதிபதி கிளின்ரனுடனான தனது மகள் மோனிக்காவின் விரும்பத்தகாத உறவு முறிந்துவிட்டது என்பதை மார்சியா அறிந்து மகிழ்ச்சியடைந்தாள். மோனிக்கா தனது வயதுக்கும்அந்தஸ்துக்கும் ஏற்ற ஒரு துணையைத் தேடிக் கொள்ள வேண்டுமே என்பதுதான் அவருடைய பிரார்த்தனையாக இருந்தது.

மோனிக்கா தனது பிரச்சனைகளை மனம் விட்டுக் கூறி ஆறுதலடைய அக்காலகட்டத்தில் அவளுடைய நெருங்கிய சிநேகிதிகள் எவரும் இருக்கவில்லை. கேத்த ரின் ஆல்டே டேவிட் வாஷிங்கடனிலிருந்து டோக்கியோ சென்றுவிட்டாள். மற்றுமொரு சிநேகிதியான நெய்சா டிமான் ஏர்ப்ளன்ட் நீயூயோர்க் நகரிலிருந்தாள். ஆஸ்வே ரெயின்ஸ் மட்டுமே வாஷிங்டனில் இருந்தாள். ஆனால் தனது துயரத்தை அவளுடன் பகிர்ந்துக் கொள்ள மோனிக்கா விரும்பவில்லை. நெய்சா ஏர்ப்ளன்ட் என்பவருடன் மட்டும் தொலைநகல் தொடர்பு கொண்டு தன்னிலையை விளக்கினாள்.

இதற்கிடையில் மோனிக்காவின் தாய் மார்சியா தனக்கான ஒரு புதுத்துணைவரை தேடிக் கொண்டாள். அவர் நியூயோர்க் நகரில் ஜனநாயக் கட்சியின் முக்கியஸ்தரும் செல்வந்தருமான பீற்றர் ஸ்ற்ரோஸ் என்பவர். இவர் நியூயோர்க் நகரில் வாழ்ந்து வந்தமையினால் அவளுடைய தாயார் அங்கு சென்று வாழத்திட்டமிட்டாள். சித்தி தெப்ராவும் வேர்ஜினியாவுக்கு தனது இருப்பிடத்தை மாற்றிக் கொண்டாள். இந்நிலையில் தனித்து விடப்பட்ட மோனிக்கா,

## பொறியில் அகப்பட்ட புறா....!

தனக்கு ஆறுதல் கூற எவரும் இல்லாத நிலையில் தத்தளித்தாள்.

தனது பழைய காதலான அண்டி பிளேய்லரிடம் தான் உறவை முறித்துக் கொண்டது தவறு என்றும், அவனுடைய தொடர்பு இருந்தாலாவது தற்போதைய தனிமைக்கு சற்று ஆறுதலாக இருக்குமே என்றும் கருதி வேதனைப்பட்டாள்.

தனது மகள் வாஷிங்டனில் தனியாகக் கிடந்து துயரக்கடலில் மூழ்குவதைவிட தன்னோடு நீயூயோர்க்கில் வந்து சேர்ந்துவிட்டால் நன்று என்று தாய் மார்சியா கருதினாள். எவ்வளவோ முயற்சி எடுத்தும் மோனிக்கா மறுத்துவிட்டாள். அவளுக்குப் பொருத்தமான ஒரு துணையையாவது தான் வாஷிங்டனை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு ஏற்பாடு செய்து விட்டுப் போகலாம் என்றும் கூட மார்சியா கருதினாள். தனக்குத் தெரிந்த பல சிநேகிதர்கள் மூலம் இதற்கான ஓர் ஏற்பாட்டைச் செய்ய முயற்சி எடுத்தாள். அதிலும் உடனடியான பலன் கிடைக்கவில்லை.

மோனிக்காவைப் பொறுத்தவரையில் அவள் வாஷிங்டனை விட்டு எங்குமே நகர விரும்பவில்லை. எப்படியும் தான் மனதார விரும்பிய ஒருவர் இருக்கின்ற இடத்தில் தான் இருக்க வேண்டும் என்றே பெரிதும் விரும்பினாள்.



லிண்டா

கிளின்ரன் தன் வாழ்வில் மோனிக்காவும் எப்போதும் ஓரங்கமாக இருக்க வேண்டுமென்று அவளிடம் கூறியது போல தன்னுடைய வாழ்வில் என்றும் கிளின்ரன் மனதளவிலாவது நிரம்பி இருக்க வேண்டும்; அவரை அடிக்கடி வெகு தொலைவில் இருந்தவாறாவது ஓரிரு தடவைகள் பார்த்துத் திருப்தி அடைய வேண்டும் என்றும் விரும்பினாள். இதற்காகவே அவள் வெள்ளை மாளிகையில் சம்பளம் குறைந்த மிகச் சாதாரண வேலை ஒன்றிலாவது சேர்ந்து விட வேண்டும் என்று பெரிதும் விரும்பினாள்.

பெண்டகனிலுள்ள தனது பணிக்கு மனமில்லாமல் சென்று வந்தாள். தான் சொற்ப வருமானமுள்ள வெள்ளை மாளிகை பணியொன்றை ஏற்கும் காலம் வரை அவளுக்குப் பணம் தேவைப்பட்டது. இதற்காகவே பெண்டகன் பதவியை அரை மனதுடன் பார்த்து வந்தாள்.

மே மாத இறுதியில் வெள்ளை மாளிகையில் தேசிய பாதுகாப்பு அலுவலகத்தில்- அந்த அலுவலகத்தின் ஆலோசகர் சாண்டி பெகர் என்பவரின் கீழ் அவளுக்கேற்ற ஒரு பதவி இருப்பதாக அறிந்து அதற்கு விண்ணப்பித்தாள். விமானப்படை விமானங்களில் அடிக்கடி பல இடங்களுக்கும் சென்று வரவேண்டிய பணி என்பதனால் அது தனக்குப் பொருத்தமாக இருக்கும் என்றே கருதினாள்.

வெள்ளை மாளிகையில் ஏதாவதொரு வேலைக்கு விண்ணப்பித்தால், தனது செயலாளர் பெட்டி கியூரியின் மூலம் தனக்கு தெரியப்படுத்துமாறு ஏற்கனவே கிளின்ரன் மோனிக்காவிடம் கூறியிருந்தார். பதவிக்கு விண்ணப்பித்துவிட்டு பெட்டி கியூரியுடன் தொடர்பு கொள்ள முயன்றபோது அந்த அம்மையாரோ கிளின்ரனோ வாஷிங்டனில் இருக்கவில்லை. இதற்கிடையில் மே 30ம் திகதியன்று அவளுக்கு நேர்முகப்பரீட்சையும் நடைபெற்றது. வெள்ளை மாளிகையில் மோனிக்காவுக்கேற்ற ஒரு வேலைக்கு ஏற்பாடுசெய்யும்படி வெள்ளை மாளிகையின் பணியாளர்களுக்கான பிரதி இயக்குநர் மார்சா ஸ்கொட் என்பவரிடம் கூறியிருப்பதாக மார்ச் மாதத்தில் கிளின்ரன் மோனிக்காவிடம் கூறியிருந்தது அவளுக்கு ஞாபகம் வந்தது. ஆகவே மோனிக்கா மார்சா ஸ்கொட்டுடன் தொடர்பு கொண்டாள்.

ஸ்கொட்டுடன் தொடர்பு கொண்டபோது அவருடைய உதவியாளர் கூறிய வார்த்தைகள் மோனிக்காவின் உள்ளத்தை சுக்கு நூறாக உடைத்தெறிந்தது. தனது அலுவலகத்தில் எந்த கோப்பிலும் மோனிக்காவின் பெயரைத் தான் காணவில்லை என்றும் தனது மேலதிகாரி ஸ்கொட்டுக்கு அவளைப் பற்றி எதுவும் தெரியாது என்றும் கூறி, அந்த அலுவலர் தொடர்பைக் கத்தரித்துக் கொண்டார்.

இதனால் மோனிக்கா பாலைவனத்தில் தனித்து விடப்பட்ட ஒரு குட்டி ஆட்டின் நிலையை ஒத்திருந்தாள். தன்னை உலகத்தில் எல்லோருமே கைவிட்டு விட்டதாகத் தவித்தாள். ஜனாதிபதி கிளின்ரனுடன் மிக நெருக்கமான உறவு வைத்திருப்பவரான மார்சா ஸ்கொட் என்பவரிடம் கிளின்ரன் தன்னைப் பற்றி கூறியிருந்தால் அவர் நிச்சயமாக ஏதாவது நடவடிக்கை எடுத்திருப்பார். ஆனால் அவளுடைய அலுவலகத்தில் மோனிக்கா பற்றிய குறிப்பு எதுவும் கிடையாது என்பதாக ஸ்கொட் டின் உதவியாளர் கூறியமையினால், இந்த விசயத்தில் கிளின்ரன் தனக்கு பொய்வாக் குறுதி அளித்துவிட்டார் என்றே கருதினாள். இதனை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இத்தகைய இக்கட்டான நிலையில், மோனிக்காவுக்கு ஆறுதலாக இருக்க வேண்டிய ஒரேயொரு நபர் லிண்டா ட்ரிப் மட்டுமே. அவள் மேலும் மேலும் ட்ரிப்பின் வலைக்குள் அமிழ்ந்தாள். லிண்டாவை சந்தித்து தனது இரண்டுங்கெட்டான் நிலையைச் சொல்லியழுதாள். லிண்டா மோனிக்காவை தனியான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று, வெள்ளை மாளிகையே பல வகையான பணிகளை உருவாக்கும் ஒரு ஸ்தாபனமாக இருந்தும் கூட மோனிக்காவுக்கு ஒரு சிறு வேலையாவது ஏற்பாடு செய்து தர முடியாது போனால், இதில் ஏதோ சூது இருக்கிறது!" என்று கூறி மோனிக்காவின் உள்ளத்தில் கோபக் கனல் ஏற்படக்கூடியவாறு தூண்டினாள்.

மோனிக்காவும் தன் வசமிழந்தவளாக கிளின்ரன் தனக்குக் கொடுமை இழைத்து விட்டார் என்று அழுதாள். தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த லிண்டா தன் வசமிருந்த ஒலிப்பதிவுக் கருவியை முடுக்கிவிட்டாள்.

கிளின்ரனுக்கும் மோனிக்காவுக்குமிடையில் நெருக்கமான தொடர்பு ஏற்பட்ட ஆரம்ப காலம் முதல் இறுதியாக இருவரும் சந்தித்த தினம் வரை, நடைபெற்ற சம்பவங்கள் அத்தனையையும் ஒன்றுவிடாமல் கூறுமாறு சொன்னாள்.

கள்ளங்கபடமற்ற மோனிக்கா எதையும் மறைக்காமல் ஒவ்வொரு சம்பவத்தையும் நினைவுபடுத்தி தனக்கும் கிளின்ரனுக்குமிடையில் இடம் பெற்ற சகல சம்பவங்களையும் உள்ளது உள்ளவாறே விபரமாகக் கூறினாள்.

இருவருக்குமிடையில் இரவு வேளைகளில் இடம்பெற்று வந்த மணிக்கணக்கான ஆபாசம் நிறைந்த உரையாடல்கள் அனைத்தையும் கூட மோனிக்கா கூறினாள்.

(வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?


## நாவலப்பிட்டி வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி ஆர்.ஜே. பெனிலிடஸ்<br>இல.25, கம்பளை வீதி, பின் ஒழுங்கை, நாவலப்பிட்டி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



# பாப்பா முரசு சிறுகதை

## அரசன் செய்த துரோகம்

பங்கவள்ளி காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தான் தனு சுந்தர பாண்டி மன்னன். கொடிய விலங்குகள் வாழும் காடு அது. ஒரு மானைத் துரத்திக் கொண்டு வெகுதூரம் வந்துவிட்டான். தன்னுடைய வீரர்கள் இருக்கும் இடத்திற்கு எப்படிச் செல்வது என்று வழி தெரியவில்லை. எனவே அங்கும், இங்கும் சுற்றி அலைந்தான்.



அப்போது அவனை நோக்கிச் சிங்கம் ஒன்று ஓடிவந்தது. சட்டென்று அருகில் இருந்த பெரிய மரம் ஒன்றின் மீது தாவி ஏறினான். 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டபடியே மேலே செல்லத் துவங்கினான். மேலே பார்வையை பதித்தவனுக்கு ஒருநிமிடம் உயிர் போய்விட்டது.

காரணம் அங்கே கரடி ஒன்று உட்கார்ந்திருந்தது. பயந்து போன அரசன் கீழே பார்த்தான். 'இவன் எப்போது இறங்குவான்?' என்று எண்ணியபடியே மரத்தை சுத்தி, சுத்தி வந்தது சிங்கம்.

இவனது நிலையை புரிந்து கொண்ட கரடி, "மனிதா! பயப்படாதே! இது என்னோட வீடுதான். தெரிந்தோ தெரியாமலே என் வீட்டிற்கு வந்து விட்ட உன்னை காப்பாற்றுவது என் கடமை. நீ இந்தக் கிளையிலேயே படுத்துத் தூங்கிவிடு. சிங்கம் நின்று பார்த்துவிட்டு போய்விடும். விடிந்ததும் நீ இறங்கிப் போய்விடு," என்றது.

மகிழ்ந்து போன அரசன் அந்தக் கிளையிலேயே படுத்துக் கொண்டான். இவனுக்கு காவலாக கரடி இருந்தது.

அரசன் தூங்கிவிட்டதை அறிந்த சிங்கம், "நீயும் நானும் ஒரே இனம். அவன் நம் இனத்தாரை அழிப்பவன். அவனுக்கு எதற்காக உதவி செய்கிறாய்? அவனை பிடித்து கீழே தள்ளு. நான் அவனை கொன்று விடுகிறேன். உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்," என்றது சிங்கம்.

அதற்கு கரடி, "சிங்கமே! நாம் இருவரும் ஒரே இனம்தான். ஆனால், தெரிந்தோ தெரியாமலோ அவன் என் வீட்டிற்கு வந்து விட்டான். அத்துடன் அவனைக்காப்பாற்றுகிறேன் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டேன். இனிமேல் நான் அவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வது கூடாது," என்றது கரடி.

கரடியின் மீது வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு மரத்தடியிலேயே படுத்துக் கொண்டது சிங்கம்.

சிறிது நேரத்தில் அரசன் கண்விழித்தான். "நண்பா! இப்போது நான் தூங்குகிறேன் நீ காவல் இரு," என்றது கரடி.

"சரி" என்றான் அரசன்.

இப்போது கரடி நன்றாகத்தூங்கிவிட்டதை உணர்ந்த சிங்கம், மெதுவாக அரசனிடம் பேசியது.

"மனிதா! இந்தக் கரடி நம்ப இரண்டு பேருக்குமே எதிரி. நானோ கடும்பசியில் இருக்கிறேன். நீ மெதுவாக அந்தக் கரடியை கீழே பிடித்து தள்ளிவிடு. அதை நான் தின்றுவிட்டு போய் விடுகிறேன். உனக்கு எந்த கெடுதலும் செய்யமாட்டேன்," என்றது.


'சட்'டென்றி நன்றிகெட்ட அரசன் கரடியை பிடித்து கீழே தள்ளினான். விழுந்த வேகத்தில் கண்விழித்த கரடி ஒருகிளையை பிடித்துக் கொண்டு உயிர்த் தப்பியது.

பிறகு மெதுவாக சமாளித்துக்கொண்டு மரத்தின் மேலேறியது. இதைக் கண்ட அரசன், 'இனி நாம் எமலோகம் செல்ல வேண்டியதுதான். நன்றிகொட்ட எனக்கு இந்த தண்டனை தேவைதான்,' என்று நினைத்தான்.

மனிதனின் உடல் பயத்தில் நடுங்குவதைக் கண்ட கரடி "மனிதா! பயப்படாதே! நான் உன்னைப் போல நண்பனுக்கு துரோகம் செய்யும் மனுஷன் அல்ல. நீ ஒரு அரசன். உன் உயிரைக் கொடுத்து குடிமக்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய நீயே, இப்படி இருந்தால், உன்னை நம்பி வாழும் குடிமக்களின் கதி என்ன?"

"இனி துரோகம் செய்யாதே, விடிந்ததும் நீ போகலாம்," என்றது கரடி.

தன் நன்றிகெட்ட செயலை எண்ணி மிகவும் வெட்கமடைந்த அரசன், கரடியின் கால்களைப் பிடித்து அழுதபடியே மன்னிப்புக் கேட்டான். இக்காட்சியைக் கண்ட சிங்கமும் சற்று மனம் நெகிழ்ந்தது. பிறகு, இனி நாம் இங்கு நின்று பயன் இல்லை என்பதை அறிந்ததால் அவ்விடத்தை விட்டுச் சென்றது.



**மேலே இருக்கும் புதையல் பெட்டியைத் திருடுவதற்கு வழி தேடுகிறான் கீழே இருக்கும் திருடன்.**

**திருடனுக்கு வழிகாட்டி உதவினால் நீங்களும் குற்றவாளியாகி விடுவீர்கள். எனவே திருடனுக்கு உதவி செய்யாமல், எந்த வழியால் வந்து புதையலைத் திருடன் திருடுவான் என்று நீங்கள் பாருங்கள்.**

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/- காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **05.08.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **353**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 351

**பரிசுக்குரியவர்:**
எச்.எம்.எம்.இர்பான்
மட்/அல்-அமீன் வித்தியாலயம், புதிய காத்தான்குடி-06.

**பாராட்டுக்குரியவர்கள்:**


| | |
|---|---|
| பாத்திமா றுஸ்கா நளீர்,<br>மூதூர் மத்திய கல்லூரி, மூதூர். | ஆ.சாகித்யா,<br>மட்/கோ.கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு. |
| எம்.கார்த்திகா,<br>க/ஓல்ட் பிக்கொக்.த.வி, புஸ்சல்லாவ. | எஸ்.லாஞ்சனா,<br>தெ/தமிழ் மகா வித்தியாலயம், தெஹியோவிட்ட. |
| எஸ்.கவிஷாலினி,<br>இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. | எஸ்.சிவநேசன்,<br>தலவாக்கலை த.வி, தலவாக்கலை. |
| மஷீலா மௌஜுட்,<br>முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | கி.ஷர்மினா,<br>கொ/சைவ மங்கையர் கழகம், கொழும்பு-06. |
| எஸ்.எச்.இமாமுல் ஹசன்,<br>சாஹிரா தேசிய கல்லூரி, கம்பளை. | தி.வினோஜன்,<br>கமு/கோ/விநாயகர் மகா.வி, அக்கரைப்பற்று |

## பெண் வலிமை

⇨ சிலந்திகளில் 'பிளக் விடோ' என்னும் சிலந்தி இனம் மிகவும் விஷத்தன்மை கொண்டவை. எனினும் இவற்றில் ஆண் சிலந்திகளின் விஷம் அதிகப் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஆனால் பெண் சிலந்தி கொஞ்சம் கடித்தால் கூட ஆபத்துத் தான். உயிரையே பறித்துவிடும்.



⇩ ஆண் நுளம்புகள் மனிதர்களைக் கடித்து இரத்தம் உறிஞ்சுவது இல்லை. பெண் நுளம்புகள் தான் கடித்து இரத்தத்தை உறிஞ்சி நோய்களை உண்டாக்கி வருகின்றன.





⇧ காட்டுராஜா என்றழைக்கப்படும் சிங்கங்களில் ஆண் சிங்கமே பலசாலியானது. ஆனால் இவை பெரும் பாலான நேரங்களில் சோம்பேறியாகத் திரிகின்றன. அதே சமயம் பெண்சிங்கங்களோ அதிகளவில் வேட்டையாடுவதில் ஈடுபடுகின்றன.

## செய்து பாருங்கள்

### பொம்மைக் கோமாளி

<u>தேவையான பொருட்கள் :</u>


ஒரு கடதாசிப் பை, (வெள்ளை நிறமாக இருப்பின் நல்லது) நீர் வர்ணம், கத்தரிக்கோல்.


<u>செய்முறை :</u>

* கடதாசிப்பையில் கோமாளியின் படத்தை வரைந்து கொள்ளுங்கள்.

* படத்தில் வருவதுபோல் கோமாளியின் கவுண் வரும் இடத்தில் இரண்டு ஓட்டைகள் போட்டுக் கொள்ளுங்கள்.

* இப்போது உங்கள் விரல்களை அந்த ஓட்டைக்குள் விட்டு வெளியே வந்தவுடன் உங்கள் கைகளைப் பலவிதமாக ஆட்டி அசைத்து கோமாளித்தனம் செய்யுங்கள். எல்லாரும் விரும்பிப் பார்ப்பார்கள்.





விறு விறு தொடர்

# 06 சிம்லா சுசீலா

மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

இவளின் உற்சாகம் முழுவதும் வடிந்து விடும். திகில் ஏற்படும். மனம் சுக்கல் நூறாக உடைந்துவிடும்.

"என்ன ஜோதி, உன்னைத்தான் கேக்கறேன்..."

"அதுல பீடிங் பாட்டில் இருந்திச்சி, நம்ம ஃபிரெண்ட்ஸ்ல யாரோதான் அனுப்பியிருக்கணும். நீ தூங்கு! கதவை மூடிக்க வேணாம். ஏதாச்சும் எடுக்கிற துக்கு நாங்க வரலாம். எங்க சூட்கேஸ் எல்லாம் இந்த ரூம்லதான் இருக்கு."

"சரி!" என்று கட்டிலில் படுத்துக் கொண்ட தீபிகா, "நைட் லேம்ப் போட்டுட்டு பெரிய லைட்டை அணைச்சிட்டுப் போ" என்றாள்.

வெளியே வந்த ஜோதிக்கு பட படப்பாக இருந்தது.

இந்த மிரட்டல் பெரிய விஷயம்! தீபிகாவுக்கு கோவையில் ஏற்கனவே ஒரு காதல் அனுபவம் இருந்து அது ஏதோ ஒரு காரணத் திற்காக தோல்வியில் முடிந்திருப்பதும் மகா பெரிய விஷயம்!

இதைப் பற்றி யாரிடமும் சொல்லாமல் இருப்பதும் சரியில்லை. யாரிடம் சொல்வது? சொன்னால் என்ன நடக்கும்? இப்போதுநான் என்ன செய்ய வேண்டும்?

சிந்தனையோடு மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்த அவள் முகத் திற்கு முன்பாக, "ஹலோ!" என்று சொடக்குப் போட்டான் விஷால்.

"ம்?" என்றாள்.

"உங்க ஃபிரெண்ட்ஸ் எல்லாம் ரங்கோலி போட்டுக்கிட்டிருக்காங்க. நீங்க மட்டும் இங்கே தனியா என்ன பண்றீங்க?"

விஷால்! ஆகாஷின் சகோதரன். இந்தக் கல்யாண ஏற்பாடுகளை சுழன்று



செய்து கொண்டிருக்கிறவன்!

இவனிடம் சொன்னால் என்ன?

"எஸ்க்யூஸ்மி. உங்ககிட்ட நான் கொஞ்சம் தனியாப் பேசணும்."

"ஸாரி எனக்கு உங்களைப் பார்த்தா லவ் வரலை!" என்றுச் சிரித்தான்.

"சீரியஸான விஷயம், இப்படி வாங்க மிஸ்டர் விஷால்!"

அவள் முகத்தின் பதட்டத்தையும், குரலின் நடுக்கத்தையும் உணர்ந்து சீரியஸான விஷால், "ஸாரி, நான் சும்மா தமாஷ் பண்னேன். என்ன பிராப்ளம்?" என்றான் ஒரு தனியான அரை இருட்டுப் பகுதிக்கு வந்தபடி.

"நீங்க படிச்சவர். பக்குவமானவர். இப்பநான் சொல்ற விஷயத்தைக் கேட்டு அதிர்ச்சி அடையக் கூடாது. ஒரு பெரிய பிராப்ளம் வந்திருக்கு! அதைப் பெருசு படுத்தாம ரகசியமா யாருக்கும் தெரியாம எப்படி ஸால்வ் செய்யறதுன்னு மட்டும் தான் நாம் யோசிக்கணும்."

"பிராப்ளம் என்னன்னு முதல்ல சொல்லுங்க மேடம்."

படபடப்பான குரலில் தான் பார்சல் பிரித்ததை, புடவையும், கடிதமும் இருந்ததை, கடிதத்தில் படித்ததை எல்லாம் சொன்னாள் ஜோதி.

"மை காட்!" என்று இரண்டு விரல்களால் நெற்றியைப் பிடித்துக் கொண்டு டென்ஷனாக சுவரில் சாய்ந்தான் விஷால்.

"உங்க அண்ணன் ஆகாஷும், தீபிகாவும் ரொம்ப சந்தோஷமான மூட்ல இருக்காங்க. இந்த விஷயம் அவங்களுக்குத் தெரிஞ்சா ரொம்ப டென்ஷனாயிருவாங்க. தீபிகாவோட வாழ்க்கையில ஏற்கனவே ஒரு கசப்பான காதல் இருந்திருக்குன்னு தெரியுது. இப்ப அவ ஆகாஷை நேசிப்பது உண்மை. நான் அவ வேலை பார்க்கற அதே ஹோட்டல்ல வேலை பார்க்கறதால அவ மனசு நல்லாத் தெரியும். அவளோட பழைய காதல் பத்தி என்கிட்ட சொன்னதில்லை. ஆனா ஆகாஷ்கிட்டே சொல்லியிருக்கலாம். அவரும் பெருந்தன்மையா அதை சாதாரணமா எடுத்திருக்கலாம். இந்தச் சூழ்நிலையில அவங்க ரெண்டு பேருக்கும் இந்த மாதிரி மிரட்டல் வந்திருக்கிறதைத் தெரிவிக்காம பிராப்ளத்தை ஸால்வ் பண்ணறதுதான் புத்திசாலித்தனம்!" என்றாள் ஜோதி.

மெதுவாக உலாத்தினான் விஷால்.

"ஜோதி, நீங்க அந்த புடவையையும், லெட்டரையும் எடுத்துட்டு வாங்க. நான் ஒரு தடவை படிச்சுப் பார்க்கணும். யாருக்கும் தெரியாம எடுத்துட்டு வாங்க."

ஜோதி அந்தக் கடிதத்தோடு திரும்பி வரும்வரை பொறுமை இழந்து நகம் கடித்துத் துப்பிக் கொண்டிருந்த விஷால் அவசரமாகப் படித்துப் பார்த்தான்.

"அந்த ராஸ்கல் ஒரு சரியான திமிர் பிடிச்ச மெண்டல்ன்னு புரியுது! தான் தப்பான ஆசாமின்னு அவனே ஒத்துக்கறான்! இவனை யார் தான் லவ் பண்ணுவாங்க? வெறி பிடிச்ச கிராக்கி!" என்றாள் ஜோதி.

"அவன் எப்படியோ இருந்துட்டுப் போறான் ஆனா... டேன்ஜர்ல! துணிச்சலா ரிசப்ஷனுக்கு வந்து பார்சல் கொடுத்துட்டுப் போயிருக்கானே.. அண்ணியும் வாங்கி வைச்சிருக்காங்களே உள்ளே இருக்கிற விபரீதம் புரியாம!"

"இப்ப என்ன செய்யப் போறீங்க?"

"புரியலை!"

"தயவு செஞ்சி இந்த மிரட்டலுக்குப் பயந்து கல்யாணத்தை நிறுத்திடாதீங்க."

"சேச்சே! கல்யாணம் நடக்கணும்! எங்கண்ணனுக்கும், அண்ணிக்கும் இந்த நியூஸ் தெரியக் கூடாது. இவனைப் பிடிச்சி போலீஸ்ல கொடுக்கணும். நாளைக்கு காலைல கல்யாணம். அதுக்குள்ளே இவனைப் பிடிக்க முடியுமா?"

"அவன் யாரு, என்ன பேரு, எப்படி இருப்பான்? ஏதுவும் நமக்குத் தெரியாதே! எல்லாம் தீபிகாவுக்குத் தெரியும். ஆனா அவளை எதுவும் கேக்காம அவனை எப்படிக் கண்டு பிடிக்கிறது?"

"எனக்கு ஒரு ஐடியா! என் ஃபிரண்டு ஒருத்தன் இருக்கான். அவன் மூளைக்குயுக்தியா சிந்திக்கும். அவனைக் கூப்புடப் போறேன்."

"யார் அது?"

"மூன் லைட் டிடெக்டிவ் ஏஜன்சிஸ்! இதான் அவன் துப்பறியும் நிறுவனத்தோட பேர். அவன் பேர் பரத்" என்றான் விஷால்.

கம்ப்யூட்டரில் டிஸ்க் போட்டு மைக்கேல் ஜாக்ஸனின் டான்ஸ் பார்த்து கால்களால் தாளம் போட்டுக் கொண்டிருந்தான் பரத்.

மற்றொரு கம்ப்யூட்டரில் மாதவி போட்டு வைத்திருந்த ரிப்போர்ட் ஒன்றை வரிவரியாகப் பார்த்து திருத்தம் செய்து கொண்டிருந்த சுசீலா, "வல்யூமைக் குறைச்சி வைங்களேன். ஹெல்ப் பண்ணலைன்னாலும் ஏன் இப்படி டிஸ்டர்ப் பண்றிங்க?" என்றவள் தன் பனியனின் சுருக்கத்தை கீழே இழுத்துவிட்டு சரிசெய்தபிறகு 'COMPACT DISCS' என்று படிக்க முடிந்தது.

"ஏய், லுக் பேபி! அந்த ரிப்போர்ட்டை நாளைக்குக் காலைல தர்றதா வாக்கு கொடுத்தது நீதான். நீ வொர்க் பண்ற துக்காக நான் கம்பெனி கொடுக்கறேனே, இது ஹெல்ப் இல்லையா?"

பரத் மானிட்டரில் மைக்கேல் ஜாக்ஸனை அந்தரத்தில் உறையச் செய்து விட்டு ரெஃப்ரிஜிரேட்டர் திறந்து இரண்டு பெப்ஸி எடுத்துக் கொண்டு அவளிடம் வந்தான்.

அவள் மேஜையில் சகல பொருள்களையும் ஓரங்கட்டி அமர்ந்து கொண்டு ஸ்ட்ரா போட்டு நீட்டினான். பருகியபடி பார்த்து, "ஹேய்! அதெப்படி சுசி அன்னிக்குப் பார்த்த மாதிரி அப்படியே இருக்கே?" என்றான்.

"வேணாம் இந்த ஏரியாவைப் பத்திப் பேச வேணாம்."

"பாராட்டித்தானே சொல்றேன். சேம் ஓல்ட் சுசி வித் சேம் ஓல்ட் ஸ்ட்ரக்சர்."

"பரத், இந்த 'ஓல்ட்'ன்ற வார்த்தையை யூஸ் பண்ணினா எனக்குக் கெட்ட கோபம் வந்துடும். போய் ஜாக்ஸனைக் கத்த விடுங்க! அது பெட்டர்!"

"ரொம்பத்தான் கோவிச்சுக்கிறியே.."

"பின்னே, ஹைதராபாத் ஃபிலிம் ஃபெஸ்டிவல் போயிருந்தமே, அங்கே அந்த பெங்காலி டைரக்டர் என்னைப் பார்த்து என்ன கேட்டார்?"

"என்ன கேட்டார்? டைம் கேட்டாரா?"

"நடிக்காதீங்க, உங்களுக்கு முன்னால தானே கேட்டார்!"

"நான் அப்போ சுவாரசியமா சமோசா சாப்பிட்டுகிட்டிருந்தேன். கவனிக்கல்லை."

"நீங்க தமிழ் நடிகையான்னு கேட்டாரு!"

"ஸோ?"

"எப்படி நான் என் வாயால சொல்றது?"

"விட்டா பாரதிராஜா 'தாஜ் மஹால்' படத்துக்கு முதல்ல உன்னைத்தான் நடிக்கக் கூப்பிட்டார், நீ மறுத்துட்டதாலதான் வேற பொண்ணை புக் செஞ்சார்னு கூசாம சொல்வே போலிருக்கு! பெங்காலி டைரக்டர் உன்னை நடிகையான்னு தானே கேட்டார்? கதாநாயகியான்னு கேக்கலையே? காந்திமதி அம்மாகூட நடிகைதான்?"

"உங்களை....." சுசீலா பளிங்கு பேப்பர் வெய்ட்டை எடுத்து அவனை நோக்கி ஓங்க, அவள் கையைப் பிடித்துத் தடுத்தான் பரத்.

"கொஞ்சம் தூக்கக் கலக்கமா வேலை பார்த்துக்கிட்டிருந்தே, அதான் வம்புக்கு இழுத்தேன். கலக்கம் போயிடுச்சா?" என்றவன் குதித்துச் சென்று ஒலித்த டெலிஃபோனை எடுத்தான், "பரத்!"

"மை குட்னஸ்! நீ கிடைச்சிட்டே. பரத் நான் விஷால் பேசறேன். விஷால்! சிம்லா விஷால்!"

"ஹாய் விஷால்! எப்படி இருக்கே?"

"ஃபைன். என் பிரதரோட மேரேஜ் இன்விடேஷன் அனுப்பியிருந்தேன் கிடைச்சுதா?"

"ஓ யெஸ் நாளைக்குக் காலையிலதானே முகூர்த்தம்? நான் வர்றதாத்தான் இருக்கேன். கண்டிப்பா வர்றேன்!"

"பரத், நான் இப்போ கல்யாண மண்டபத்திலேர்ந்து பேசறேன். ஒரு சின்ன பிராப்ளம். உன்னோட உதவி தேவைப்படுது. கொஞ்சம் உடனே வரமுடியுமா?"

"இப்பவா?" என்று தன் வாட்சைப் பார்த்துக் கொண்டான் பரத். "ரொம்ப அர்ஜெண்ட்டா?"

"ஆமாம். நாளைக்குக் கல்யாணத்தை எப்படி நடத்தறதுன்னு நீதான் வந்து யோசனை சொல்லணும்."

"என்ன விஷால் அந்த அளவுக்குச் சொல்றே? ஓகே. நான் உடனே அங்கே வர்றேன். நேர்ல பேசிக்கலாம்."

பரத் ஃபோனை வைத்து விட்டு மேஜை மேல் இருந்த திருமணப் பத்திரிகைகளில் தேடியெடுத்துப் புரட்டி திருமண மண்டபம் எதுவென்று பார்த்துக் கொண்டான்.

"என்ன பிரச்சனையாம் பரத்?" என்றாள் சுசிலா.

"நோ ஐடியா, ஆனா விஷால் நீட்ஸ் மை ஹெல்ப். உனக்கு இன்னும் நேரம் ஆகும்னா பெட்டர் இங்கேயே ஸ்டே பண்ணிடு சுசி!"

"தனியாக வேலை பார்க்கிறது போரு! காலைல மிச்சத்தைப் பார்த்துடறேன். இப்ப நானும் வர்றேன்!" என்று அந்த ஃபைலை சேவ் செய்து விட்டு கம்ப்யூட்டரை அணைத்தாள். (தொடர்ந்து வரும்)

# சாதனை படைத்த பிளேயர்



லியோவும் அவனது அம்மாவும்

சந்தோஷம் தான். இருப்பினும் செர்ரி பிளேயருக்கு ஒரு சிறு வருத்தம். காரணம், அவர் எதிர்பார்த்தது பெண் குழந்தையை; என்றாலும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியபடி தான் இருக்கின்றார் செர்ரி.

# 150 ஆண்டின் பின் பிறந்த மந்திரி குமாரன்

இங்கிலாந்தில் சார்ள்ஸ்-டயானா திருமணம், விவாகரத்து, டயானா மறைவு-எவ்வளவு பரபரப்பான செய்தியாகப் பேசப் பட்டதோ, அதே போல், சமீபத்தில் இங்கிலாந்து மக்களிடம் பெரும் கலகலப்பை ஏற்படுபடுத்தியிருப்பது பிரதமர் ரோனி பிளேயர்-செர்ரி பிளேயர் தம்பதிக்குப் பிறந்த 4வது குழந்தை லியோ பிளேயர்.

கடந்த 150 வருடங்களின் பின்னர் இங்கிலாந்துப் பிரதமர் ஒருவருக்கு-பதவியில் இருக்கும் போது குழந்தை பிறப்பது ரோனி பிளேயருக்குத்தான். ரோனி பிளேயர் படைத்த இந்தச் சாதனையால் லியோ பிளேயர் சரித்திரத்தில் இடம் பெற்று விட்டான்.

இதற்கு முன்-அதாவது 151 வருடங்களுக்கு முன்-அப்பாவான இங்கிலாந்துப் பிரதமர் லோர்ட் ஜோன் ரஸ்ஸல். 1849 ஆண்டு ஜூலை 11ம் திகதி பிரதமர் பதவியில் இருக்கும் போதே இவருக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இந்தக் குழந்தையின் பெயர் பிரான்ஸின் அல்பேர்ட் ரோலோ.

மே 20ம் திகதி லியோ பிறந்தவுடன் இலண்டன் நகரின் டவுனிங் தெருவின் 10ம் இல்லம் கோலாகலம் பூண்டது. இதுதான் இங்கிலாந்துப் பிரதமரின் அதிகாரபூர்வ வாசஸ்தலம். பூச்செண்டுகளுடன் இங்கு முட்டிக்கொண்டு மக்கள் அலைமோதினர்.

பிளேயர் தம்பதியினருக்கு மட்டுமின்றி அவர்களது பிள்ளைகளான 16 வயது மகன் இவான், 14 வயது மகன் நிக்கி 12 வயதான நிக்கி ஆகியோருக்கும் பெரும் மகிழ்ச்சிதான் அன்றைய தினம் அவர்கள் பாணியில் அவர்களது நண்பர்களுடன் ஒரு பெரிய விழாவே எடுத்துவிட்டனர்.

குழந்தை பிறந்தவுடன் ஏகப்பட்ட



மகிழ்ச்சிக் கடலில் செர்ரி

ரொனி பிளேயருக்கு லியோ பிறக்கும் தருணத்தில் பிரிட்டிஷ் மக்கள் 'பிரதமருக்குப் பிறக்கவிருப்பது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? என்று பந்தயம் கூடக் கட்டினார்கள்.

அதேபோல் குழந்தை பிறந்த பின். 'பிளேயர் லீவு எடுத்துக் கொள்ளலாமா எடுக்கக்கூடாதா' என்று கருத்துக் கணிப்பு நடத்தின இங்கிலாந்துப் பத்திரிகைகள். இதில் 58 சதவீதமானவர்கள் லீவு எடுக்கக் கூடாது என்று கூறினர்.

குழந்தைக்குத் தனது தந்தையின் பெயரான 'லியோ'வைச் சூட்டி தந்தையைக் கௌரவப்படுத்தியுள்ளார் பிளேயர்.

பிறக்கும் போதே பெரும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திய லியோ பிளேயரை முதலில் எப்படியாவது பார்த்துவிடவேண்டும் என்று இரவு பகலாகப் பலர் கம்பியூட்டர் முன் காத்திருந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்ததுபோல் இண்டர்நெட்டில் லியோவின் படத்தைப் போட்டனர். மக்கள் மந்திரிகுமாரனைப் பார்த்து பரவசமடைந்தனர்.



செல்லமகனுடன் பிரதமர்



தங்களுக்கு ஒரு தம்பியோ தங்கையோ பிறக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்புடன் பிரதமர் பிளேயரின் மூத்த புதல்வர்கள் மூவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர். இவர்கள் தங்களுக்கு ஒரு தங்கைதான் வேண்டும் என்று விரும்பிய போதும் கிடைத்ததும் தம்பிதான்- வரலாற்றில் இடம் பிடித்த லியோ பிளேயர்.

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 13

## "மாறிவருகிறது மட்டக்களப்பு"

இரா.பத்மநாதன்

"திரு எஸ்.டி.சிவநாயகம் அவர்களைப் பற்றி எழுதத் தொடங்கியவர் எங்கெல்லாமோ சென்று எவரெவரையோ பற்றியெல்லாம் எழுதுகிறாரே இது அவசியம் தானா?" என்று பல கண்டனக் குரல்கள் ஒருபுறம் எழவே செய்கிறது. அதே வேளை "நாங்கள் கேள்விப் படாத அபூர்வமான சம்பவங்களை எவ்வாறு நினைவில் வைத்து எழுதுகிறீர்களோ தெரியாது?" என்று பாராட்டும் குரல்களும் மறுபுறம் கேட்கவே செய்கின்றன.

எது எவ்வாறாயிருப்பினும் ஆராச்சியார் துரைராசா போன்ற நகைச்சுவையாளர்களும் மட்டக்களப்பில் வாழ்ந்துள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்டவே நான் ஆசைப்பட்டேன். திரு.துரைராசா அவர்கள் தன்னைத் தானே வருத்தினாலும் மற்றவர்களுக்குச் சிரிப்பூட்டும் பணியில் ஈடுபட்டார், என்பதை இன்று வாழ்பவர்களும் நாளைய சந்ததியினரும் அறிந்திருப்பது அவசியமென்றே எனக்குப் படுகிறது.

துரைராசா அவர்கள் நிகழ்த்திய இருவேறு சம்பவங்கள் பின்னர் இடம் பெறும். இவற்றை அறிந்தால், "இப்படியும் ஒருவரா?" என்று மூக்கில் விரலை வைக்கத்தோன்றும்.

திரு.இராசதுரை அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்னர் நடைபெற்ற சில சம்பவங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மட்டக்களப்பு நகரில் பிரபலம் மிக்க சகோதரர்கள் இருவர் வாழ்ந்து வந்தனர். இவ்விருவருக்கும் மட்டுநகர் அந்தோனியார் தெரு- மத்திய வீதிச் சந்தியில் இரு மருத்துவமனைகள் தனித் தனியாக இருந்து வந்தன. மூத்தவர் ஐயாத்துரை பரியாரியார் என்றும் இளையவர் பொன்னுதுரை பரியாரியார் என்றும் அழைக்கப்பட்டனர்.

### காந்தீயவாதிகள்

அண்ணன் தம்பி இருவருமே காந்தீயத்தில் பற்றுக் கொண்டவர்கள். ஐயாத்துரை பரியாரியார் குடுமிவைத்திருந்தார். மேற் சட்டையணியமாட்டார். முழங்காலுக்குச் சற்றுக் கீழே தான் அவருடைய வேஷ்டி இருக்கும். ஒரு கதர்த்துண்டு மட்டுமே தோளில் தொங்கும். பொன்னுதுரை பரியாரியார் கதரிலேயே வேஷ்டி சட்டை, தோளில் துண்டு ஆகியவற்றை அணிந்து கொள்வார்.

மட்டக்களப்பு நகர் வடக்கு எல்லையில் கொத்துக்குளம் என்றோர் இடமுண்டு. வயல்களின் நடுவில் மாரியம்மன் ஆலயம் அமைந்திருக்கிறது. வருடா வருடம் இங்கு ஆடு கோழிகளைப் பலியிடும் சடங்கொன்று நடைபெற்று வந்தது. உயிர்ப்பலியை ஆலயங்களில் நிறுத்த வேண்டும் என்று ஒரு போராட்டத்தை பொன்னுதுரை பரியாரியார் தலைமை தாங்கி நடாத்தினார். அவருடன் இளைஞரான இராசதுரை அவர்களும் பின்னர் நானும் இணைந்து கொண்டோம்.

வருடாந்த உற்சவத்தின் கடைசி நாளன்று ஆடு கோழிகளை பலியிடுவதற்கான ஆயத்தங்களெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பொதுவாக பலிச்சடங்கு விடியலுக்கு ஓரிரு மணித்தியாலங்களுக்கு முன்னர்தான் நடைபெறுவதுண்டு.

திரு.பொன்னுதுரை பரியாரியார் அவர்களுடைய இல்லத்திலிருந்து வெள்ளைக்கதர்க் கொடிகளை ஏந்தியவண்ணம் பொன்னுதுரைப் பரியாரியார் அவர்கள் முன் செல்ல நாங்கள் ஒரு முப்பது பேர் வரை ஆலயத்தை நோக்கி நள்ளிரவில் நடந்து சென்றோம். இன்றுள்ளதுபோல் அன்று தெருக்களில் போதுமான மின் விளக்குகளில்லை. ஏறத்தாழ 4 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஆலயத்துக்கு நாங்கள் போய்ச்சேர்ந்த வேளை பலியிடப்படுவதற்கு ஆயத்தமாக ஓர் ஆடு ஆயத்தமாக வைக்கப்



பட்டிருந்தது. அதன் கழுத்தில் ஒரே வெட்டாக வெட்டி தலையையும் உடலையும் இரு துண்டுகளாக்க ஒரு பெரிய வாளினை ஏந்திய வண்ணம் ஒருவர் ஆயத்த மாக நின்றிருந்தார். ஏற்கனவே ஆலய நிர்வாகிகளும் நாங்களும் பொலிஸாரிடம் முறைப்பாடு கொடுத்திருந்தோம். எனவே அங்கு பொலிஸார் காத்திருந்தனர்.

பொலிஸாரில் ஒரு சிலர் எங்களுடைய முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தினர். அதே போல் பலியிடப்படும் இடத்திலும் பொலிஸார் பலியிடுவதை நிறுத்துமாறு கோரிய வண்ணம் நின்றிருந்தனர்.

எனது இல்லத்தின் முன்புறமாக ஒரு வாடகை வீட்டில் தங்கிருந்தவர் இன்ஸ்பெக்டர் பக்கீர் அவர்கள். எனது வீட்டின் முன்புறமாக இருந்தமையினால் அவருடைய குடும்பத்தாருக்கும் எங்களுக்குமிடையில் மிக நெருக்கமான உறவு இருந்துவந்தது. தவிர, அவருடைய மகன் அக்பர் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பரும்கூட. கொழும்பு ஸாகிரா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அக்பர் அவர்கள் விடுமுறைக்கு மட்டக்களப்புக்கு வரும்போது என்னுடனேயே நெருக்கமாகப் பழகுவார். அப்போதே அவரும் முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டவராகக் காணப் பட்டார்.

திரு. அக்பர் பக்கீர் அவர்கள் பின்னர் பொலிஸ் அதிகாரியாகப் பணிபுரிந்தார். கல்வி அமைச்சராகப் பதவி வகித்துவந்த மறைந்த அல்.ஸஹாஜ் பத்ருதீன் மஹ்மூத் அவர்களின் மெய்காப்பாளராகவும் பணி புரிந்தவர்.

### பலி நிறுத்தப்பட்டது

நாங்கள் சென்ற ஊர்வலத்தைத்தடுத்து நிறுத்தியவர் இன்ஸ்பெக்டர் பக்கீர் அவர்களே. எங்களை சமாதானம் செய்து ஆலய நிர்வாகிகளுடன் ஒரு சமரச உடன்பாடுக்கு வருமாறு எங்களைக் கேட்டுக் கொண்டார். ஆனால் "ஒரு உயிரைக் கூட அம்பாள் சந்நிதியில் பலியிடவிட மாட்டேன். ஓர் ஆட்டின் தலையை வெட்ட வேண்டுமானால் இதோ என்னுடைய தலையை முதலில் வெட்டுங்கள்!" என்று கத்தியவாறு பொன்னு துரை பரியாரியார் ஓடிச்சென்று, பலியிடப் படவிருந்த ஆட்டைக்கட்டியணைத்துக் கொண்டார்.


கையில் வாளை ஏந்தியவாறு நின்றவர் உருக் கொண்டவராக ஆரவாரித்துக் கொண்டிருந்தார். அடுத்து என்ன நடை பெறப்போகிறதோ என்று தெரியாமல் ஆலயத்தில் வந்து குழுமியிருந்த அனைவரும் 'அரோகரா' கோஷமிட்டவண்ணம் நின்றிருந்தனர். இராசதுரை அவர்கள் ஓடிச் சென்று வாளுடன் தடுமாறிக் கொண்டிருந்தவரை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டார். இராசதுரை அவர்களையும் வாளுடன் நின்றிருந்தவரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இராசதுரை ஒரு துரும்பு என்றே கணக்கிட முடியும். இருப்பினும் வாளுடன் திமிறிக் கொண்டிருந்த அந்த நபரை இறுக்கிப் பிடித்து ஏதோ ஒரு வகையில் வாளைத் தன் கையில் பிடுங்கி எடுத்துக் கொண்டார்.

இந்தச் சம்பவத்துக்குமேல் பலிச்சடங்கு நடைபெற முடியாத நிலையேற்பட்டது பொலிஸார் சாதாரண பூசையை முடித்து விட்டு எல்லோரும் கலைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டனர்.

பலிச்சடங்கை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்த அன்றைய சடங்கின் உபயகாரர் "அம்மாளே! உனக்காக நாங்கள் வருடா வருடம் நடத்திவரும் இச்சடங்கை இடை நடுவில் தடைசெய்த இந்தத் துரோகிகளை-பஞ்சமா பாதகர்களை நீதான் பார்த்துக் கொள்!" என்று திட்டித் தீர்த்துவிட்டுச் சென்றார்.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் கொத்துக்குளத்து மாரியம்மன் கோயிலில் உயிர்ப் பலி நிறுத்தப்பட்டு திருவிழாக்கள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இப் போதும் நடைமுறையிலுள்ளது.

திரு.இராசதுரை அவர்கள் தேர்தல் காலங்களில் பல சிரமங்களை ஏற்கவேண்டி



இருந்தது. அவருடன் போட்டி போட்டவர்கள் பெரும்பாலும் ஓரளவு பண வசதி படைத்தவர்கள். அவர்களிடம் போக்குவரத்துக்கு ஏற்ற வாகனங்களும், உதவி ஒத்தாசைக்கு வேண்டிய ஆட்பலமும் போதுமான அளவு இருந்தது. ஆகவே இராசதுரை அவர்கள் கடுமையாக உழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.

தேர்தல் முடிந்ததும் இராசதுரை களைப்புற்றிருந்தார். இதனால் முதலாவது பாராளுமன்றக் கூட்டத்துக்கு அவருக்குச் சமூகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

தலைவர் தந்தை செல்வா அவர்கள் தொலை பேசிமூலம் இராசதுரை அவர்களை அழைத்து, பாராளுமன்றத் தொடக்க விழாவுக்கு முன்னதாக தமது இல்லத்தில் நடைபெற விருந்த தமிழரசுக்கட்சியின் புதிய உறுப் பினர்களுக்கான கூட்டத்துக்கு வருமாறு கோரியிருந்தார். இராசதுரைக்கான தொலைபேசி அழைப்பினை நான்தான் எடுத்து தந்தை செல்வாவுடன் உரையாடினேன். இராசதுரை அவர்கள் சற்று உடல் நலக்குறைவாக இருப்பதாக தெரிவித்தேன்.

### சுவர் இருந்தால்தான்....

தந்தை செல்வா அவர்கள், "சுவர் இருந்தால் தான் சித்திரம் எழுதலாம். ஆகவே இராசதுரை அவர்கள் உடல் தேறிய பின் கொழும்புக்கு வரலாம். ஓய்வு எடுக்கச் சொல்லுங்கள். என்று என்னிடம் கூறினார்.

இருநாட்களின் பின்னர் நான்மட்டும், கொழும்பைச் சென்றடைந்தேன். எப்போதும் கொழும்புக்கு வந்ததும் முதலாவது தரிசிப்பது திரு.சிவநாயகம் அவர்களையே அதே போல் சுதந்திரன் அலுவலகம் சென்று அவரைக் கண்டேன். தேர்தலில் இராசதுரை அவர்கள் பெற்றவெற்றியினால் சிவநாயகம் அவர்களும் பூரிப்படைந்தவராகக் காணப் பட்டார்.

இருவரும் பல விடயங்களைப் பற்றியும் பேசினோம். தொடர்ந்து என்னுடைய எதிர் காலத்திட்டம் என்னவென்று கேட்டார். வீரகேசரியில் சேர்வதைத் தவிர வேறுவழியில்லை என்று அவரிடம் கூறினேன்.

திரு.சிவநாகயம் புன்முறுவல் பூத்தவராக "தம்பி பத்மன், நாம் நினைத்தது போல் மட்டக்களப்பு மாற்றமடைந்து கொண்டு வருகிறது. இந்த வேளையில் நீர் மட்டக்களப்பில் இராசதுரை அவர்களுக்குப் பக்க பலமாக இருந்து துணை புரிய வேண்டியது உமது கடமை. ஆகவே வீரகேசரி வேலையை மறந்துவிட்டு மட்டக்களப்பிலேயே தொடர்ந்து இருந்து கொண்டு கட்சிப்பணி களையும் இராசதுரையின் பொதுப்பணிகளையும் கவனித்துக் கொண்டு இருப்பதே நல்லது!" என்று கூறினார். அவருடைய கூற்று எனக்கு யதார்த்தமானதொன்றாகவே பட்டது.

அன்று மாலை நண்பர் கோபால ரெத்தினம் அவர்களை அவருடைய அறை யில் சந்தித்தேன். அவரும் நான் மீண்டும் வீரகேசரியில் இணைவதை விரும்பாத வராகத்தான் காணப்பட்டார்.

செட்டியார் அவர்கள் தன்னுடைய தென்கிழக்காசியப் பயணத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது, அவருடைய உதவியாளராகச் செல்வதற்கு வீரகேசரியில் பணிபுரியும் சிலர் திட்டமிட்டு செயலில் இறங்கி இருந்தனர். இந்தப் பணிக்கு செட்டியார் அவர்கள் என்னைத்தெரிவு செய்திருந்தமை திரு.கே.வி.எஸ்.வாஸ் அவர்களுக்கும் திரு.கோபாலரெத்தினம் அவர்களுக்கும் எனக்கும் மட்டுமே தெரிந்திருந்தது. செட்டியார் அவர்களுடன், 'எங்கிருந்தோ குதித்து வந்திருந்த ஒருவன் புறப்பட்டுச் சென்றுள்ளானே' என்று, பயணம் புறப்பட மனப்பால் குடித்துக் கொண்டிருந்த விரகேசரி ஊழியர்களில் சிலர் பொறாமைத் தீயில் பொசுங்கியவண்ணம் இருந்துள்ளனர் என்பதைக் கோபாலரெத்தினம் அவர்கள் எனக்கு விளக்கிக் கூறினார். இதனால் எனது மனமும் பேதலித்தது எனக்கு பிரயாணத்தைத் தொடர்ந்து மூன்றுமாதங்கள் விடுமுறை வளங்கப் பட்டிருந்தது இதில் ஆகச் சிலநாட்களே முடிவடைந்திருந்தன. ஆகவே இன்னும் சில காலம் தாமதித்து முடிவெடுக்கலாம் என்று எண்ணியவாறு, சிவநாகயம் அவர்கள் தெரிவித்திருந்த ஆலோசனைகளையும் அசைபோட்டவண்ணம் மட்டக்களப்பை வந்தடைந்தேன்.

திரு.இராஜதுரை அவர்களை நிழல் போல் தொடர்ந்து அரும்பெரும் பணிகளைப் புரிந்தவர்கள் இருவரைப்பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 'மூனா ரூனா' என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்டவர் முருகேசு. இவர் ஓர் இந்திய வம்சாவளியினர். எப்படியோ இராசதுரை அவர்களின் உடன் பிறவா சகோதரராகி விட்டார்.

'மூனாரூனா' சில சிறு கைத்தொழில் நுணுக்கங்களையும் தெரிந்து வைத்திருந்தார். இவர் எக்காலத்திலும் ஓய்வாக இருந்ததை நான் பார்த்ததில்லை. எப்போதும் சுறுசுறுப்பாகவே நடமாடுவார். இராசதுரை அவர்களைப் பற்றி தமாஷாக்கூட எவரும் குற்றங்குறைகூற அனுமதிக்கமாட்டார். சினந்து சீறிப்பாய்ந்து தாக்க முற்படுவார்.

மற்றுமொருவர் திரு.சுப்பிரமணியம் அவர்கள். மட்டக்களப்பில் 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது திரு.சுப்பிரமணியம் அவர்களின் பணியின் சிறப்பைக் கண்டு 'சுதந்திரன்' அவருக்கு பணிமணி என்று பட்டம் சூட்டியது.

(இன்னும் வரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 67**

# அரங்கம் அந்தரங்கம்

**கவியரசு கண்ணதாசன்**

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

எனக்கு 'அத்தான்' என்றோ, 'மாமா' என்றோ கூப்பிடுவது பிடிக்காது; 'ஐயா' என்று கூப்பிடுவது தான் பிடிக்கும்.

நான் சந்திரபுஷ்கரணிக்கு ஒரு வாத்ஸ்யாயனராகவே விளங்கத் தொடங்கினேன்.

திடீரென்ற கற்பகத்தின் அறையில் இருந்து அழுகுரல் கேட்டது.

அவள் பயப்பட்டது சரியாகவே போய் விட்டது.

கொஞ்சகாலத் தாழ்வுக்குப் பிறகு மீண்டும் கிடைத்த வாய்ப்பு. கமலை ஒரு மிருகமாக ஆக்கிவிட்டது.

அறையைத் திறந்து கொண்டு கற்பகம் வெளியிலே ஓடி வந்தாள். பின்னாலேயே வந்து அவளது முந்தானையைப் பற்றி இழுத்தார் கமல்.

நான் சட்டென்று எதிரே போய் நின்றேன்.

"இதில் நீங்கள் குறுக்கிடக் கூடாது!" என்ற கத்தினார்.

நானும் ஆத்திரமாகவே பதில் சொன்னேன்.

அவர் மடமடவென்று கற்பகத்தின் அறைக்குள் சென்றார்.

அங்கே கட்டிலுக்குக் கீழே வைக்கப் பட்டிருந்த கற்பகத்தின் கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியேறினார்.

மறுநாள் பத்திரிகைகளில் கற்பகத்தின் வீட்டிலிருந்து ஐந்து இலட்சம் பெறுமான தங்கக் கட்டிகள் எடுக்கப்பட்டதாகவும், போலீஸ் அதிகாரியின் சாமர்த்தியம் பற்றியும் செய்திகள் வந்தன.

தவறான வழியில் பணம் சேர்த்தவர்கள், தங்கள் நிழலுக்கே அஞ்ச வேண்டி வரும். எப்போது யாரை எதிர் கொள்ள வேண்டியிருக்குமோ என்ற குழப்பம் வரும்.

ஒழுங்காகப் பணம் சேர்த்த எத்தனை பேர் இந்த நாட்டில் பணக்காரர்களாக இருக்கிறார்கள்?

வருமான வரியை ஏமாற்றினாலொழிய ஒருவன் பெரும் பணக்காரனாக ஆக முடியாது.

ஆசைகள் விஸ்வரூபம் எடுக்கின்றன; கடைசியில் அவமானம் தலைமாட்டிலேயே காத்துக்கொண்டிருக்கிறது.

எவரையும் பிடித்து எப்படியும் சம்பாதிப்பது என்ற மனோபாவம், எல்லாரும் கைவிடுகின்ற முடிவுக்கே கொண்டு போய்ச் சேர்த்து விடும்.

'கொள்ளைக்குப் போனாலும் கூட்டுச் சேராதே' என்பார்கள்.

கள்ளக் கடத்தலிலும், கறுப்புப் பணத்திலும் கூட்டாளிகளே தான் பகையாளியாக மாறுகிறார்கள்.

அரசியலிலே கூட நன்றாக அநுபவித்தவன்தானே எதிராகத் திரும்பிச் சாட்சியளிக்கிறான்.

கமலிடமும் மற்றவர்களிடமும் நாராயண சாமியும், கற்பகமும் வைத்த உறவு சரியான மானக்கேட்டையும சித்திரவதையையும உண்டாக்கி விட்டது.



பத்திரிகைகளில் செய்திகள் வந்ததில் இருந்து எனக்குக் கூட நிம்மதியற்ற நிலை.

எந்த தைரியத்தில் கமல் இந்த வேலையைச் செய்திருக்க முடியும் என்பது எனக்குத் தெரியும்.

அந்தப் பின்னணியைத் தகர்ப்பது என்று நான் முடிவு கட்டினேன்.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் சிலரைத் தேடத் தொடங்கினேன்.

யாரைக் கண்டுபிடிக்க முடிகிறது?

கட்சித் தலைவர் எவ்வளவுதான் ஒழுக்கத்தைப்பற்றிப் பேசினாலும், எம்.எல்.ஏ.யை பட்டப் பகலில் தூக்கவே நாலு ஆள் தேவைப்படுகிறது.

திடீரென்று பதவி வந்தவுடனேயே வாழ்க்கையை அநுபவிக்கும் எண்ணம் தானே தோன்றுகிறது?

அப்படியும் இரண்டு எம்.எல்.ஏ.க்களை நான் பிடித்து விட்டேன். இரண்டும் சரியான ஒதியங் கொம்பு.

"ஒருவன் கல்கத்தா எந்த நாட்டில் இருக்கிறது?" என்று கேட்கிறான்; இன்னொருவன், "பம்பாய்க்குப் போகப் பாஸ்போர்ட் வேண்டுமா?" என்று கேட்கிறான்.

நன்றாக யோசித்துப் பார்த்த பிறகு அந்த முயற்சி பயனற்றது என்று விட்டுவிட்டேன்.

சந்திரபுஷ்கரணியைப் பம்பாய்க்கு அனுப்பி உசேனைப் பார்த்துப் பணம் ஏற்பாடு செய்து, வேறு யார் மூலமாவது அனுப்பி வைக்கச் சொல்லலாம் என்று நினைத்தேன். அது வரையில் கற்பகத்தின் வீட்டில் அவள் இருப்பது பாதுகாப்பாக எனக்குத் தோன்றவில்லை.

அந்த வீடு இரகசியக் கிடங்காகவும், சோதனைக் கிடங்காகவும் மாறி விட்டது.

ஆகவே அன்று மாலை அவளைக் கூட்டிக் கொண்டு போய் வேறு இடத்தில் தங்க வைக்கலாம் என்று கற்பகத்தின் வீட்டுக்குச் சென்றபோது நான் பயந்த நிகழ்ச்சியே அங்கு நடந்துக் கொண்டிருந்தது.

சந்திரபுஷ்கரணியை விபசார வழக்கில் கைது செய்ய மூன்று போலீஸ் அதிகாரிகளும், சில கான்ஸ்டபிள்களும் அங்கு வந்திருந்தார்கள்.

இந்தியாவின் தார்மீக ஒழுக்கம் இப்போது போலீஸ் அதிகாரிகள் கையில் அல்லவா இருக்கிறது!

விடுதிகளிலும், வீடுகளிலும் புகுந்து விபசாரம் செய்ததாகப் பெண்களைப் பிடித்துக் கொண்டு போய் ஸ்டேஷனிலேயே போட்டு அநுபவிக்கும் யோக்கியர்களல்லவா, நமது ஒழுக்கத்தின் மூலதனங்கள்!

அவர்கள், சட்டத்தின் புரவலர்கள்; தங்கள் தேவைக்குச் சட்டத்தை எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமோ அப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்வார்கள்!

(அந்தரங்கம் வரும்)

# உன்னை நினைக்கையிலே...

வடிவேல் மாஸ்டர் அந்தக் கடைசி றூம் மூலையில் படுத்துக்கொண்டு மூச்சு விடமுடியாமல் கஷ்டப்பட்டுக் கொண் டிருந்தார். நான்கு சுவர்களில் ஒட்டிக் கிடந்த ஒட்டடைகளை உற்றுப் பார்த்த வடிவேல் மாஸ்டருக்கு-அவர் மனைவி நல் லம்மாவின் ஞாபகம் வந்தது.... ஒவ்வொரு வெள்ளியும் ஒட்டடை தட்டிக் கூட்டி தன் கட்டில் மெத்தையைப் புரட்டிப் போடாவிட் டால் அவளுக்குத் தலைவெடித்து விடும். ஆஸ்துமா அவரை அவஸ்தைப் படுத்தும் போது கதகதப்பாய் ஏதும் குடிக்கக் கொடுத்து நெஞ்சை நீவி விடுவாள். மூச்சு வாங்க வசதியாய் இரண்டு மூன்று தலை யணைகளை அடுக்கி அதில் தலையை உயர்த்திப் படுக்க வைப்பாள். நல்லம்மா இறந்து நான்கு ஆண்டுகளாகியும் வடிவேல் மாஸ்டரால் இந்த நினைவுகளைத் தவிர்க்க முடியவில்லை.

'நல்லம்மா! பெயருக்கேற்றவள்தான் நீ!' தனக்குள் வந்த முணுமுணுப்பு வரண்டு காய்ந்த அவர் உதட்டில் மெல்லிய சிரிப்பாய் ஊர்ந்தது. மண்டபத்திலிருந்து பாட்டும் கும்மாளமும் கூச்சலும் வடிவேல் மாஸ்டரின் காதுவரை எட்டியது. என்ன ஏது? என்று புரியாமல் குழம்பியபோது, வேலைக்கார மாணிக்கம் தேனீர்க்கோப்பையுடன் உள்ளே நுழைந்தான்.

"ஐயாவுக்கு செய்தி தெரியுங்களா? உங்க பேரன் வேலைல சேர்ந்து நேத்தைக்கு முதல் சம்பளமாம். இன்னிக்கு கூட்டாளிகளுக் குப் பாட்டி பிறசண்ட். எனக்குக் கூட ஒரு சாறன் கெடைச்சுது. உங்களுக்கு சின்னய்யா ஒன்னும் குடுக்கலியா?" மாணிக்கம் கேட்டுவிட்டுப் போனதும், வடிவேல் மாஸ்ட ரின் ஆன்மா அழுதது. நினைவுகள் அலை யாய் எழும்பி அவர் மனதில் வந்து மோதின.

வடிவேல் மாஸ்டரை அந்த ஊரில் தெரியாதவர்கள் இல்லை. அங்குள்ள கோயில் தர்மகர்த்தாவாகச் சேவை செய்தவர். செல் வாக்காக வாழ்ந்தவரெனினும் ஓர் அனா தைப் பெண்ணுக்கு வாழ்வு கொடுத்தவர். மணம் முடித்து மூன்றாண்டுகளுக்குப் பிறகு பிறந்தவன் யாதவன். அவனைக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்துப் படிப்பித்து, ஆளாக் கினார் வடிவேல் மாஸ்டர். பாசத்தை அள் ளிச் சொரிந்தவள் நல்லம்மா.

யாதவன் வேலையில் சேர்ந்து சில மாதங்களுக்குள் அந்தக் கம்பனியில் வேலை பார்க்கும் பவித்திராவைக் காதலிக்க ஆரம் பித்தான். மகனின் மனதைப் புரிந்து கொண்ட வடிவேல் மாஸ்டர்-யாதவன் விரும்பியபடி யே பவித்திராவைத் திருமணம் செய்துவைத் தார். அவர்களுக்குப் பிறந்த ஒரே மகன் மதன். இவனுக்கு ஐந்து வயதாய் இருக்கும் போதுதான் வடிவேல் மாஸ்டரின் குடும்பத் தை உலுக்கிய அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. வேலை விஷயமாக வெளிநாடு சென்ற யாத வனும் பவித்திராவும் விமான விபத்தில் மாண்டு போனார்கள். மாஸ்டரின் குடும்பத் தில் விழுந்த முதல் பேரிடி இதுவாகும். இதைக் கேட்டு, வேதனைப்படாதவர் களில்லை. நல்லவர்களை ஏன் கடவுள் இப் படிச் சோதிக்கிறார்? என்று வினா எழுப்பி னார்கள் பலர். 'உலகே மாயம் வாழ்வே மாயம்' என்று சொல்வதைத் தவிர வடிவேல் மாஸ்டருக்கு வேறு வழி தெரியவில்லை. இடையிடையே ஆஸ்துமா நோய் அவரை வாட்டும் போது, நல்லம்மாவின் அன்பான உபசரணை அவருக்கு ஆறுதலளிக்கும்.



என்ன கஷ்டப்பட்டும் தன் பேரன் மதனை அம்மா அப்பா இல்லாத குறை தெரியாமல் வளர்க்க வேண்டும். அவனை நன்கு படிப்பித்து ஆளாக்கி விட வேண்டும் என்று உறுதி பூண்டார். வயது வருமுன்பே பென்ஷனுக்கு எழுதிவிட்டு வீட்டில் முழு நேரமும் மதனுடன் நாட்களை நகர்த்தி னார். நல்லம்மாவும் இரவுபகல் பாராமல் தன் கணவனுக்குத் துணையாய் இருந்து மதனை வளர்க்க அரும்பாடு பட்டாள்.

வடிவேல் மாஸ்டர் மதனை முதுகிலும் தோளிலும் சுமக்க, நல்லம்மா பாலும் சோறும் பழமும் ஊட்டுவாள். அவனுக்கு நோய் நொடி என்று வந்தபோது இருவருமே, கண்விழித்து கண்ணின் இமையாகக் காத் தார்கள்.

மதன் வளர்ந்து படித்து ஆளாகியபோது தான் நல்லம்மா மாரடைப்பால் காலமா னாள். வடிவேல் மாஸ்டரில் விழுந்த இரண் டாவது பேரிடி இது. வாய்விட்டு அழுதார். 'நல்லம்மா நல்லம்மா' என்ற சொல்லை மந்திரமாய் முணுமுணுத்தார். தன்னை விட்டு உயிர் பிரிந்த உணர்வில் துடித்தார். வடிவேல் மாஸ்டரின் கம்பீரமான தோற்றம் அடியோடு மாறிப்போயிற்று. ஆஸ்துமாவும் அவரை விடாப்பிடியாகத் தொற்றிக் கொண் டது.

மதன் படிப்பை முடித்ததும் அவனுக்கு நல்லதோர் வேலை கிடைத்ததை எண்ணி உள்ளூர ஆறுதலடைந்தார் வடிவேல் மாஸ் டர். தன்னுடைய உழைப்பில் பேரனை உயர்த்திய திருப்தி அவருக்கு. நாளடைவில் மதனில் அவர்கண்டமாற்றம் அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. தன்னுடைய அந்திம காலத்தை மதன் ஆல விருட்சமாய் காப்பான் என்ற நம்பிக்கை வடிவேல் மாஸ் டரிடமிருந்து நழுவிப் போவதை அறிந்து அவர் வேதனையில் துவண்டார். தன பேரன் தன்னிடம் வருவதும் அருகிப் போவதை அவரால் தாங்க முடியவில்லை.

பேரன் உழைக்கத் தொடங்கினால் தன் தாத்தாவை மறக்காமல் ஏதாவது வாங்கி வந்து தன்னைத் திகைப்பில் ஆழ்த்து வான், என்ற வடிவேல் மாஸ்டரின் கற் பனை சரிந்து பல நாட்களாகி விட்டன. மாணிக்கத்தை விட்டால் வேறுவழியில்லை போல் இப்போது அவருக்குத் தோன்றியது. முதல் சம்பளத்துடன் பேரன் தன் கண் ணெதிரே தோன்றித் தன்னை சந்தோஷத்தில் திளைக்கவைப்பான் என்ற வடிவேல் மாஸ் டரின் எதிர்பார்ப்பு சுக்கு நூறாய்ச்சிதறியது.

பெற்றவர்கள் மூப்பிலும் நோயிலும் பிள்ளைகளின் அன்பையும் ஆதரவையுந் தானே எதிர்பார்க்கிறார்கள் என்பதை இந்தக் காலத்துப் பிள்ளைகளால் ஏன் உணரமுடி வதில்லை? 'வயதானவர்களுடன் ஓர் அஞ்சு நிமிஷம் செலவழிக்க மனமில்லையே ஏன் ஏன்?' வடிவேல் மாஸ்டர் விடை தெரியாமல் தவித்தார். கிரிகெட்டுக்கும் ரி.வீ.க்குந்தான் மதிப்பா? அவருடைய நினைவு கசந்தது. நல்லம்மா செத்ததிலிருந்து மாணிக்கத்தின் கையால் வாங்கிச்சாப்பிட்டு அவருடைய நாக்கு மரத்துவிட்டதுபோல் உணர்ந்தார். தன் பேரனின் கையால் வாங்கிச்சாப்பிட வடிவேல் மாஸ்டருக்கு நீண்ட நாள் ஆசை. அது அவருக்குள்ளே அடங்கிப்போயிற்று. 'மதனுக்குக் கலியாணமானால் தன் நிலைமை என்னவாகும்?' என்று அவர் சிந்தனையில் ஆழ்ந்த போது அவனுடைய அழைப்பு அதைக் கலைத்தது. புன்னகையுடன் நிமிர்ந்து "வாப்பா மதன்!" என்றார் ஆவலுடன்.

"ஒண்ணுமில்லதாத்தா சும்மாதான். ஹௌ ஆர் யூ? நல்லா றெஸ்ற் பண்ணுங்க. நான் உங்கள டிஸ்ரப் பண்ணவிரும்பல்ல!" வாசலில் நின்று செல்லியவேகத்தில் அவன் அங்கிருந்து சென்றுவிட்டான். மண்டபத்தில நிலவிய அமைதி வடிவேல் மாஸ்டரின் மனதில் இல்லை. அவருடைய ஈரம் கசிந்த கண்கள் நல்லம்மாவைத் தேடுகின்றன. ●

**ரூபராணி**

---

# சோதனை

தில்லை களிமண்ணை வாளியொன் றில் அள்ளி ஓர் இடத்தில் குவித் தான். இரண்டு மணி நேர வேலை யின் பின்பு மரத்தடிப்பக்கம் போய் ஆலமர வேரின் மேல் குந்தினான். உடலிலிருந்து வியர்வைத் துளிகள் வழியத் தொடங்கின. கட்டியிருந்த வேட்டித் தலைப்பால் முகத்தை துடைத்துக் கொண்டு நிமிர்ந்தான். அவன் மகன் மதியச்சாப்பாடு கொண்டு வருவது தெரிந்தது. "ராஜு... சாப்பாட்ட வச்சுப் போட்டு கிணற்றில போய் ஒரு வாளித் தண்ணி அள்ளிக் கொண்டு வா....!" சொல் லியபடி சாப்பாட்டை வாங்கி மரக்கொப்புக் குள் வைத்தான் தில்லை. கருவாட்டு வாடை அவனின் நாவிற்கும், மூக்கிற்கும் தூண்டலை ஊட்டியது. 'களி மண்ணைப் பிசைந்துவிட்டுச் சாப்பிடுவோம்' என்ற உறுதியோடு மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு எழும்பினான்.

மகன் கொண்டுவந்த தண்ணீர் வாளியை வாங்கி மெதுமெதுவாக களிமண் குவியலின் மேல் ஊற்றினான். "ராஜு களி மண்ணைக் கொஞ்சம் மிதித்து உழக்கு!" அவன் சொல்லி முடிப்பதற்கிடையில் களி மண்ணின் மேல் காலை வைத்துவிட்டான் அவனது பத்து வயது மகன் ராஜு. தந்தை செய்யும் தொழிலின் படிமுறைகள் அவனுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தன.

நான்கு வருடங்களுக்கு முன் கடை யொன்றிற்கு முதலாளியாகவிருந்த தில்லை, இன்று சட்டி, பானை வார்ப்புத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றான். யுத்த மண்ணில் இது ஒன்றும் புதுமையல்லவே. போரினால் கடையை மட்டும் அவன் இழக்க வில்லை. மனைவியைக் கூட இழந்திருந்தான். தனது உயிரையும், மகனின் உயிரையும் மட் டுமே அவனால் காப்பாற்ற முடிந்தது. பேனை தூக்கி கணக்குப் போட்ட கைகள் இன்று களிமண்ணை உருட்டிக் கொண்டிருக் கின்றன. அவனுக்கு இந்த தொழில் தெரிந் திருந்தமையினால் இரு உயிர்களின் வயிறு நிரம்புகிறது. இந்த நாட்டில் வசிப்பிடங்கள் நிலையற்றதாகிவிட்டதால் குறிப்பிட்ட ஒரு தொழிலை மட்டும் எதிர்ப்பார்க்க முடியாது என்பதற்கு தில்லை ஓர் உதாரணம்.

தில்லைக்குப் பசி வயிற்றைக் கடித்தது. 'இன்றைக்குச் செய்த வேலை போதும்' என எண்ணிக் கொண்டு கைகளைக் கழுவிவிட்டு, சோற்றுப் பொட்டலத்தை அவிழ்ந்த படி, "ராஜு இங்க வந்து கொஞ்சம் சாப்பிடன்!" என்று கேட்டான். 'வேண்டாம்' என்ற தோரணையில் அவன் தலையாட்டினான். சாப்பிட்டு முடிந்த கையோடு பொலித்தீன் விரிப்பை எடுத்து களிமண்ணின் மேல் மூடிவிட்டு, மகனையும் கூட்டிக் கொண்டு குடிசையை நோக்கி நடந்தான். "அப்பா இரவுச் சாப்பாட்டுக்கு கடையில பாண் வாங்க வேணுமே?" ராஜு அக்கறையுடன் கேட்டான். "போகும் போது வாங்குவம்!" தில்லை சொன்னபடி நடந்தான்.

கடைக்குப்போய் பாண் வாங்கிவிட்டு குடிசைப் படலையைத் திறந்து உள்ளே புகுந்தார்கள். தில்லை குப்பி லாம்பைக் கொளுத்தி உரலின் மேல் வைத்தான். நடுத்தரக் குடும்பத்திற்குரிய ஓரளவு வசதியு டன் வாழ்ந்த அவன் மகன்-இன்று வெறும் தரையில் படுப்பதும், உடுக்க நல்ல துணி மணிகள் இல்லாமல் தவிப்பதையும் கண்டு அவன் உள்ளம் மரத்துப் போய்விட்டது. 'இந்தச் சிறிய வயதிலேயே தாயை இழந்து விட்டானே' என்று எண் ணும் போதெல்லாம் அவனையறியாமலே அவன் கண்களிலிருந்து நீர் பெருகும்.



அன்றைய இரவு கழிந்து மறுநாள் புதிதாக உதயமாகிக் கொண்டிருந் தது. அதிகாலைக் குளிருக்கு அவன் மகன் கால்களைச் சுருட்டிக் கொண்டு படுத்தி ருந்தான். அதைக் கண்ட தில்லை எழுந்து வளையில் கிடந்த துவாயை எடுத்து அவனைப் போர்த்திவிட்டு, வெளியில் வந்து வேப்பங் குச்சியை முறித்துப் பல் துலக்கினான். வானம் கொஞ்சம் கொஞ்சமாக இருண்டு கொண்டிருந்தது. விரைவாக முகம் கழுவிக் கொண்டு குடிசைக்குள் நுழையும்போது மகன் எழும்பியிருந்தான். "ராஜு.... எழும்பிட்டியா?.... சுதிரை யில் கிடக்கிற சேட்ட எடுத்துத்தா.... மழைவாற மாதிரி தெரியுது. களிமண்ணை எடுத்துப் போட வேணும்" என்றபடி சேட்டைப் போட்டபடியே வெளியேறினான்.

மழை துளி துளியாகத் தூறல் போட ஆரம்பித்தது. முழக்கமும் மின்னலும் உகைப்பு மழைக்குரிய அறிகுறிகளைக் காட்டி யது. அவசர அவசரமாக களிமண்ணை அள்ளி வாளிக்குள் போட்டபடி வாளியைத் தூக்கிக் கொண்டு எழும்பியவனை வெட்ட வெளியான அவ்விடத்தில் திடீரென அடித்த மின்னல் தாக்கியது. "ராஜு!" என்ற அலற லோடு கொடூரமான முறையில் நிலத்தில் விழுந்து இறந்தான் தில்லை. அவன் இறக்கும் போதும் மகனின் பெயரையே உதடுகள் உச்சரித்துவிட்டுப் போனது. அவன் மகன் கடைக்குப் போய் தந்தைக்கு காலைச் சாப் பாட்டிற்குரிய இடியப்பங்களை வாங்கி வந்து கொண்டிருந்தான். ▭

**அ. கோகுலதீபன் - கல்முனை**

---

# வாக்கினிலே இனிமை வேண்டும்

கோயிலில் தரிசனம் முடிந்து புறப் பட நினைத்தபோதுதான் அவரைக்கண்டேன். 'குணசேக ரன்' நான் சற்றும் அவரை எதிர்பார்க்க வில்லை. அதுவும் இந்த இடத்திலே. அவ ருக்கு கடவுள் நம்பிக்கையைவிட தன் னம்பிக்கை தான் அதிகம். என்னுடைய அலுவலகத்திலே ஒரு பத்து வருடங்களுக்கு முன்னர் வரை அதிகாரியாக இருந்து இளைப்பாறியவர். அவர் அதிகாரியாக இருந்த காலத்தை யோசித்துப் பார்த்தேன்.

'இடியட்' என்ற ஆங்கில வார்த்தை வேண்டுமானால் கெட்ட வார்த்தையாக இருக்கலாம். ஆனால் அது அவருக்கு ஒரு



உபயோகமான வார்த்தைதான். அவருடைய வார்த்தையில் அதிகாரத்தனமும், மிடுக்கும் எப்பொழுதுமே இருக்கும். பேச்சினிலே கனி வையோ, அல்லது முகத்தினிலே சிரிப் பையோ காண்பது அரிதுதான். கேட்டால் அது 'எனது சுபாவம்' என்பார். ஒருவர் அதிகமாக காயப்படுவது எதிராளி இகழும் போது அல்ல, தன்னை ஒரு பொருட்டாக மதிக்காத போதுதானாம். ஒருவேளை அந்தக் காலத்தில் ஏற்படுகின்ற கசப்பான அனு பவங்கள் பிறிதொரு சந்தர்ப்பத்தில் மற்ற வர்களை பழிவாங்க தூண்டலாம் அல்லவா? அதாவது 'சாதாரண நிலையில் இருக்கின்ற ஒருவர் கடினமுயற்சியினால் ஒரு முன் னேற்றத்தை எட்டும் போது ஏற்படுகின்ற ஒரு இயல்பான தாழ்வு மனம் தான் இது' என்கின்றார் சிக்மன் பிராய்ட்டு என்கின்ற சிந்தனையாளர்.

குணசேகரன் அலுவலகத்துக்கு வெளி யேயும் சரி உள்ளேயும் சரி மற்றவர்களிடம் இருந்து சற்று விலகித்தான் இருப்பார். அலுவலகத்துக்கு வந்து போவதில் இருந்து உணவு உண்பது வரை ஏதோ ஒரு விதத்தில் தன்னை தானே தனிமைப்படுத்திக் கொள்வார். எங்கள் அலுவலகத்திலே பணி புரிபவர்களுக்கும் அவருக்குமிடையே நல்ல தொரு புரிந்துணர்வு இருந்ததில்லை. அதனால் தானோ என்னவோ பலர், வேலையில் ஒரு பற்று, விசுவாசம், இல்லாத மாதிரி நடந்து கொள்வார்கள். ஒருவேளை ஊழியர்களோடு இயல்பாய் பழகும் போது அவர்கள் தனக்கு மதிப்பு கொடுக்கமாட்டார் கள் என்று கூட அவர் நினைத்து இருக்கலாம். ஆனால் ஒருவருக்கு மரியாதையின் நிமித்தம் கிடைக்கின்ற மதிப்புக்கும்., அதிகாரத்துக்காக மட்டும் கொடுக்கின்ற மதிப்புக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அவர் உணர்ந்து இருக்கவில்லைப்போலும்.

"சேர் அம்மாவுக்கு சுகமில்லை லீவு வேணும்?"

"அம்மாவுக்கு சுகமில்லாட்டில் அப்பா பார்ப்பார். நீர்வேலையைப் பாரும்."

சேர் கோயிலுக்கு "போக வேணும்!"

"ஏன் நீரோ குருக்கள்!"

சிலர் சுகயீன லீவு எடுத்தபோது கூட "நீர் ஏன் முதல் நாளே விண்ணப்பிக்க வில்லை?" என்று கேட்டசந்தர்ப்பங்களும் உள்ளன. இவற்றை எல்லாம் ஒரு கட்டுக் கோப்பான நிர்வாகம் என்று அவர் கருதி னாரோ தெரியவில்லை. ஆனால் மனிதாபி மானத்தோடு நடந்து கொள்வது என்பது கூட ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரிக்குரிய கடமை தான். வெறும் மிரட்டல்களாலும், சத்தத்தினாலும் எதைத்தான் சாதித்திட முடியும். அவருக்கு அடிக்கடி கோபம் வரும். கண்கள் சிவக்கும். பதட்டம் ஆகிவிடு வார். வார்த்தைகள் ஆங்கிலத்திலே சூடாகிப் பறக்கும். சிலவேளை அவர் கோபப்படுகின்ற போது எனக்கு சிரிப்புத்தான் வரும். ஏனென் றால், ஒருவர் தன்னைத்தானே தாழ்த்தி நினைக்கின்ற போது ஏற்படுகின்ற ஒரு பிரதிபலிப்பு தானே கோபம். அதாவது என்னை ஒருவன் 'குரங்கு!' என்று சொல்லிவிட்டால் நான் குரங்காக இல்லாதவரை- கோபம் வர சந்தர்ப்பமே இல்லை. எவ்வளவோ படித்தவர்கள் கூட ஏன் இப்படி அடிக்கடி பதற்றம், கோபம் அடைகின்றார்கள்? சிந்திக்கத் தெரிந்தவர் களுக்கு ஏன் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த மட்டும் தெரிவதில்லை? கடைசியாக அவர் இளைப்பாறிக் கொண்டு வெளிநாடு ஒன்றுக்கு புறப்பட இருந்தார். அப்போது அவருடைய பிரிவுக்காக ஒருத்தருமே வருத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

இவை எல்லாம் பத்து வருடங்களுக்கு முன்னைய நிகழ்வுகள். இப்போது அவர் முதுமை அடைந்து இருந்தார். ஓர் ஆன்மீக வாதியைப் போல நெற்றியில் பெரிய பொட்டு. அவர் என்னை கவனித்தாரோ தெரிய வில்லை. என்னை நோக்கி வந்து கொண்டு இருந்தார். ஒரு கணம் யோசித்தேன். அவர் என் முன்னைய அதிகாரி. ஆனாலும் அவரை எதிர்கொள்வதற்கு என்மனம் ஏனோ இடம் கொடுக்கவில்லை! அவரை ஒரு அதிகாரியாகவே பார்த்த என்னுடைய மன துக்கு அவரை ஒரு சராசரி மனிதராகப் பார்க்க முடியவில்லைப் போலும்.....

என்கால்கள் என்னையும் அறியாமல் எதிர்த்திசையில் நடக்கத் தொடங்கின. ஒருத் தருடைய வார்த்தைகள் தான் எப்பொழு துமே நல்லதொரு பெயரை பெற்றுக் கொடுக் கும் என்பதை மீண்டும் ஒரு தடவை என் மனதை கேட்டுத்தான் தெரிந்து கொண்டேன்.

**இணுவில் உத்திரன்**

# இலக்கிய நயம்

# மனுக்குலத்தின் தோல்வி!

**தூ**ரத்தே இரு சிறுவர்கள் கட்டிப் புரண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ரவியைச் சந்திப்பதற்காக அவன் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்த சியாமளனுக்கு இது கண்ணில் பட்டது. 'ஒருத்தரையொருத்தர் அடித்துக் காயப்படுத்திக் கொள்ளப் போகிறார்களே!' என்ற கவலையுடன் அவர்களை நோக்கி விரைந்து நடந்தான்.

கிட்ட நெருங்கியதும், "சியா!" என்ற குரல் கேட்டுத் திரும்பினான்.

மரத்தின் அடியில் முதுகைச் சாய்த்து உட்கார்ந்திருந்தான் ரவி. அந்தச் சிறுவர்களின் சண்டையை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னடா அவர்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். நீ அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறாய்....?'

"வா... சியா, பதற்றப்படாதே இரு ...!" அந்தச் சிறுவர்களிடமிருந்து பார்வையைத் திருப்பாத ரவி, தொடர்ந்து சொன்னான். "அதோ பார்! அந்தச் சிவப்புச் சட்டை அணிந்த சிறுவன் சும்மா பேசிக்கொண்டிருந்தபோதே மற்றச் சிறுவன் அடிஅடியென்று அடித்துவிட்டான். பார் அவன் சட்டை கிழிந்திருப்பதை. இப்போதுதான் அவன் திருப்பித் தாக்கத் தொடங்கியிருக்கிறான். இப்பப் போய் நீ விலக்குப் பிடித்து விட்டால் சிவப்புச்சட்டைச் சிறுவன் பாதிக்கப்பட்டு விடுவானல்லவா...."


"அதுக்காக? இருவரும் ஒருவரையொருத்தர் அடித்துக் காயப்படுத்துவதைப் பார்த்து ரசிக்க வேண்டும் என்கிறாயா?"

"ரசிக்க வேண்டாம். அவர்களைக் கண்டுகொள்ளாமல் விடு! அவன் அடித்ததுக்குப் பதில் இவனும் அடித்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்..."

"என்னடா ரவி! கண்ணுக்கு முன்னால் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். அதைத் தடுக்காமல் வேறு அலுவலைக் கவன[illegible]கச் சொல்கிறாய்..... மனிதத் தன்மையே இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறாய் நீ....!"

"ஏதடா மனிதத் தன்மை. அடிக்கிறவன் அடிப்பான். அடிவாங்கியவன் திருப்பி அடிக்காமல் தடுத்துவிட வேண்டும் இதுவா மனிதத் தன்மை?"

"என்ன சத்தம்? இருவரும் எதைப்பற்றி சண்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?" கேட்டுக்



கொண்டே அவ்விடத்துக்கு வந்தாள் சரண்யா.

"சண்டைப் போடுவதைப் பற்றித்தான்?" என்றான் ரவி.

"சண்டை போடுவதைப் பற்றியா சண்டை?"

"வா சரண்யா.... நான் சண்டையே கூடாது நிறுத்த வேண்டும் என்கிறேன். இவன் பாதிக்கப்பட்டவர்கள் சண்டையிட அனுமதிப்பது நியாயம் என்கிறான். அடிவாங்கியவர் திருப்பிக் கொடுப்பது சரிதான் என்று வாதிட்டால் ஒரு கட்டத்திற்குப் பிறகு அந்தச் சண்டையை நிறுத்த என்ன வழி? எதுவுமில்லையே...."

"அடித்தவனுக்கு எந்தத் தண்டனையுமில்லாமல் சண்டையை நிறுத்துவதில் என்ன... நியாயம்?" ரவி கோபத்தோடு உரைத்தான்.

"சண்டையால் அந்தத் தண்டனை வழங்கப்படக்கூடாது என்கிறேன்...."

சரண்யா குறுக்கிட்டாள், "சரி சரி, கோபம் வேண்டாம். நியாயமான யுத்தம் என்று ஒன்று உண்டா?"

"அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு இருப்பவர்கள் விடுதலைக்காகப் போராடுவது என்னவென்று சொல்கிறாய்...?"

"நியாயம் தான். ஆனால் யுத்தம் என்று வருகிறபோது இருதரப்பிலும் உள்ள வயதானோர், பெண்கள், குழந்தைகள் போன்றோர் தானே பெருமளவில் கொல்லப்படுகிறார்கள். யாருடைய விடுதலைக்காக இவர்களெல்லாம் சாக வேண்டும்? மேலும், வெகுமக்கள் மீதான வன்முறைக்கும் நிராதரவான மக்கள் மீதான அரசுக் கொலைகளுக்கும் எதிராகப் போராடப் புறப்பட்ட அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பான அமைப்புக்களே அந்த மக்களின் மீது அதே மனித உரிமை மீறல்களைத் திணிப்பதைத்தானே உலக வரலாற்றில் பார்த்து வருகிறோம்... எந்தச் சண்டையை நீதியானது என்று ஏற்கச் சொல்கிறாய்?"

"சரியான போராட்டம் என்று எதுவும் கிடையாது என்கிறாயா?"

சரண்யா சிறிது நேரம் ரவியையும் சியாமளனையும் மாறிமாறி பார்த்தாள். பிறகு ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு சொன்னாள்:

"சரியானது என்பதை யார் தீர்மானிப்பது. அந்தக் காலத்தில் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்றதாகத் தான் ஹிட்லரின் படுகொலைகள் காட்டப்பட்டன. இன்னும், ஸ்டாலின், பொல்போட் போன்றோர் செய்த கொலைகளும் அவ்வாறே தான். கொலை செய்கிறவர்களெல்லாம் விடுதலைக்காக, மக்களுக்காக, இது சரியானது என்றே பெரும்பாலும் நினைத்துச் செய்கிறார்கள், சரியான காரணத்திற்காகக் கொலை செய்வது சரிதான் என்று பொதுவாக எடுத்துக் கொண்டோம் என்றால்,

தருவது

## முழடில்யன்

அவரவர்க்குச் சரியென்று நினைத்து தெருவில், சந்தியில், சந்தையில் செய்யும் கொலைகளை எல்லாம் கண்டிக்கவே முடியாது. அரசு இவற்றைக் கண்டிக்கலாம் என்றால், 'யாருடைய அரசு?' என்ற கேள்வி எழும். அதனால் தான் சொல்கிறேன். சரியான காரணங்களுக்காகவும் யுத்தம் வேண்டாம்...."

"போராட்டமே தவறு என்கிறாயா?" என்று பதட்டத்தோடு கேட்டான் சியாமளன்.

"இல்லை, வன்முறை வேண்டாம் என்கிறேன். உயிரழிப்பு வேண்டாம் என்கிறேன். அதைச் செய்கிறவர்களைத் தடுப்பதற்கும், யுத்தமற்ற வன்முறையற்ற வழிகளைத்தான் நாம் கண்டாக வேண்டும்."

"சரண்யா நீ சாமியாரிணிகள் போல் கதைக்கிறாய்...." என்று சிரித்தான் ரவி. "நீதியை நியாயத்தை நிலை நாட்டுவதாக இருந்தால் இந்த உலகில் தடியெடுத்தால் தான் உண்டு. இந்த சமூக அமைப்பே நியாயமற்றது. இதற்குள் நீதி தானாகவே உருவாகும் என்பது நரி ஏதோ அழுகி விழுவதற்காகக் காத்திருந்த கதைதான்....."

"தானாக நடக்கும் என்று நான் சொல்லவில்லை ரவி. இதனாளெல்லாம் கொலைகளுக்கும் வன்முறைக்கும் ஒரு நியாயமில்லை என்றே சொல்கிறேன். வேறு போராட்ட வழிமுறைகளை சக்திவாய்ந்ததாக ஆக்கிக் கொள்ளத் தெரியாமலிருப்பது நம்முடைய பிழை அல்லது சோம்பறித் தனம் தான்!"

"மனிதனை மனிதன் அடித்து அழித்துக் கொள்வதை ஏற்றுக் கொள்ளக் கஷ்டமாகத்தானிருக்கிறது. ஆயுதங்களால் சண்டையிடும் இருவரில் யார் ஒருவர் தோற்றாலும் அது மனுக்குலத்தின் தோல்விதான் என்று சங்க காலத்திலேயே சேளவூர்கிழார் என்றொரு புலவரும் பாடி வைத்திருக்கிறார்!" என்றான் சியாமளன்.

"துரியோதனனாக இருந்தாலும், இராவணனாக இருந்தாலும் அவனையும் அவன் குடிமக்களையும் தயவு தாட்சண்யமின்றி அழித்தால்தான் பாண்டவரை இராமலக்குவரைச் சேர்ந்தவர்கள் வாழலாம் என்பது எத்தனை பெரிய கொடூரம்!"

**நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே;**
**-நின்னொடு**
**பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே**
**ஒருவீர் தோற்பினும், தோற்பது**
**-நும்குடியே.....**

(புறம் : 45)

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

# ஸ்போர்ட்ஸ்

## ஓய்வு பெறுகிறார் ரணதுங்க



**இ**லங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

36 வயதடைய அர்ஜுன ரணதுங்க ஒருநாட்டில் முதல் மற்றும் 100வது டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ஒரே வீரர் என்ற சாதனைக்குச் சொந்தக்காரராக இருக்கிறார்.

இவரது தலைமையிலான இலங்கை அணி 1996ம் ஆண்டு உலகக்கோப்பையை வென்றுள்ளது.

இதுவரை 90 டெஸ்ட் போட்டிகளிலும் 269 சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார் ரணதுங்க.

இலங்கை அணிக்காக 56 டெஸ்ட் போட்டிகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார் ரணதுங்க. அதில் 12 வெற்றியும் 19 தோல்வியும், 25 வெற்றி தோல்வியின்றியும் முடிவடைந்தன.

இதேபோல் 193 சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்குத் தலைமை தாங்கினார். அதில் 89 போட்டிகளில் இலங்கை அணி வென்றுள்ளது.

## மைதான மேம்பாட்டுக்காக மோதல்

**இ**ங்கிலாந்தில் உள்ள ஓவல் மைதானத்தை மேம்படுத்துவதற்காக நடத்தப்படும் காட்சிப் போட்டியில் உலக நாடுகள் மற்றும் ஆசிய அணிகள் ஓவல் மைதானத்தில் மோதுகின்றன.

ஜூலை 29ம் திகதி நடக்கும் இந்த ஒருநாள் போட்டிக்கான முயற்சிகளை இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் ஜோன் மேஜர் எடுத் துள்ளார்.

ஆசிய அணியில் இந்திய மற்றும் பாகிஸ்தான் வீரர்கள் மட்டுமே உள்ளனர். தென்னாபிரிக்காவுடன் இலங்கை அணி டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருவதால் இலங்கை வீரர்கள் ஆசிய அணியில் இடம் பெறவில்லை.

ஆசிய அணியில் 7 இந்திய வீரர்களும், 5 பாகிஸ்தானிய வீரர்களும் இடம்பெற்றுள்ளனர். நீண்டகாலமாக விளையாடாமல் இருக்கும் இந்தியாவின் ஜவகர் ஸ்ரீநாத்தும், பாகிஸ்தானின் சொஹைப் அக்தரும் இப்போட்டியில் இடம்பெறுகின்றனர்.

ஆசிய அணிக்கு இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரும் உலக நாடுகள் அணிக்கு இங்கிலாந்தின் அலெக் ஸ்ரூவர்ட் தலைமை தாங்குகின்றனர். உலக நாடுகள் அணி விவரம் வருமாறு:

அலெக் ஸ்ரூவர்ட், நஸீர் ஹுஸைன், கிரஹாம் தோர்ப், அலன் முலாலி (இங்கிலாந்து), மைக்கல் ஸ்லேட்டர், ஷேன் வோர்ன் (அவுஸ்திரேலியா), நதன் அஸ்ட்லே, கிறிஸ் கெய்ன்ஸ் (நியூஸிலாந்து), நீல் ஜோண்சன், ஹீத் ஸ்ட்றீக் (ஸிம்பாப்வே), கொட்னி வோல்ஷ் (மேற்கிந்தியத்தீவுகள்).

## மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட்

**ஏ**ழாவது மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் வருகின்ற நவம்பர் 28ம் திகதி நியூஸிலாந்தில் ஆரம்பமாகின்றன.

கடந்த முறை இந்தியாவில் நடைபெற்ற மகளிர் உலகக் கிண்ணப்போட்டியில் சாம்பியனான அவுஸ்திரேலியா, இரண்டாவதாக வந்த நியூஸிலாந்து ஆகிய நாடுகளுடன் இங்கிலாந்து, இந்தியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள், இலங்கை, நெதர்லாந்து, அயர்லாந்து ஆகிய 09 அணிகள் போட்டியிடுகின்றன.

லீக் மற்றும் நொக்-அவுட் முறையில் நடைபெறும் இப்போட்டிகளில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்குத் தகுதிபெறும். நவம்பர் 28ல் தொடங்கும் போட்டிகள் டிசம்பர் 23ம் திகதிவரை நடைபெறவுள்ளன.

## இவர்தான் அவர்



விவேக்

# சிந்தியா பதில்கள்

**★ பேய் என்றால் பயந்து நடுங்குபவரா நீங்கள்?**

எஸ். காந்தன்-களுவாஞ்சிக்குடி.

"அதனுடன் தானே குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறேன்!" என்று நானும் சொல்லலாம். அது சரியில்லை, பேய் என்றால் என்ன, உடம்பு இல்லாத உயிர்தானே! அதேபோல உயிரற்ற உடல்-பிணம். பேயும் பிணமும் சேர்ந்த கலவைதானே நாமெல்லோரும்! பிறகு.... பேய்க்கும் பிணத்துக்கும் நாம் ஏன் நடுங்க வேண்டும்?

**★ கிரிக்கெட் வானொலி நேர்முக வர்ணனையில் தமிழுக்கு ஒதுக்கப்படும் நேரம் நியாயமானதுதானா, சிந்தியா?**

வி. பரமேஸ்வரன்-கொழும்பு-12.

இலங்கை அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கிறது என்று வையுங்கள். வானொலியில் நேர்முக வர்ணனையைக் கேட்டுக் கொண்டிருக்கும் நாம், தமிழ் வர்ணனையைக் கேட்க வேண்டுமானால், மைதானத்தில் ஆடிக் கொண்டிருப்பவர் 'எப்படா 'அவுட்'டாவார்' என்று காத்திருக்க வேண்டும். அவர்கள் அவுட்டானால்தான் நமக்குத் தமிழில் வர்ணனை! இந்த லட்சணத்தில் தமிழர்களுக்கு நாட்டுப்பற்று இல்லையென்று யாரும் வருத்தப்பட்டுக் கொண்டால் நாமென்ன சொல்ல?



'கண்டு கொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தில் அஜித்-தபு, அப்பாஸ்-ஐஸ்வர்யாராய்

**★ சிந்தியா! ஆண்கள் காதலில் தோல்வியடைந்தால் தாடி வளர்க்கிறார்கள். பெண்கள் காதலில் தோல்வியடைந்தால் என்ன செய்வார்கள்?**

எச்.எம்.எம். ஷிபான்-புதிய காத்தான்குடி-03.

தாடியில்லாதவராய்ப் பார்த்து கல்யாணம் செய்து கொள்வார்கள்!

**★ மார்வன் அத்தப்பத்துவின் துடுப்பாட்டம் எப்படி?**

பாத்திமா இர்ஸானா-எந்தரமுல்ல.

அதிரடி இல்லை, ஆர்ப்பாட்டமில்லை, பரபரப்பில்லை... நட்சத்திர வீரரில்லை. ஆனால் நம்பிக்கைக்குரிய ஆட்டக்காரர். களத்தில் மறுமுனையில் நிற்பவர் அடித்து ஆடுகிறாரா? இவர் நிதானமாக அனுசரணையாளராகத் தொழிற்படுவார். அவர் ரன் எடுக்கத் தடுமாறிக் கொண்டிருக்கிறாரா? பந்தை எப்படி எங்கு தட்டினால் சொன்னது கேட்கும், எல்லைக்கோட்டைத் தாண்டும் என்பதை இவர் காட்டித் தந்துகொண்டிருப்பார். மறுமுனை ஆட்டக்காரர் விளாசலுடன் முன்னேறிக் கொண்டிருப்பதை நாம் கூட குறிப்பாய்ப் பார்த்துக் கொண்டிருப்போம். இவரோ ஓசைப்படாமல் ஐம்பது நூறென்று தாண்டிக் கொண்டிருப்பார். அலட்டிக் கொள்ளாத முகபாவம். களிப்புத் துள்ளலோ கஷ்டத்தைச் சுமக்கும் வாட்டமோ, கோபமோ, குத்தல் சிரிப்போ ஏதுமற்ற கருமமே கண்ணாய் தன் அணிக்குப் பணி செய்யும் கர்ம வீரர். மார்வன் கையில் இருப்பது துடுப்பல்ல, அணியைத் தாங்கும் தூண்!

**★ அப்பு?**

மொஹமட் இர்ஹாம்-காத்தான்குடி-05.

ஆச்சியின் கணவர்!

**★ 'கண்டு கொண்டேன் கண்டுகொண்டேன்' படம் 'Sense and Sensibility' என்ற ஆங்கிலப் படத்தின் கொப்பியாமே. இது உண்மையா?**

ஐ. அஸ்மி அஹமட்-திக்குவல்லை.

நீங்கள் பார்த்த அந்தத் துணுக்குச் செய்தியை நானும் பார்த்தேன். டைட்டானிக் நாயகி கேட் வின்ஸ்லெட், எம்மா தொம்ஸன் ஆகியோர் நடித்த புதிய படம். அதையே சுட்டுவிட்டார்கள் கோடம்பாக்கத்துக்காரர்கள். அதிவேக அசகாயசூரர்கள்தான் சந்தேகமில்லை!

**★ எப்போது ஒருவர் தனது சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்கலாம்?**

எம். மக்பூல்-அநுராதபுரம்.

அன்பு அவரை அடிமைகொள்ள வரும் போது!

**★ அம்மா எனக்கு அக்கா... மகள் எனக்குத் தங்கை... இது எப்படி என்று சொல்ல முடியுமா சிந்தியா?**

கே. பிரதீபன்-மட்டக்களப்பு.

எல்லாம் உங்கள் பக்கத்து வீட்டுக்காரரின் பாதுகாப்பு உணர்வினால் வந்ததுதான். அவரது பதினான்கு வயது மகள் உங்களை 'அண்ணா' என்று அழைப்பாள். அந்தப் பெண்ணின் அம்மா அதாவது பக்கத்து வீட்டுக்காரரின் மனைவி (என்ன, ஒரு முப்பத்தைந்து வயதிருக்குமா?) அவரை நீங்கள் 'அக்கா' என்று விழிக்கிறீர்கள்.... மகள் தங்கையாகவும் அம்மா அக்காவாகவும் ஆகியிருக்கிறார்கள். அதுதானே விஷயம்?

**★ சிந்தியா அவர்களே, ஒரு சின்ன சந்தேகம். மீன் சாப்பிட்டால் கண்ணுக்கு நல்லது. சாப்பிடாவிட்டால்...?**

எம். பிரியம்வதனா-கொழும்பு-13.

மீனுக்கு நல்லது!

**★ சிந்தியா! காதல் சிறந்ததா நட்பு சிறந்ததா?**

ந. கனகலிங்கம்-பொகவந்தலாவ.

அவரவருக்கு வாய்த்த காதலையும், நட்பையும் பொறுத்தது. "நட்பை விட காதல் உயர்வானது. ஏனெனில், உள்ளங்களால் மட்டுமல்ல, உடல்களாலும் இணையும் வாய்ப்பு காதலில் உண்டு!" சொல்லியிருப்பவர் ஹொலிவூட் இயக்குனர் நியூக் அண்டர்சன்.

"காதலை விட மேலானது நட்புன்னு நினைக்கிறேன். நண்பர்கள் இல்லாத வாழ்க்கையை யோசிச்சுப் பாருங்க. அது பாலைவனம்!" இதைச் சொன்னவர் கோடம்பாக்கம் 'சேது' பட இயக்குனர் பாலா.

**★ டியர் சிந்தியா, எதிர்த்துப் பேசினால் திமிர் என்கிறார்கள். பணிந்து போனால் ஏமாளி என்கிறார்களே....?**

எஸ்.எல்.எம். ஸாறாக்-காத்தான்குடி-03.

இரண்டும் கெட்டான் மனிதர்களுக்கே வெற்றிகரமான உலகு இது. மனம் நிறைய எதிர்ப்புகளை கோபங்களை வைத்துக் கொண்டு, வெளியே மழுப்பலாகச் சிரித்தும் பணிவைக் காட்டியும் வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்கள்தான் பெரும்பான்மையினர். தனித்து நிற்காதீர்கள். கூட்டத்தோடு கூட்டமாய் சேர்ந்துவிடுங்கள். பயமில்லை!

Regd. as a News Paper at the G.P.O.(QD/63/NEWS/2000)

# மன்னாதி மன்னன் 16

கண்டசிங்க மன்னனின் மெய் காப்பாளனான காற்படிகன், தான் அக்கரையில் கண்ட அரசிளங்குமாரியைப் பற்றி வர்ணித்த முறையைக் கேட்டு அப்பெண்ணை தானும் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டான் அரசன். அக்கரை செல் வதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு அர சன் பணித்தான்.

கப்பலில் ஏறிக் கொண்ட அரசனும் காற்படிகனும் அக்கரையைச் சென்றடைந்தனர். இவர்கள் இருவரும் அங்கிருந்த காளி கோவிலைச் சென்றடைந்த போது, அரசகுமாரி தன் தோழிகள் புடை சூழ ஆலயத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தாள். ஏற்கனவே தனக்கு அறிமுகமான காற்படிகனுடன் நின்ற அரசன் கண்டசிங்கனைக் கண்டாள் இளவரசி. அரசன் மீது மையல் கொண்டாள்.

தனது தோழியை அழைத்து அரசனை தான் கண்டு உரையாட விரும்புவதாகக் கூறிக் அனுப்பினாள். தோழியும் அரசனிடம் போய் அரசகுமாரியின் கருத்தைக் கூறினாள்.

அரசனும் தானும் இளவரசியைக் காண விரும்புவதாகக் கூறி அனுப்பினான். காளி கோயிலின் பின்புறமாக இருந்த நந்தவனத்தில் இருவரும் சந்தித்தனர். அரச குமாரி தான் அரசனை விரும்புவதாகத் தெரிவித்தாள். அரசன் அவளுடைய விருப்பத்தைத் தான் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகக் கூறினார்.

"நீ என்னை விரும்புவது உண்மையானால் என் விருப்பத்தை நீ நிறைவேற்றி வைக்க வேண்டும். நீ சத்தியம் செய்து தருவாயா?" என்று கேட்டான்.

அரச குமாரியும் சத்தியம் செய்து கொடுத்தாள். அப்போது அரசன், தன்னுடன் நின்ற மெய்காப்பாளன் காற்படிகனைச் சுட்டிக் காட்டி, "இவன் என்னுடைய மிகச் சிறந்த நண்பன் எனக்கு முதல் இவனே உன்னை விரும்பினான். ஆகவே நீ அவனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்!" என்று சொன்னான்.



அரசன் சொல்லுவதைத் தான் கேட்டு நடப்பதாக தான் ஏற்கனவே சத்தியம் செய்து கொடுத்திருப்பதனால் அரசனுடைய கோரிக்கைக்கு அவள் சம்மதித்தாள்.

அரசனுக்கும் இளவரசிக்குமிடையில் நடைபெற்ற உரையாடலைக் கேட்டு மெய்காப்பாளனான காற்படிகன் திகைத்து நின்றான். அவனிடம் "காற்படிகா! அன்று நான் குதிரைச் சவாரி செய்தபோது குதிரை கட்டுக்கடங்காமல் பாய்ந்தோடிச் சென்று கொண்டிருந்ததல்லவா? என்னைப் பாதுகாப்பதற்காக நீ குதிரையின் பின்னே சற்றும் தளராமல் ஓடி வந்தாய். எனக்குத் தாகம் ஏற்பட்டமையினால் என்னைப் பார்க்கிலும் களைத்துப் போயிருந்த உன்னிடம் தாகம் தீர்ப்பதற்கு தண்ணீர் கொண்டுவரும்படி கேட்டேன். நீ உன்னிடம் இருந்த அபூர்வமான நெல்லிக் கனிகள் இரண்டை எனக்களித்தாய். அதன் பின்னர் ஓடிச் சென்று தண்ணீர் கொண்டு வந்து பருகத் தந்தாய். நீ என்னிடம் கொடுத்த நெல்லிக்கனிகள் எனது சோர்வை அகற்றி என்னை உற்சாகப்படுத்தியது. ஆகவே உனக்கு நான் தரும் பரிசு இதுதான். நீ விரும்பிய அரசிளங்குமாரியை நீயே திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டும். இதுவே என் விருப்பம்!" என்று காற்படிகனிடம் அரசன் கூறினான்.

இவ்வாறு வேதாளம் கதையை முடித்து விட்டு விக்கிரமாதித்தனைப் பார்த்து தனது வினாவைத் தொடுத்தது. "இந்தக் கதையில் அரசனுக்கு காற்படிகன் செய்தது உயர்வான காரியமா அல்லது அரசன் காற்படிகனுக்குச் செய்தது நல்ல காரியமா?" என்று கேட்டது.

விக்கிரமாதித்தன், "அரசனுடைய பணியாளனான காற்படிகன் அரசனுக்குக் கட்டுப்பட்டவன். எந்த நிலையிலும் அரசன் இடும் கட்டளைகளை காற்படிகன் நிறைவேற்றக் கடமைப்பட்டவன். ஆனால் அரசன் எவருக்கும் கட்டுப்பட்டவனல்ல. ஆகவே காற்படிகனை விட அரசனுடைய செயலே மிகவும் சிறந்ததாகும்!" என்று கூறி முடித்தான்.

இந்தப் பதிலைக் கேட்ட வேதாளம் விக்கிரமாதித்தனின் தோளில் இருந்து துள்ளிப் பாய்ந்து, ஓடிச் சென்று பழையபடி முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. பல தடவைகள் வேதாளத்திடம் ஏமாற்றமடைந்த விக்கிரமாதித்தன் சற்றும் தயங்காமல் அதன் பின் ஓடிச் சென்று வேதாளத்தைப் பிடித்து மீண்டும் தன் தோளில் சுமந்தவண்ணம் நடக்கலானான். அப்போது வேதாளம் தனது ஒன்பதாவது புதிர்க்கதையைக் கூற ஆரம்பித்தது.

## ஒன்பதாவது கதை

உஷாபுரம் என்ற நாட்டை கிரகபுஜன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய மகள் மணிக்கிசையை மணிமான் என்ற ஓர் அரசனுக்கு மணமுடித்து வைத்தான். இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். அரசன் மணிமானுக்கு பல உயிரினங்கள் பேசும் மொழி தெரிந்திருந்தது.

ஒரு நாள் தம்பதியினர் இருவரும் கட்டிலில்

## எறும்பு கூறிய கதையால் குடும்பம் ஒன்று கலைந்தது

படுத்திருக்கும் போது கட்டிலின் கீழே தரையில் எறும்புகள் கூட்டம் கூட்டமாகத் திரிந்தன. ஓர் அணியின் முன்னே சென்ற எறும்புகள் இடையில் ஏற்பட்ட தடங்கல் ஒன்றினால் தரித்து நின்றன. பின்னால் வந்த எறும்புகள் அங்கு நின்றிருந்த எறுப்புகளைப் பார்த்து "எதற்காக நின்று விட்டீர்கள் போங்கள்!" என்று சொன்னது. முன்புறமாகச் சென்று தரித்து நின்ற எறும்பு பின்னே வந்த எறும்புகளைப் பார்த்து, "நாம் போக வேண்டிய பாதையில் கட்டிலின் கால் ஒன்று தடுத்து நிற்கிறது. அதனால் தான் முன்னேறிச் செல்ல முடியாமல் நிற்கிறோம்!" என்றது.

"இதற்காகவா தங்கி நிற்கிறீர்கள்? கட்டிலைத் தூக்கி ஒருபுறமாக வீசிவிட்டு தொடருங்கள்!" எனக் கூறியது.

எறும்புகளின் மொழி தெரிந்த மணிமான் அந்த எறும்புகளின் உரையாடலைக் கேட்டுச் சிரித்தான். அவன் சிரித்ததற்கான காரணம் தெரியாத மனைவி மணிக்கிசை தன் கணவனைப் பார்த்து "எதற்காகச் சிரிக்கிறீர்கள்? நீங்கள் சிரிப்பதற்கான சம்பவம் எதுவும் நடைபெறவில்லையே; காரணத்தைக் கூறுங்கள்!" என்று கேட்டாள்.

அரச தம்பதியினர் உரையாடியதைக் கீழே இருந்த எறும்புகள் செவிமடுத்தன. எறும்புகளிலொன்று மணிமானுக்கு ஓர் எச்சரிக்கையை விடுத்தது. "நாங்கள் கூறியவற்றை உனது மனைவியிடம் கூறுவாயானால் உடனடியாகவே உனது தலை சுக்குநூறாகிவெடித்து நீ இறந்து விடுவாய்!" என்றது.

எறும்புகளின் கூற்றை தன் மனைவியிடம் கூற வாயெடுத்த மணிமான் எறும்பு விடுத்த எச்சரிக்கையைக் கேட்டு தன் வாயை அடக்கிக் கொண்டான். இதனால் மணிக்கிசை ஆத்திரம் கொண்டாள். "நீங்கள் சிரித்த காரணத்தை என்னிடம் கூறாவிட்டால் நான் என் உயிரை விட்டு விடுவேன்!" என்று சொன்னாள். தன் மனைவியின் கூற்றைக் கேட்ட மணிமான் "உன்னுடைய வினாவுக்கு நான் விடையளிப்பதானால் என்னுடைய தலைவெடித்து நான் மரணமடைய நேரிடும்!" என்றான்.

விடாப்பிடியாக அவன் மனைவி மணிக்கிசை தன் கேள்விக்கு தன் கணவன் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்று வற்புறுத்தினாள்.

மணிக்கிசையின் வற்புறுத்தல் தாங்காது கணவன் மணிமான் "சரி நான் சிரித்த காரணத்தை உன்னிடம் கூறுகிறேன். ஆனால் இங்கு அரண்மனையில் அதனைக் கூற முடியாது. சுடுகாட்டில் நாளை விறகை அடுக்கி வைத்து அதன் மேல் அமர்ந்த வண்ணம் காரணத்தை நான் உன்னிடம் சொல்லுவேன். நான் கதையைக் கூறி முடித்ததும் என் தலை வெடித்து உயிர்பிரிந்து விடும். அப்போது விறகுக்குத் தீ மூட்டி என்னை எரித்துச் சாம்பலாக்கிவிடு!" என்று மணிமான் கூறினான். இவ்வாறு கணவன் கூறியதும் எந்த விதமான பதற்றமுமில்லாமல் மணிக்கிசை அதற்குச் சம்மதித்தாள்.

மணிமான் கூறியபடி அடுத்த நாள் மணிக்கிசை சுடுகாட்டுக்கு தன் காவலர்களை அனுப்பி விறகுகளால் ஒரு மேடை அமைக்கும்படி பணித்தாள். பின்னர் கணவன் மனைவி இருவரும் அச்சுடுகாட்டுக்குச் சென்றனர். மணிமான் விறகு மேடையின் மேல் ஏறி அமர்ந்த வண்ணம் எறும்புகளுக்கிடையில் இடம்பெற்ற உரையாடலை தன் மனைவியிடம் கூறுவதற்கு ஆயத்தமானான்.

இந்த வேளையில் விறகு மேடைக்கு அருகிலிருந்த ஒரு கிணற்றின் அருகில், ஆணும் பெண்ணுமாக இரு ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றில் பெண்ணாடு அக் கிணற்றின் உட்சுவரில் வளர்ந்திருந்த பசுமையான புற்களைப் பார்த்து, அந்தப் புல்லை தான் உண்பதற்கு பிடுங்கித் தரும்படி ஆண் ஆட்டிடம் கேட்டது. ஆனால் ஆண் ஆடு பெண் ஆட்டைப் பார்த்து, "அவ்வாறு நான் கிணற்று சுவரில் உள்ள புல்லைப் பிடுங்க எத்தனித்தால் கிணற்றில் வீழ்ந்து செத்துப் போவேனே, உன் பேச்சைக் கேட்டு இக் கிணற்றுள் வீழ்ந்து சாக எனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?" என்று கோபமாகக் கேட்டது.

ஆண் ஆடு இவ்வாறு கூறிய வார்த்தைகள் விறகுக் கட்டையின் மீது அமர்ந்திருந்த மணிமானுக்குக் கேட்டு விட்டது. அப்பொழுதுதான் பெண் புத்தியைக் கேட்டு தான் செய்யவிருந்த முட்டாள்தனமான காரியத்தை உணர்ந்தான், விறகு மேடையிலிருந்து கீழே குதித்தான்.

"நீயொரு மோசக்காரி. தீய குணம் படைத்தவள். கணவனின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று தெரிந்திருந்தும் எறும்புகளின் இரகசியத்தை உன்னிடம் கூறவேண்டும் என்று வற்புறுத்துகிறாய். கணவன் உயிரைப் பற்றிக் கவலைப்படாத உன்னோடு கூடி வாழ்வது

இராஜகுமாரன்

எனக்கு ஏற்புடையதல்ல. ஆகவே இப்போதிருந்து நீ என் மனைவியல்ல!" என்று கூறிவிட்டு மணிமான் வெளியேறினான்.

வேதாளம் இவ்வாறு தனது ஒன்பதாவது புதிர்க்கதையைக் கூறி முடித்து விட்டு, "விக்கிரமாதித்த மாமன்னனே! இந்தக் கதையில் யார் சிறந்தவர் என்று கூறுங்கள் பார்க்கலாம்!" என்றது.

விக்கிரமாதித்தன், "இந்தக் கதையில் பெண் புத்தியைக் கேட்டு தன்னுயிரை மாய்க்கத் துணியாத ஆண் ஆடே சிறந்த புத்திமான்!" என்று புதிரை விடுவித்தான்.

இந்தப் பதிலைக் கேட்ட வேதாளம் விக்கிரமாதித்தனின் தோளிலிருந்து பாய்ந்து ஓடிச் சென்று பழையபடி முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. விக்கிரமாதித்தனும் விடாப்பிடியாக வேதாளத்தை தொடர்ந்து சென்று முருங்கை மரத்தில் ஏறி அதனைத் தோளில் சுமந்தவாறு கீழிறங்கி நடக்கலானான்.

அப்போது வேதாளம் தனது பத்தாவது புதிர்க் கதையைச் சொல்லத் தொடங்கியது.

*(மன்னன் வருவான்...)*

## சர்தார்ஜி ஜோக்ஸ்



ஒரு விமானத்தில் 500 பேர் பயணம் செய்தனர். அப் ஏற்படுகின்றது.

உடனே விமான ஓட்டுநரான சர்தார்ஜி பயணிகளைப் பார்த்து,

"விமானத்தில் இருந்து யாராவது மூன்று பேர் கீழே குதித்தால் தான் விமானம் சரியாக இயங்கும். அனைவரும் பாதுகாப்பாகச் செல்லலாம். இல்லையென்றால் அனைவரும் உயிரிழக்க நேரிடும்!" என்று கூறினார்.

இதைக் கேட்ட பாதிரியார் ஒருவர் கீழே குதித்தார். அவரைத் தொடர்ந்து வயதான மூதாட்டி ஒருவரும் கீழே குதித்து விட்டார்.

மூன்றாவது நபராகக் கீழே குதிக்க பயணிகள் தயக்கம் காட்டினர். இதைப்பார்த்த விமான ஓட்டுநரான சர்தார்ஜி,

"அனைத்து உயிர்களையும் காப்பாற்ற நான் குதிக்கிறேன்!" என்று குதித்து விட்டார்.

சர்தார்ஜிக்களை முட்டாள்களாகச் சித்தரித்து ஜோக் அடித்து வருவதைக் கேள்விப்பட்ட சில சர்தார்ஜிகள் ஒன்று சேர்ந்து "தாங்கள் முட்டாள் இல்லை" என்பதை நிரூபிக்கத் திட்டமிட்டார்கள்.

அதற்காக சர்தார்ஜிகள் அனைவரின் சார்பாக ஒரு சர்தார்ஜியை மேடையேற்றிக் கேள்வி கேட்க வைத்துத் தம்மைப் புத்திசாலிகள் என்று நிரூபிக்க முடிவெடுத்தனர்.

அப்படியே ஒரு சர்தார்ஜியை மேடையேற்றினர். நடுவர் அந்த சர்தார்ஜிடம்,

"பத்தும் பத்தும் எத்தனை?" என்று கேட்டார்.

அதற்கு அந்த சர்தார்ஜி "முப்பது" என்றார்.

உடனே கீழேயிருந்த சர்தார்ஜிகள் கூட்டம்,

"அவனுக்கு இன்னொரு சந்தர்ப்பம் கொடுங்கள். அவன் சரியாகச் சொல்வான்!" என்றது.

உடனே நடுவர், "ஐந்தும் ஐந்தும் எத்தனை?" என்று கேட்டார்.

அதற்கு அந்த சர்தார்ஜி, "இருபது" என்றார்.

மறுபடியும் சர்தார்ஜிகள் கூட்டம், "அவனுக்கு இன்னும் ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்" என்று கூச்சலிட்டது.

நடுவரும் அந்த சர்தார்ஜியிடம் "ஒன்றும் ஒன்றும் எத்தனை?" என்று கேட்டார்.

அதற்கு அந்த சர்தார்ஜி, "இரண்டு" என்று பதிலளித்தார்.

கீழிருந்த சர்தார்ஜிகள் கூட்டம் "அவனுக்கு இன்னும் ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள் சரியாகச் சொல்வான்!" என்று மறுபடியும் கூச்சலிட்டது.



மரத்தளபாடவியாபாரம் செய்யும் மிக வசதியான இளம் சர்தார்ஜி ஒருவர் உலகைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டார்.

முதலில் இத்தாலிக்குச் சென்ற சர்தார்ஜி ரோம் நகரில் தங்கினார். ஒரு மாலை வேளையில் பார் ஒன்றுக்குள் சென்றார். அங்கே ஓர் அழகான பெண் இருந்தாள்.

சர்தார்ஜியைப் பார்த்து அப்பெண் சிரித்தாள். உடனே சர்தார்ஜியும் அவளைப்பார்த்துச் சிரிக்க, அவள் எழுந்து வந்து சர்தார்ஜிக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.


"ஹலோ!" என்று அவள் சர்தார்ஜியைப் பார்த்துக் கூற, ஆங்கிலம் தெரியாத சர்தார்ஜி பதிலுக்குச் சிரித்துக் கொண்டு தலையசைத்தார்.

ஒரு பேப்பரும் பேனாவும் எடுத்துக்கொண்ட சர்தார்ஜி, பேப்பரில் இரண்டு கோப்பைகளையும், மதுப் போத்தலையும் வரைந்து அப்பெண்ணிடம் காண்பித்தார். அப்பெண் சிரித்துக்கொண்டே "ஓகே" என்றாள்.

இரண்டு பேரும் சேர்ந்து மது அருந்திய பின் சர்தார்ஜி டாக்ஸி ஒன்றின் படம் வரைந்து காண்பித்தார். அப்பெண் சிரித்துக்கொண்டே டாக்ஸியை வரைவழைத்தாள்.

இருவரும் டாக்ஸியில் செல்லும் போது, அப்பெண் சர்தார்ஜியிடம் பேனாவையும் பேப்பரையும் வாங்கி, பேப்பரில் ஒரு கட்டிலையும் அதன் மேல் ஒரு மெத்தையையும் வரைந்து சர்தார்ஜியிடம் காண்பித்தாள்.

இதைப் பார்த்த சர்தார்ஜி குஷியாகிப்போய், "ஐயோ! நீ பெரிய புத்திசாலி. எப்படி நான் மரத்தளபாட வியாபாரம் செய்பவன் என்று கண்டுபிடித்தாய்?" என்று தன்னையும் மறந்து கத்தினார்.



Regd. as a News Paper at the G.P.O.(QD/63/NEWS/2000)





பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன.

106, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331




# சாகசம்





SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்மைக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


← வீதிகளில் கண்ணைத் திறந்து கொண்டு மெதுவாக நடந்து செல்லுகிறவர்களே, நிதானமிழந்தோ அல்லது தடுமாறியோ கீழே விழுந்து மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அமெரிக்க நெவேடா மாநிலத்திலுள்ள லாஸ்வேகஸ் ஹில்டன் ஃபிலேமிங்கோ ஹொட்டலின் இரு கோபுரங்களுக்கிடையில் கட்டப்பட்டுள்ள கயிற்றில் எதுவிதமான பிடிமானமும் இல்லாமல் நடந்து சென்று சாதனை புரிந்துள்ளார், ஜேகொர்ரேன் என்ற அமெரிக்கர். தரை மட்டத்திலிருந்து 182.88 மீற்றர் (600 அடி) உயரத்தில் தான் இவர் நடந்து சென்ற கயிறு கட்டப்பட்டிருந்தது.

1998 நவம்பர் 11ம் திகதியன்று இடம்பெற்ற இந்தச் சாகசத்தின் பிரதான அம்சம் என்னவென்றால், இவருடைய கண்கள் இரண்டும் எதையும் பார்க்க முடியாதவாறு மறைக்கப்பட்டிருந்தன என்பது தான். ◘

# அதிர்ச்சி



↘ காலம் போகும் போக்கைப் பார்த்தால் வேடிக்கை விநோதங்கள், விசித்திரங்கள் இனிமேல் எம்மை வியப்பிலாழ்த்தப் போவதில்லை என்றே தோன்றுகிறது. இரு தலை மனிதக் குழந்தைகள், ஈருடல் ஒரு தலை பிரசவங்கள் ஆகியவை பழைய கதைகளாகி விட்டன. இதோ அமெரிக்காவின் ஃபிலடெல்ஃபியா மாநிலத்தின் ஒர் ஒதுக்குப் புறமான பென்சலம் என்ற ஊரில் இரு தலைகளைக் கொண்ட பூனைக்குட்டி ஒன்று பிறந்திருக்கிறது. சந்ரா பியாட் என்ற இப்பூனைக் குட்டியின் உரிமையாளர் தனது உள்ளங்கையில் இக்குட்டியை பெருமையுடன் வைத்துக் கொண்டிருக்கிறார். 'இமேஜ்' என்று இக்குட்டிக்குப் பெயர் சூட்டியிருக்கிறார். இதன் இரு வாய்களிலும் தனித்தனியாகச் சிறியபுட்டி மூலம் பாலூட்ட வேண்டியுள்ளது. அதிசயமான இப்பூனைக் குட்டி சுகமாக வளர்ந்து வருகிறது.

ம. டதுவி
புவனேஸ், கட்டார்



# அபூர்வம்

↑ இங்கே வெற்றிப்புன்னகையுடன் ஷாம்பெயின் பானத்தை விசிறுபவர் டென்னிஸ் வீராங்கனை மார்ட்டினா ஹிங்கிஸ். டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதலிடத்தில் இருப்பவர் இவர்தான். தரத்தில் முதலிடத்தைப் பெற்றிருந்தாலும் இம்முறை விம்பிள்டன் போட்டியில் விளையாடியவிதத் திட்டமும், ஃபிரெஞ்ச் ஓப்பன் போட்டியில் மேரி பியர்ஸிடமும் அதிர்ச்சித்தோல்வியைத் தழுவினார்.

↓ மனித உடலைக் கீறிக் கிழித்து சத்திர சிகிச்சை மேற்கொள்ளுவதற்கு இப்போதெல்லாம் வயதெல்லை எதுவும் தேவையில்லை. தாயின் கருவிலிருக்கும் குழந்தைக்குக் கூட சத்திர சிகிச்சை செய்து குணப்படுத்தி சுகப் பிரசவத்துக்கு வழி வகுத்து விடுகிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

ஜேம்ஸ் ஹென்றி பிரெற் ஜூனியர் 1960ம் ஆண்டு நவம்பர் மாதம் 7ம் திகதியன்று தனது 111வது வயதில் அமெரிக்காவிலுள்ள டெக்ஸாஸ் மாநில ஹூஸ்டனில் தனது இடையில் ஏற்பட்ட ஒரு நோய்க்காக அறுவை சிகிச்சை செய்துகொண்டார். உலகிலேயே மிகவும் முதிர்ந்த வயதில் சத்திர சிகிச்சை செய்துகொண்டவர் என்ற சாதனைக்குரியவரானார்.

முன்பெல்லாம் சத்திரசிகிச்சைக்காக மிகக் கூரான கத்திகளைக் கொண்டு பாதிக்கப்பட்டுள்ள பகுதியைக் கீறுவார்கள். இப்போதெல்லாம் லேசர் எனும் ஒளிக்கீற்றின் துணைகொண்டு மிகமென்மையான முறையில் கீறி விடுகிறார்கள். கண்களில் ஏற்படும் புரையை நீக்குவதற்கும் லேசர் முறை தான் பயன்படுத்தப்படுகிறது. ◘



# ஆச்சரியம்


ஐஸ்வர்யா பிறந்தநாள்வாழ்த்து 23.07.2000



செல்வி திருநாவுக்கரசு வட்சனி

நவாலி வடக்கு மானிப்பாயை சேர்ந்த திரு திருமதி திருநாவுக்கரசு [illegible] தம்பதிகளின் மூத்த புத்திரி வட்சனி தனது 7வது பிறந்த நாளை 23.07.00 இல் [illegible] (பேபாப்) சூரிச் எனும் இடத்தில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்புள்ள அப்பா, அம்மா, தங்கை (தர்சினி) [illegible] வாழ்த்துகின்றனர்.